# உதயன்

சுடர் 30 | கதிர் 160 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 23. புதன்கிழமை 06.05.2015


வானிலை

கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம், மழை

## புதிய கடவுச்சீட்டு விரைவில்

யாழ்ப்பாணம், மே 6

புதிய கடவுச் சீட்டொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். அதற்கான முன்னோடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அறிமுகப்படுத்தப்படும் உத்தேச புதிய கடவுச் சீட்டில் உள்ளடக்கப்படவேண்டிய விவரங்கள் குறித்து ஆராய்ந்து, அமைச்சரவைப் பத்திரமொன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கை பூர்த்தியாவதற்கு நீண்ட நாள்கள் தேவைப்பட்லாம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கைவிரல் அடையாளத்தை பயன்படுத்துவது தொடர்பிலும் இதன்போது ஆலோசித்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார். (ற-4)

## புலிகளுடையது காட்டுச் சட்டம்: அவை எமக்குச் சரிவராது

### இப்படிக் கூறுகின்றார் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்

யாழ்ப்பாணம், மே 6

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட சட்டங்களை எல்லாம் இப்போது நடைமுறைப் படுத்த முடியாது. அவை காட்டுச்சட்டங்கள். – இவ்வாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுன்னாகம் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ், குற்றம் செய்தவர்களே மீண்டும் குற்றம் செய்கின்றனர். இது வாடிக்கையாக இங்கு நடந்து பக்.02

## அடாவடிக் குழுக்களுக்கு பெயர் வைத்து அவர்களை 'ஹீரோ' ஆக்கிவிடாதீர்கள்

### சுன்னாகம் பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 6

யாழ்.குடாநாட்டில் வாள்வெட்டுச் சம்பவங்கள், கோஷ்டி மோதல்களில் ஈடுபடும் கும்பல்களுக்கு ஒவ்வொரு பெயர் வைக்கப்படுகின்றன. அந்தப் பெயர்களைக் கொண்டு அவர்கள் 'ஹீரோயிசம்' காட்ட முற்படுகின்றனர். பக்.02

## பஸ் சடுதியாக பிரேக் போட்டதில் வீசப்பட்டவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், மே 6

வீதியின் குறுக்கே திடீரென மாடு ஓடியதால் சடுதியாக பஸ் பிரேக் பிடிக்கப்பட்டது. அதன்போது பஸ்ஸிலிருந்து தவறிக் கீழே விழுந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். வவுனியா கனகராயன் குளப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தென்பகுதியிலிருந்து தனியார் பஸ் ஒன்றில் யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வந்து திரும்பிச் சென்றபோதே அந்தச் சம்பவம் நடந்துள்ளது. தென்பகுதியைச் சேர்ந்த எஸ்.விக்கிரமசிங்க (வயது – 56) என்பவரே அவ்வாறு உயிரிழந்தார்.

வீதியின் குறுக்காக திடீரென மாடு ஒன்று சென்றுள்ளது. அதனால் பஸ் சாரதி திடீரென பிரேக் பிடித்துள்ளார். அதன்போதே விக்கிரமசிங்க பஸ்ஸிலிருந்து மிதிபலகையூடாகத் தூக்கி வீசப்பட்டார் என்று கூறப்பட்டது. குறித்த நபர் பஸ்ஸின் கதவுக்கு அருகில் மதிபலகையில் பயணித்துக் கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது. எனினும் பஸ்ஸில் அவர் முதலாவது இருக்கையில் அமர்ந்திருந்தார் என்றும் அதன்போது பிரேக் பிடிக்கப் பட்டதால் அவர் முன்னோக்கி வீசப்பட்டு பஸ்ஸினுள் அடிபட்டு பின்னர் நிலத்தில் விழுந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த பஸ் சாரதி பக்.02

# முன்னாள் அமைச்சர் கைது

## தொடர்கின்றது அதிரடி



கொழும்பு, மே 6

'லங்கா சதொச' நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறையின் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

அதன்பின்னர், கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் அவர் பக்.02

## குற்றவாளிகளை காட்டித் தந்தால் போட்டுக் கொடுக்கிறது பொலிஸ்

### சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது

யாழ்ப்பாணம், மே 6

குற்றவாளிகள் தொடர்பில் தகவல் தந்தால், யார் தகவல் தந்தார்கள் என்பதை பொலிஸாரே குற்றவாளிகளுக்குக் காட்டிக் கொடுத்து விடுகின்றனர். அதனாலேயே பொதுமக்களுக்கு பொலிஸார் மீது நம்பிக்கை இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. குற்றவாளிகள் தொடர்பில் தகவல் தெரிந்தாலும் பொலிஸாருக்குக் கூறுவதற்கு மக்கள் பயப்படுகின்றார்கள். – இவ்வாறு தெரிவித்தனர் யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் பக்.02

## 'எம் தலைவர் சாகவில்லை'

### கிளிநொச்சியில் துண்டுப்பிரசுரம்!

யாழ்ப்பாணம், மே 6

'எம் தலைவர் சாகவில்லை மீண்டும் வருவார் விழித்திருங்கள் மக்களே! கனடாவாழ் மறவன் மாறன்' என்று எழுதப்பட்டு விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடைய புகைப் படங்களை தாங்கிய துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் நேற்று கிளிநொச்சி வீதியில் எறியவிடப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. பக்.02

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

நெல்லியடி, மே 6

வல்வெட்டித்துறை நடைபெற்ற இந்திர விழாவில் தண்ணீர் பந்தலில் குளிர் பானங்களை வழங்கிக்கொண்டிருந் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் நடந்துள்ளது. வல்வெட்டித்துறை, நெடியகாட்டை சேர்ந்த சிவனடியார் நவரட்ணம் (வயது–58) என்பவரே பக்.02

## பஸிலின் மறியலை நீடித்தது நீதிமன்றம்

கொழும்பு, மே 6

'திவிநெகும' திணைக்களத்தில் நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் உள்ளிட்ட நால்வர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சின் முன்னாள் செயலாளர் நிஹால் ஜயதிலக்க, திவிநெகும திணைக்கள நிறைவேற்று அதிகாரி ஆர். ஏ. ஜே.ரணவக்க மற்றும் ஆர்.பி.பீ. திலகசிறி ஆகியோர் நேற்று கடுவெல நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட கடுவெல நீதிமன்ற நீதிவான் தம்மிக ஹேமபால நால்வரையும் எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். திவிநெகும திட்டத்தில் இடம்பெற்ற ஊழல்களுடன் இவர்களுக்குத் தொடர்புள்ளது என்ற சந்தேகத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட பஸில் உட்பட நால்வரும் கடந்த மாதம் 22 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திவிநெகும பக்.02

## வீதியோரமாக நின்றவரை மோதி சாகடித்தது 'கூலர்'

### கோண்டாவிலில் நேற்றுக் கோரச் சம்பவம்; மக்கள் கொதிப்பு

யாழ்ப்பாணம், மே 6

வீதியோரமாக நின்றிருந்தவரை வீதியில் வந்த கூலர் வாகனம் மோதித் தள்ளியது. கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு முன்பாக நேற்றுப் பக்.02



## வழிபாட்டுக்கு ராணுவம் முட்டுக்கட்டை பாதுகாப்பு வலய எல்லையில் வழிபாடு

யாழ்ப்பாணம், மே. 06

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தின் எல்லையில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு நடத்துவதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளனர். அதையடுத்து அங்கு திரண்ட பொதுமக்கள், பாதுகாப்பு வலய எல்லையில் வைத்து சிதறு தேங்காய் அடித்து, கற்பூரம் ஏற்றி வைரவரை வழிபட்ட சம்பவம் நேற்று வயாவிளானில் பக்.02



# முன்னாள் அமைச்சர் கைது

முற்படுத்தப்பட்டதையடுத்து, இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய உத்தரவிட்டுள்ளார். அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டனை இன்று குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் அவர் பணிப்புரை விடுத்தார்.

தனது அமைச்சின் கீழ் இயங்கிய 'லங்கா சதொச' நிறுவனத்தில் 5.2 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்து அதற்கான கொடுப்பனவுகளைச் செலுத்தவில்லை என்று முன்னாள் அமைச்சரும், குருநாகல் மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது குற்றச்சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த வாக்குமூலத்தை அடுத்து அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், நேற்றுக் காலை 10.15 மணியளவில் அவர் கொழும்பில் அமைந்துள்ள நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாகியிருந்தார்.

5 மணித்தியால விசாரணையின் பின்னர் 3.15 மணியளவில் அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் மாலை 4.30 மணியளவில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது மே 6 ஆம் திகதி (இன்று) வரை விளக்கமறியலில் வைக்குமாறும், குருநாகல் நீதிவான் நீதிமன் றத்தில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய உத்தர விட்டார்.

(ற-சி)

## பஸ்

கைதுசெய்யப்பட்டுப்பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,402)

## அடாவடி

அந்தக் கும்பல்களுக்கு அவ்வாறு பெயர் வைப்பதை நிறுத்த வேண்டும் என்று பொலிஸாரிடம் தெரிவித்தார் சுன்னாகம் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ்.

அண்மையில் தெல்லிப்பழைப் பிரதேசத்தில் வாள்வெட்டு – கோஷ்டி மோதல் தொடர்பில் ஒரு கும்பலைப் பொலிஸார் கைது செய்திருந் தனர். அந்தக் கும்பலை இப்போது 'மாத்தையா குரூப்' என்று கூறுகின்றனர். – என்றும் அவர் தெரிவித்தார்.

வாள்வெட்டு–கோஷ்டி மோதல் சம்பவம் தொடர்பில் ஒரு கும்பலைப் பிடிப்பதற்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் சென்றுள்ளனர். அப்போது அங்கு நின்றவர்கள் பயத்தில் "மாத்தையா எங்களிட்ட கத்தி இல்லை", "மாத்தையா எங்களிட்ட வாள் இல்லை" என்று கத்தியிருக்கிருக்கின்றனர். அதை வைத்துக் கொண்டு இறுதியில் அந்தக் கும்பலை 'மாத்தையா குரூப்' ஆக்கி விடடார்கள். இவ்வாறான கும்பல்களுக்கு பெயர்கள் வைத்து அழைப்பதால் அவர்கள் தம்மைக் 'ஹீரோக்களாக' நினைத்துக் கொண்டு வன்முறையில் ஈடுபடுகின்றனர். முதலில் இப்படியாக கும்பல்களுக்குப் பெயர் வைப்பதை நிறுத்த வேண்டும் – என்று அவர் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரிடம் கூறினார்.

குழுக்களுக்கு அவ்வாறான பெயர்களைப் பொலிஸார் வைப்பதில்லை என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். சமூகத்தினர்தான் இப்படியான பெயர்களை வைக்கின்றனர். அவற்றை ஊடகங்கள் பெருப்பித்து விடுகின்றன என்றும் அவர் கூறினார்.

(ற-5)

## குற்றவாளிகளை

கூட்டத்தில் கலந்துகொண்ட சிவில் சமூகத்தினர்.

இதே போன்றுதான் கிராம சேவகர்களும். அவர்களுக்குத் தமது கிராமத்தில் குற்றவாளிகள் யார் என்பது தெரியும். ஆனாலும், அதனை வெளிப்படுத்தினால் நாளை தமது நிலைமை என்னவாகும் என்ற பயத்தால், குற்றவாளிகளை பொலிஸாருக்கு தெரியப்படுத்த பயப்படுகின்றார்கள்.– என்றும் அவர்கள் கூறினார்கள்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம், யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் பிரதேச சபைத் தவிசாளர்கள், பிரதேச செயலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்கள் பொலிஸாருக்கும் குற்றவாளிகளுக்கும் தொடர்புகள் இருப்பதாகக் குற்றஞ்சாட்டினர்.

அதன்போது வடக்குமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸாருக்கும் குற்றவாளிகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பதை ஏற்றுக் கொண்டார். தென்பகுதியில் இவ்வாறான சம்பவம் நடந்ததை அவர் நினைவூட்டினார்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அவ்வாறான பொலிஸ் அதிகா ரிகள் குறைவு என்று குறிப்பிட்டார். பொலிஸ் அதிகாரிகளிடத்தில் தகவல் தெரிவிப்பதற்கு பயமாக இருந்தால், தனது கைத்தொலைபேசி இலக்கமான 0718591005க்குத் தொடர்பு கொள்ளுங்கள் என்றும் அவர் கூறினார்.

(ற-5)

## புலிகளுடையது

வருகின்றது. குற்றம் செய்தவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியதும், அவர்களை சட்டத்தரணிகள் வாதாடி பிணை எடுக்கின்றனர். இதன் போது பொலிஸார், சந்தேகநபருக்கு பிணை வழங்குவதற்கு நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவிக்க முடியும். அவ்வாறு ஆட்சேபனை தெரிவித்தால், சந்தேக நபர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பார். எனவே, பொலிஸார் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டு வெளியில் வரும் விடயத்தில், நீதிமன்றத்தில் தமது ஆட்சேபனையைத் தெரிவிக்க வேண்டும்.

ஒரு நபரே, மீண்டும் மீண்டும் அதே குற்றத்துக்காக சிறைக்குச் சென்று கொண்டிருக்கின்றார். அவர்களுக்கான தண்டனை உடனடியாக வழங்கப்படாததும், தண்டனை குறைவாக இருப்பதும் அவர்கள் மீளவும் குற்றம் செய்வதற்கு ஏதுவாகின்றது.

கடந்த காலங்களில் – தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலங்களில், குற்றம் செய்தவர்கள் சார்பாக சட்டத்தரணிகள் எவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவும் மாட்டார்கள். அவர்களைப் பிணையில் எடுக்கவும் மாட்டார்கள். அதே போன்று தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதற்குப்பதிலளித்த, வடக்குமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க, சந்தேக நபர் சட்டத்தரணியை அணுகி அவரது உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கைச் சட்டத்தில் இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் காட்டுச் சட்டங்களின்படி செயற்பட முடியாது – என்றார்.

(ற-5)

## 'எம் தலைவர்

கிளிநொச்சி உதயநகர் பகுதியிலேயே நேற்று அதிகாலை இந்த துண்டு பிரசுரங்கள் வீதிகளில் கிடந்துள்ளன.

அவற்றை அப்பகுதியில் அதிகாலையில் வேலைகளுக்கு, தேவைகளுக்காகச் சென்ற பலர் அவதானித்துள்ளனர். இந்த சுவரொட்டிகள் பற்றிய தகவல்களை அறிந்த இராணுவத்தினர், அப்பகுதிக்கு சென்று அங்கிருந்து அவற்றை உடனடியாக அகற்றியுள்ளனர். அதனால் சிறிது நேரம் அந்தப் பகுதி பரபரப்பாக காணப்பட்டது என்று மக்கள் கூறினர். (ற-21)

## மின்சாரம்

உயிரிழந்தவராவார்.

வல்வெட்டித்துறையில் இந்திர விழா ஒவ்வொரு சித்திரா பவுர்ணமியன்றும் நடைபெறும். அதற்காக குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் செல்வார்கள். அவர்களின் தண்ணீர் தாகத்தை தீர்க்கும் பொருட்டு அமைக்கப்பட்டிருந்த தண்ணீர் பந்தல் ஒன்றில் குளிர் பானம் கொடுத்துக் கொண்டிருந்தவரே மின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். நிலத்தில் இருந்த வயர் ஒன்றால் மின் கசிந்துகொண்டிருந்தபோது அவர் அதன்மீது காலை வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்குச் சென்ற வல்வெட்டித்துறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம்பிரேதபரிசோதனையின்பொருட்டு ஊறணிவைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்டது.

(ற-109)

## வீதியோரமாக

பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் சீனியர் ஞானசேகரம் (வயது – 53) உடல் நசிந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

வாகனம்வேகக்கட்டுப்பாட்டைஇழந்ததனால் விபத்து இடம்பெற்றிருக்கலாம் என ஆரம்ப விசாரணைகளில் தெரிவதாகப் பொலிஸார் கூறினர். வாகனச் சாரதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விபத்து நடந்ததை அடுத்து அங்கு கூடிய பொதுமக்கள், வாகனச் சாரதிகளின் கண்மண் தெரியாத வேகம் குறித்து ஆத்திரமடைந்தனர். அத்தோடு விபத்தில் சிக்கியவரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்புவதற்கு துரித நடவடிக்கை எடுக்காத பொலிஸார், விபத்தில் சிக்கிய வாகனத்தை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்வதில் மட்டும் விரைந்து செயற்பட்டனர் என்ற குற்றஞ்சாட்டிய பொதுமக்கள் பொலிஸாருக்கு எதிராகக் கொந்தளித்தனர். வீதிகளில் கற்களை அடுக்கி போக்குவரத்தைத் தடுத்தனர். பொலிஸார் வாகனத்தை எடுத்துச் செல்ல முடியாதவாறு வீதியின் குறுக்கே கூடி இடைஞ்சல்களை ஏற்படுத்தினர்.

இதனை அடுத்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

சம்பவத்தில் உயிரிழந்த ஞானசேகரம் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்தவர். அவரை மோதிய வாகனம் பின்னர் அருகிலிருந்த மின் கம்பத்தை மோதி துண்டு துண்டாக முறித்துத் தள்ளியபடி தனியார் காணி ஒன்றினுள் சென்றே நின்றுள்ளது. ஞானசேகரத்தின் உடல் உடற்கூற்றுச் சோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. கோப்பாய் பொலிஸார் விபத்துக் குறித்த விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(உ–4,86,106)

## வழிபாட்டுக்கு

நடந்துள்ளது.

வயாவிளான் மத்திய கல்லூரிக்கு அருகில், பலாலி இராணுவக் குடியிருப்பு என்று பொறிக்கப்பட்ட வளைவில் இருந்து உள்நோக்கி சுமார் 200 மீற்றர் தூரத்துக்குள் வயாவிளான் ஞானவைரவர் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதற்கு கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. கடைசியாக 2005 ஆம் ஆண்டு ஒருதடவை மாத்திரம் மக்கள் வழிபாட்டுக்குச் சென்று திரும்பியிருந்தனர்.

வருடாந்தம் மே மாதத்தில், வைரவருக்கு மடை சாத்துவது வழக்கமாகும். இதுவரை காலமும் ஆலய வழிபாட்டுக்குச் செல்ல எத்தனிக்காத மக்கள், தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் ஆலயத்திற்கு தடையின்றிச் சென்று வழிபாடு நடத்த முடியும் என்று எண்ணியுள்ளனர். அவர்கள் வயாவிளான்மத்தியகல்லூரியுடன்அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலய எல்லைப் பகுதிக்குச் சென்றனர்.

அங்கேயிருந்த இராணுவத்தினர் மக்களை வழிபாடு நடத்துவதற்குச் செல்ல அனுமதிக்கவில்லை. வாசலிருந்து கண்ணுக்கெட்டிய – சுமார் 200 மீற்றர் தூரத்திலேயே ஆலயம் அமைந்துள்ளது என்றும், அதனைச் சென்று வழிபட்ட பின்னர் திரும்பிவிடுவோம் என்று மக்கள் தெரிவித்த போதும் இராணுவத்தினர் அதற்கு சம்மதிக்கவில்லை. இராணுவ மேலதிகாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி சந்திக்க வருமாறு பொதுமக்கள் கோரினர். அவர்கள் சந்திக்க வருவதாகத் தெரிவித்து விட்டு பின்னர் வரவில்லை. பொதுமக்கள் அதன் பின்னர் பல முறை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அவர்கள் பதிலளிக்கவில்லை. இதற்கிடையில் பொதுமக்கள், வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும் விடயத்தை தெரியப்படுத்தினர்.

அவர்கள் இருவரும் அங்கு சென்று பேசிய போதும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. இறுதியில் ஆத்திரமடைந்த மக்கள், தாம் வழிபாட்டுக்காக கொண்டு வந்த தேங்காய்களை முகாம் வாசலில் – உயர் பாதுகாப்பு வலய வாசலில் சிதறு தேங்காயாக அடித்தனர். அத்துடன் கற்பூரமும் கொளுத்தினர்.

இராணுவத்தினர் இவ்வாறு செய்ய வேண்டாம் என்று கேட்ட போதும் அதனையும் மீறி மக்கள், கற்பூரம் கொழுத்தி, சிதறு தேங்காய் அடித்தனர். இதன் பின்னர், எப்படியாவது இந்த மாதத்தினுள் ஆலயத்திற்கு சென்று வழிபாடு செய்ய ஏற்பாடு செய்து தருமாறு மக்கள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தனர். அதன் பின்னர் கலைந்து சென்றனர்.

இந்த விடயம் தொடர்பில், வடக்கு மாகாண முதலமைச்சர் ஊடாக இராணுவத்தினரிடம் அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார். (ற-5)

## பஸிலின்

திணைக்களத்தில் இடம்பெற்ற 70 மில்லியன் ரூபா நிதி மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் பஸிலுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியைத் தொடர்ந்து ஜனவரி 11 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறி அமெரிக்கா சென்ற முன்னாள் அமைச்சர் பஸில், 100 நாள்கள் கடந்த நிலையில் ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டுக்கு வந்திருந்தார்.

22ஆம் திகதி காலை 10.50 மணியளவில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பணியகத்தில் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் அவர் முன்னிலையாகியிருந்தார்.

அவரிடமும் அவரது அஅமைச்சின் முன்னாள் செய லாளர் நிஹால் ஜயதி லக்க, திவிநெகும திணைக்கள நிறைவேற்று அதி காரி ஆர்.ஏ.ஜே.ரண வக்க மற்றும் ஆர்.பி.பீ. திலகசிறி ஆகியோரிடம் இவ்விசாரணையை நிதி மோசடி பொலிஸ் பிரிவினர் மேற் கொண்டிருந்தனர். 11 மணிமுதல் 5 மணிவரை மேற்கொள்ளப்பட்ட 6 மணித்தியால விசாரணைகளின் பின்னர் பஸில் உட்பட ஏனைய மூவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன் இவர்கள் கடுவலை நீதிவான் முன்னிலையில் அன்றைய தினமே முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது பஸில் தரப்பில் கோரப்பட்ட பிணை மறுக்கப்பட்டதுடன், சந்தேக நபர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அவர்கள் மே 5ஆம் திகதிவரை வெலிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

இதேவேளை, இவர்களது உடல் நலம் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்தியதுடன் நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள முக்கிய அமர்வுகளிலும் பஸில் பங்கேற்பதற்கான அனுமதியையும் நீதிமன்றம் வழங்கியிருந்தது.

இந்நிலையில், மருத்துவ உதவி கோரலுக்கமைய இம்மூவரும் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் பஸில் ராஜபக்ஷ தன்னை தேசிய வைத்தியசாலை கட்டணம் செலுத்தும் விடுதிக்கு மாற்றுமாறு சிறைச்சாலை அதிகாரசபையிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதற்கமைய நான்கு பேரும் கொழும்பு தேசியவைத்தியசாலையின்கட்டணம் செலுத்தும் பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சைபெற்று வந்தனர்.

இந்நிலையில், சந்தேக நபர்கள் நேற்று காலை கடுவெல நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது விதிக்கப்பட்டிருந்த விளக்குமறியல் மேலும் இரு தினங்களுக்கு நீடிப்பதாகத் தெரிவித்த நீதிவான் எதிர்வரும் மே 7 ஆம் திகதிவரை விளக்குமறிய லில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்ததார். இதன்போது பஸில் தரப்பு சட்டத்தரணி பஸிலை தொடர்ந்தும் தேசிய வைத்தியசாலையில் கட்டணப் பிரிவில் சிகிச்சை பெறுவதற்கான அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் இதற்கு மறுப்புத் தெரிவித்த நீதவான் தம்மிக்க ஹேமபால வெலிக்கடை சிறைச்சாலையில் சிகிச்சை வழங்குமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

(ற-சி)

# குடிதண்ணீர் போத்தலில் சுகாதார அமைச்சின் பதிவிலக்கம் அவசியம்

யாழ்ப்பாணம், மே 6
நீங்கள் வாங்கும் குடிதண்ணீர் போத்தல்களில் சுகாதார அமைச்சின் பதிவிலக்கம் இல்லாவிட்டால் அவற்றை வாங்காதீர்கள் என்று அறிவுறுத்தியுள்ளார் யாழ்.வணிக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினருக்கும் யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் உள்ளிட்ட குழுவினருக்குமிடையே நேற்று கலந்துரையாடல் ஒன்று யாழ்.வர்த்தக சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதன்பின்னர் அவர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் பதிவு பெற்றமைக்கான பதிவு இலக்கம் பொறிக்கப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல்களை மாத்திரம் நீங்கள் கொள்வனவு செய்யுங்கள். அது மட்டுமன்றி தண்ணீர்ப் போத்தல்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் பெயர் அதில் பொறிக்கப்படவில்லையாயின் அதனையும் வாங்க வேண்டாம். உற்பத்தித் திகதி இல்லாத போத்தல்களையும் கொள்வனவு செய்ய வேண்டாம். அதனை வர்த்தகர்களும் இங்குள்ள விற்பனைப் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். – என்றும் அவர் கூறினார். (ற–4)

## பட்டப் பகலில் வீடு உடைத்து பொருள்கள் திருட்டு

வடமராட்சி, மே 6
பகல் வேளையில் துன்னாலை தாமரைக் குளத்தடியில் உள்ள வீடொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த 12 ஆயிரம் ரூபா பணம், நீர் இறைக்கும் இயந்திரம், தொலைக்காட்சிப் பெட்டி என்பன திருடப்பட்டுள்ளன.
இதுகுறித்து நெல்லியடிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.
சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்தனர். மோப்ப நாய்கள் கொண்டுவரப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.
இது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற–173)

## சிவநேசன் நாளை சத்தியப் பிரமாணம்

முல்லைத்தீவு, மே 6
வடக்கு மாகாண சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள கந்தையா சிவநேசன் நாளை சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார். அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் முன்னிலையில் அவர் காலை சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
வடக்கு மாகாண சபை உறுப்பினரான வீ.கனகசுந்தரசுவாமியின் வெற்றிடத்துக்கு புளொட் அமைப்பைச் சேர்ந்த கந்தையா சிவநேசன் (பவன்) அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தார். (ற–102)

### தனியார் கல்வி நிலையங்கள் அருகே

# கூட்டமாக நிற்கும் இளைஞர்கள் இனிக் கைதாவர்

### வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே.6
தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கும் போதும், முடியும் போதும் அந்தச் சூழலில் 5 பேருக்கு மேல் இளைஞர் – யுவதிகள் கூட்டமாக நிற்கக் கூடாது. அதனையும் மீறி யாராவது நிற்பார்களாக இருந்தால் அவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள். – இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க.
யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகளால், மாணவர்களது ஒழுக்கம் தொடர்பில் பல்வேறு விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டது.
மாணவர்கள் ஒழுக்கமற்று இருப்பதற்கு போதைப் பொருள் பாவனை பிரதான காரணமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. மாணவர்களை இலக்கு வைத்து தொடர்ச்சியாகப் போதைப் பொருள் விநியோகம் இடம்பெறுகின்றது. பிரபல பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள்களை வழங்குகின்றனர்.
யாழ்.மாவட்டத்தில் மாணவர்களுக்கு எங்கெங்கு வைத்து போதைப் பொருள் வழங்குகின்றனர் என்ற பட்டியலும் கூட்டத்தில் வைத்துத் தெரியப்படுத்தப்பட்டது. போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும் நிலை தொடர்பிலும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.
யாழ்ப்பாண பிரதேச செயலாளரால், யாழ்.நகரில் போதைப் பொருள் பாவனை தொடர்பில் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தெரியப்படுத்தப்பட்டமையையும் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.
அதையடுத்து யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியை, குறித்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இல்லாவிட்டால் வேறு ஒருவரிடம் இந்தப் பொறுப்பைக் கொடுக்க வேண்டி வரும் என்றும் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரித்தார்.
அத்துடன் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடங்கும் போதும், முடியும் போதும் கூட்டமாக கூடி நிற்பவர்கள் போதைப் பொருள் விநியோக நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். அவ்வாறு 5 பேர் அல்லது அதற்கு மேல் கூடி நின்றால் அவர்கள் கைது செய்யப் பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படு வார்கள் என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார். (ற–5)

## ஹலோ ட்ரஸ்ட் பணியாளர்கள் பொலிஸில் முறைப்பாடு



யாழ்ப்பாணம், மே 6
ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினால் மிதிவெடி அகற்றும் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட 450 பணியாளர்கள் நேற்று ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்துக்குஎதிராககிளிநொச்சிபொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.
ஒப்பந்த காலம் முடியும் வரை அனைத்து பணியாளர்களையும் வேலையில் அமர்த்துங்கள் என்று கோரி ஹலோ ட்ரஸ்ட் பணியாளர்கள் 450 பேர் மூன்றாவது தடவையாக நேற்றுமுன்தினமும் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் முன்பாகவே அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர்.
இந்த நிலையில் பணியில் இருந்து இடைநிறுத்தப்படாத பணியாளர்களுக்கு கலந்துரையாடல் நேற்று இடம்பெற உள்ளதாகவும் அவர்களை தவறாது சமுகமளிக்குமாறும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினர் தகவல் வழங்கியிருந்தனர்.
அதன்போது இடைநிறுத்தப்பட்ட பணியாளர்களும் நிறுவனத்துக்குச் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அங்கு முடிவு கிடைக்காத நிலையில் தமக்கு முடிவு கூறாது ஏனையவர்களை பணியில் அமர்த்த அனுமதிக்கக் கூடாது என்று கோரி அவர்கள் நேற்றுமாலை பொலிஸில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர். (ற–21)

## கன்ரர் - ஓட்டோ விபத்து ஒருவருக்குப் படுகாயம்



வவுனியா, மே 6
வவுனியா ஏ – 9 வீதியில் சாந்தசோலைப்பகுதியில் ஓட்டோ மற்றும் கன்ரர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோவைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் நடந்துள்ளது. பகிரதன் (வயது–63) என்பவரே படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நேற்று மாலை கடும் மழை பெய்து ஓய்ந்த சமயம் வீட்டுக்குப் பயன்படுத்தும் சீற் ஏற்றப்பட்ட கன்ரர் வாகனம் முன்னே சென்ற ஓட்டோவை முந்திச்செல்ல முற்பட்டபோது விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ற)

# அழகுசாதன பொருள்கள் விற்பதற்கு முறையான பதிவு இனிமேல் அவசியம்

### யாழ். வணிக சங்கத் தலைவர் ஜெயசேகரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 6
யாழ்.மாவட்டத்தில் ஒப்பனை மற்றும் அழகுசாதனப் பொருள்களை உரிய பதிவின்றி இனிமேல் விற்பனை செய்ய முடியாது என்று யாழ். வணிக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.
அவ்வாறு விற்பனை செய்யப்படுவதுகண்டுபிடிக்கப்படுமானால்குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பொருள்களையே இனிமேல் விற்பனை செய்ய வேண்டும். அது கட்டாயம். – என்றும் அவர் கூறினார்.
யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினருக்கும் யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் உள்ளிட்ட குழுவினருக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று யாழ்.வர்த்தக சங்க மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் ஒப்பனை மற்றும் அழகு சாதனப் பொருள்களை உரிய பதிவின்றி அதாவது சட்டவிரோதமாகப் பெற்று விற்பனை செய்வது உட்பட்ட காரணங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் நோய்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
குறித்த பொருள்களின் உற்பத்திப் பதிவு இலக்கம், உற்பத்தி நிறுவனம் உள்ளிட்ட விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பனை மற்றும் அழகுசாதனப் பொருள்களை மாத்திரம் பெற்று விற்பனை செய்ய வேண்டும். ஏனையவை உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கக்கூடியவை. நோய்க் காரணிகளை ஏற்படுத்த வழிவகுப்பவை. அவ்வாறான காரணங்களால்தான் சில வகை பொருள்கள் இங்கு அங்கீகரிக்கப்படவில்லை.
அத்தகைய பொருள்கள் இங்கு விற்பனை செய்யப்படுமாயின் அவற்றை விற்கும் நிறுவனம், வியாபார நிலையங்கள் உள்ளிட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். என்னென்ன பொருள்களை இங்கு விற்பனை செய்ய முடியும் என்பதனை வர்த்தக சங்கத்திலோ அல்லது அரச வர்த்தமானியில் பார்வையிட முடியும்.
யாழ்ப்பாணம் திறந்த பொருளாதாரமாக திறந்த சந்தையாக உள்ளது. அதனால் தரமான, தரமற்ற பொருள்கள் இங்கு கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே வாங்கும் பொருள்களை உரியமுறையில் கவனித்து உறுதிப்படுத்தி வாங்குங்கள். அது மட்டுமன்றி வெளிநாட்டிலிருந்து வரும் பொதிகளில் வரும் இனிப்புப் பண்டங்கள், சில மென்பானங்கள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறியுள்ளார். அதனால் உடல் நலத்துக்குக் கேடு என்றும் அறிவுறுத்தியுள்ளார்.
எனவே பொருள்களை வாங்கும் போது அவற்றின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். – என்றும் அவர் தெரிவித்தார். (ற–4)

# தாகத்துக்குத் தண்ணீரில்லை

## அண்மையில் மீள்குடியமர்ந்த வலி.வடக்கு, வலி.கிழக்கு மக்கள் கவலை

கொழும்புத்துறை, மே 6
அண்மையில் மீளக்குடியமர்வுக்கு அனுமதி வழங்கப்பட்ட வலி. வடக்கு, வலி.கிழக்குப் பகுதியில் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வேறு தேவைகளுக்கான தண்ணீரைப் பெறுவதும் பெரும் சிரமமாக உள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.
அந்தப் பகுதிகளில் உள்ள கிணறுகள் 25 ஆண்டுகளாகப் பராமரிப்பின்றிக் காணப்படுகின்றன. பெரும்பாலானவை சேதமடைந்துள்ளன. தற்போது தூர இடங்களில் இருந்து செல்லும் மக்கள் அங்குள்ள தமது காணிகளைத் துப்புரவு செய்து வருகின்றனர். அவர்கள் நீர் இறைக்கும் இயந்திரங்களை ஏற்பாடு செய்து கிணறுகளை உடனடியாகச் சுத்தம் செய்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.
அதனால் உடனடியாகக் கிணறுகளில் இருந்து குடி தண்ணீரைப் பெற முடியாத நிலையில் குடிதண்ணீருக்காக அலைய வேண்டியுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர். இதுவிடயத்தில் பிரதேச சபைகள் கவனமெடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.



அதேவேளை, இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த கிராம அலுவலர் ஒருவர், முதற்கட்டமாக ஒவ்வொரு கிராமத்திலும் தெரிவு செய்யப்பட்ட ஒரு கிணற்றைத் துப்புரவு செய்து இறைத்துப் பாவனைக்கு விட பிரதேச சபைகள் தீர்மானித்துள்ளன.– என்று தெரிவித்தார்.(ற–135)

## போதையில் மனைவியை தாக்கியவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 6
மனைவி, பிள்ளைகளைத் துன்புறுத்திய குடும்பஸ்தர் ஒருவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
சந்தேகநபரை சிறைச்சாலை அதி காரிகளின் மேற்பார்வையில் தெல்லிப்பழை மனநல வைத்தியசாலையில் சேர்ப்பித்து அந்த வைத்திய அறிக்கையை எதிர்வரும் வழக்குத் தவணையில் சமர்ப்பிக்குமாறும் பதில் நீதிவான் பொலிஸாருக்குப் பணித்துள்ளார்.
துன்னாலை, வேம்படிச் சந்தியைச் சேர்ந்த குறித்த நபர் தினமும் மது போதையில் வீடு சென்று மனைவியைத் தாக்குவதுடன், பிள்ளைகளையும் துன்புறுத்துவதை வழமையாகக் கொண்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. பிள்ளைகளைப் பாடசாலை செல்லவிடாது தடுத்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.
இதுகுறித்து மனைவி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தமைக்கு அமைவாகப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குறித்த நபர் நீதிவான் வாசஸ்தலத்தில் முற்படுத்தப்பட்டார்.என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)



## திடீரென வீசிய சுழல்காற்று நாசமாக்கியது ஈவினையை

### பயன்தரு மரங்கள் முறிந்தன: வீடுகளின் கூரைகள் பறந்தன



வலி.வடக்கு, மே 6
நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பகுதியில் திடீரெனப் பெரும் சுழல்காற்று வீசியது. சில நிமிடங்கள் வீசிய சுழல்காற்றால் வாழைகள் உட்படப் பனை, தென்னை எனப் பல பயன்தரு மரங்கள் முறிந்தன. வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.



கூரைகள் தூக்கி வீசப்பட்டும், மரங்கள் முறிந்து விழுந்தும் மூன்று வீடுகள் சேதத்துக்குள்ளாகியுள்ளன என்று தெரியவருகின்றது. சுன்னாகம் பொலிஸார் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சென்று பார்த்ததுடன் முறைப்பாடுகளையும் பதிவு செய்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அன்றைய தினம் பிற்பகல் பெரும் முழக்கத்துடனும் கடும் காற்றுடனும் மழை பெய்திருந்தது. அதன்போது சுன்னாகம் பகுதியில் மின்கம்பி அறுந்து விழுந்து நீரில் மின்சாரம் பாய்ந்ததால் தந்தை மகன் ஆகியோர் மின்தாக்கி உயிரிழந்திருந்தனர். (ற–86)

## மன்னார் ஆயர் நலம் பெற வேண்டி இந்து குருமார் பேரவை பிரார்த்தனை

மன்னார், மே 6
மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை விரைவில் குணமடைய வேண்டும் என்று வேண்டி பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவை தெரிவித்துள்ளது.
இதுகுறித்து பேரவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–
மன்னார் மறைமாவட்ட ஆயர் நோய்வாய்ப்பட்டதை அறிந்து மிகவும் வேதனையடைந்தோம். அவர் விரைவில் குணமடைந்து பணி தொடர வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்புமாகும்.
அவர் பூரண நலம் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். – என்றுள்ளது. (ற–56)

**திடீர் சுகவீனத்தால் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட மன்னார் ஆயரின் உடல் நிலை முன்னேற்றம் கண்டுள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது.**
**அவரது உடல் நலம் அபாய கட்டத்தில் இல்லை என்றும் அவரது தலையில் ஏற்பட்டுள்ள உள்ளக இரத்தக்கசிவை அகற்றுவதற்காக நரம்பியல் சிகிச்சைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

## உண்டியலில் இருந்த பணத்தை திருட வந்த இளைஞரே கொலையாளி?

### வவுனியா 10 வயதுச் சிறுவனின் சாவில் துலங்கியது மர்மம்: 18 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரின் பிடியில்



**கடந்த மாதம் 9 ஆம் திகதி வவுனியா, நெளுக்குளம், சாம்பல் தோட்டம் பகுதியில் 10 வயதுச் சிறுவன் ஒருவன் கழுத்தில் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டான்.**
**வீட்டில் சிறுவனைக் காணவில்லை என்று தாயார் தேடியபோது சிறுவன் வீட்டின் பின்புறம் கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டான் என்று கூறப்பட்டது.**
**குறித்த சிறுவன் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார் என்றும், பாடசாலை வகுப்புகளை நிறைவு செய்து வீட்டுக்கு வந்த பின்னர் தாய் அவருக்கு உணவு வழங்கிவிட்டு அருகில் உள்ள வீடொன்றுக்குத் தனது 6 வயதுக் குழந்தையுடன் சென்றுவிட்டார் என்றும் அந்தச் சமயமே இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.**

வவுனியா, மே 6
வவுனியா, சாம்பல்தோட்டம் பகுதியில் 10 வயதுச் சிறுவன் ஒருவன் கழுத்தில் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் 18 வயதுயடைய சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடந்த 9 ஆம் திகதி சந்திரசேகரன் சஞ்சய் என்ற சிறுவன் அவனது வீட்டின் பின்புறம் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டான். அந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.
பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சண் அபேயவர்த்தன தலைமையில் பொலிஸ் சார்ஜன்களான ஜெயசிங்க, ரத்நாயக்க, ஜேசு தாஸ் பொலிஸ் கொன்ஸ்ரபிள்களான ஜெயப்பிரகாஸ், திஸாநாயக்க ஆகியோர் கொண்ட பொலிஸ் குழு பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்தது. பலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.
அவற்றின் அடிப்படையில் கொலை செய்யப்பட்ட சிறுவனின் உறவினரான 18 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் சிறுவனின் வீட்டுக்கு அயலில் வசிப்பவர் என்று கூறப்படுகின்றது.
"சிறுவனின் வீட்டுக்கு அயலில் வசிக்கும் 18 வயதான இளைஞர் ஒருவரை இந்தக் கொலை தொடர்பில் கைது செய்துள்ளோம். இவர் சிறுவனின் உறவினர்."– என்று பொலிஸார் தெரிவித்தனர்.
"சிறுவனின் வீட்டில் இருந்த உண்டியலில் இருந்த பணத்தை இளைஞர் திருடச் சென்றுள்ளார். அதைக் கண்ட சிறுவன் அதை வீட்டாரிடம் கூறப்போவதாகக் கூறியுள்ளார். அதனால் அங்கிருந்த கத்தி ஒன்றால் சிறுவனின் கழுத்தை அறுத்துள்ளார் இளைஞர். அதனால் சிறுவன் உயிரிழந்துள்ளான்."– என்று பொலிஸார் தெரிவித்தனர். கைதான இளைஞர் இன்றை ஒப்புக்கொண்டுள்ளார் என்று தெரிய வருகின்றது.
அதேவேளை, சிறுவனின் கொலைக்கும் அவரது தாய்க்கும் தொடர்புண்டு என்று சில ஊடகங்களில் வெளியான தக்வல்களை பொலிஸார் மறுத்தனர். "இந்தக் கொலைக்கும் கொல்லப்பட்ட சிறுவனின் தாய்க்கும் எந்தத் தொடர்பும் இல்லை." என்று அவர்கள் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட இளைஞர் விரைவில் நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர். அதற்கான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் தெரிவித்தனர். (ற–4,21,402,421)

## ஓடிவந்த மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பற்றி கருகியது

### செலுத்தி வந்தவர் சாதுரியமாக பாய்ந்து தப்பினார்



வலி.வடக்கு, மே 6
புன்னாலைக்கட்டுவன், ஈவினை தெற்கு சந்தியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்து கருகியது. நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
பிற்பகல் ஒன்றரை மணியளவில் வீதியில் சென்றுகொண்டிருந்த குறித்த மோட்டார் சைக்கிளின் எண்ணெய் தாங்கியில் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டுள்ளது. மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் சாதுரியமாகப் பாய்ந்து தீக்காயங்களின்றித் தப்பிக் கொண்டுள்ளார்.
அந்தச் சமயம் கடும் இடி, மின்னலுடன் மழை பெய்துகொண்டிருந்த போதும் தீ அணையாது எரிந்து மோட்டார் சைக்கிள் முற்றாகக் கருகியது என்று கூறப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற–86)

# பெயருக்காக வாழும் தலைவன் அல்ல நான்

## கூறுகிறார் மஹிந்த



கொழும்பு, மே 06

நாட்டின்நன்மைக்காகவும்வளர்ச்சிக்காகவும் செயற்படும் தலைவர் கோபம், வைராக்கியத்துடன் செயற்பட கூடாதென முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெலியத்த பிரதேச விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நம் நாட்டின் எதிர்கால சந்ததிகளுக்கு நன்மையான வழிகளைக் கற்பிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

பௌர்ணமி தினத்திலும் சிலர் விகாரைக்குசெல்வதில்லை. புனிதஸ்தலங்களுக்கு நாங்களே செல்வதில்லை என்றால் நமது பிள்ளைகளும் செல்லமாட்டார்கள்.இந்நிலையினை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

நம் நாட்டின் அபிவிருத்தி திடீரென வீழ்ச்சியை கண்டுள்ளது.இதற்கான மாற்று வழியையும் நாம் யோசிக்க வேண்டும்.

இதேவேளை, மஹிந்தோதய என்ற பெயர் பலகையை அகற்றிவிட்டால் மாத்திரம் பொது மக்கள் மனதில் இருந்து மஹிந்த என்ற எனது பெயரை அழித்துவிட முடியாது. நான் பெயருக்காக மாத்திரம் செயற்படுபவன் இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

# உள்ளூராட்சி அமைப்புக்களை ஜனாதிபதி கலைக்க முடியாது

## கூறுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, மே 06

ஜனாதிபதியினால் உள்ளூராட்சிச் சபைகளைக்கலைக்க முடியாது என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மற்றும் உள்ளூராட்சிச் சபை அமைச்சருக்கு இதனைக்கலைப்பதற்குஅதிகாரமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சிச் சபைச் சட்டத்தின் 154 ஆம் சரத்தில் இது தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சிச்சபைகளுக்குப்பொறுப்பான மாகாண அமைச்சரினாலேயே உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபைகள் மாகாண சபைகளுக்குச் சொந்தமானவை எனவும், மாகாணசபையின் அமைச்சரினால் இது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளதுடன், மேல் மாகாண சபையின் முதலமைச்சரே இது தொடர்பில் ஜனாதிபதிக்கு முதன் முதலாக அறிவித்திருந்தார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

# பாக். தூதுவராக தயா ரத்நாயக்க?

கொழும்பு, மே 06

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க பாகிஸ்தானுக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று இது குறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற ஜெனரல் தயா ரத்நாயக்க, ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தபின்னர் அலரி மாளிகையில் தீட்டப்பட்ட சதித் திட்டத்துக்கு அவர் உடன்பட மறுத்ததாகப் புதிய அரசு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், ஜெனரல் தயா ரத்நாயக்கவைப் பாகிஸ்தானுக்கான அடுத்த தூதுவராக நியமிக்க புதிய அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது, பாகிஸ்தானுக்கான தூதுவராக முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்சல் ஜெயலத் வீரக்கொடி 2009 ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகிறார். இவர் விரைவில் அங்கிருந்து திருப்பி அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த)

# புத்தரின் போதனை மீறும் பிக்குகளை சிறையில் அடைக்க சட்டம் வேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் சிவமோகன் காட்டம்



வவுனியா, மே 06

புத்தரின் போதனைகளையும் பௌத்த நெறிகளையும் பின்பற்றத் தவறும் புத்த பிக்குகளை சிறையில் அடைக்கச் சட்டம் கொண்டுவர வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புத்தரின் பஞ்ச சீலம் என்னும் ஐந்து ஒழுக்கநெறிகளாவன பொய் சொல்லாமை, களவு இல்லாமை, மற்றவரை துன்புறுத்தாமை, முறையற்ற காமத்தை நாடாமை, மனதை அசுத்தமாக்கும் விடயங்களில் ஈடுபடாமை என்பனவாகும். ஜீவகாருண்யம் எனப்படும் இரக்கம் முதன்மையாகப் போதிக்கப்படுகின்றது.

எம்மைச் சூழ உள்ளவர்கள் மீதும், நம்மைச் சந்திப்பவர்கள் மீதும் இன மத பேதமின்றி இரக்கமுடனும், அன்புடனும் நடந்து கொள்வது பற்றி அது வெளிப்படுத்துகின்றன.

எல்லா மதங்களும் மக்களுக்கு நல்லனவற்றையே போதிக்கின்றது. அவற்றை உண்மையான ஈடுபாட்டுடன் பின்பற்றினால் நாட்டில் வறுமைகளும், கொலைகளும், கலவரங்களும் போர்களும் ஏற்பட மாட்டா.

ஆனால் நமது நாட்டில் புத்த பிக்குகள் தான் ஏனைய மதத்தவர்கள் மீது வெறுப்பைக் கக்குகிறார்கள். கடந்த காலங்களில் தம்மைப் புத்த பிக்குகள் என அடையாளம் காட்ட முற்பட்ட பிக்குகள் முஸ்லிம் சமுதாயத்தின் மீது தர்கா நகரில் தமது காட்டுத் தர்பாரை நடத்தி முடித்தனர். அங்கு புத்தரின் ஜீவகாருண்யம் எனப்படும் கருத்துச் சுக்குநூறாக்கப்பட்டது.

பொல்லுத் தடிகளும் துப்பாக்கிகளும் அவர்களுக்கு எதற்கு? அகிம்சையைப் போதிக்கவா? அல்லது அடாவடித்தனம் செய்வதற்கா? இலங்கைச் சட்டம் தங்கள் சட்டைப் பைகளுக்குள் என்று செயல்பட்ட கௌதம புத்தரின் காவி தரித்த வேடதாரிகளால் பௌத்த தர்மம் எமது நாட்டில் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது.

சைவத்தைப் போதிக்கும் இந்து மத குருக்கள் ஒருபோதும் வீதியில் இறங்கியதில்லை.

கிறிஸ்தவம் போதிக்கும் துறவிகள் தியானத்துடன் மெழுகுவர்த்தி ஏந்தி வெள்ளை நிறச் சீருடையுடன் மற்றவர்களுக்கு இடையூறு செய்யாது ஒரு வரிசையில் தமது கருத்துக்களை அமைதியாகச் சொன்னார்கள்.

ஆனால் பௌத்தத்தைப் போதிக்க வந்தவர்களில் சிலர் இன்று வீதியில் காவியுடை கிழியக் கிழிய காட்டுத் தர்பார் செய்கிறார்களே! இவர்களை ஒழுங்கு நெறிப்படுத்தச் சட்டம் கொண்டு வராதவரை பௌத்தமும் சீரழிந்து இந்நாட்டின் இன நல்லிணக்கமும், இலங்கை மக்களின் வாழ்க்கையும் சீரழிந்து போகும் நிலையே காணப்படும்- என்றார். (த-402)

# பாண் நிறையை அளக்க தராசு இல்லாவிட்டால் ரூ.100,000 தண்டம்



கொழும்பு, மே 05

பேக்கரி மற்றும் பேக்கரி உற்பத்தி செய்யும் மற்றும் விற்பனை செய்யும் இடங்களில் பாண் உள்ளிட்ட தின்பண்டங்களின் நிறையை நுகர்வோர் அறிந்துகொள்வதற்கு தராசு வைக்கப்படவேண்டும். அவ்வாறு தராசு வைக்கப்படாவிட்டால் ஒரு இலட்சம் ரூபா வரை தண்டம் விதிக்கப்படும் என்று நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை மே மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

பாண் உள்ளிட்ட பேக்கரித் தின்பண்டங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் சாதாரண நிலையங்களில் தராசு இல்லாவிடின் 10 ஆயிரம் ரூபா தண்டமும் கூட்டிணைந்த அல்லது பெரிய நிறுவனங்களில் தராசு இல்லாவிடின் ஒரு இலட்சம் ரூபா தண்டமும் விதிக்கப்படும் என்றும் நுகர்வோர் அதிகாரசபை அறிவித்துள்ளது.

நுகர்வோர் அதிகாரசபையின் சட்டத்தின் கீழான கட்டளைகளின் அடிப்படையில் பேக்கரிப் பொருள்களை உற்பத்தி செய்யும் மற்றும் விற்பனை செய்யும் இடங்களில் தராசு கட்டாயமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தச் சட்டம் பேக்கரி உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் நடமாடும் நிலையங்களுக்கும் கட்டாயமாக்கப்படும் என்று நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

பல்வேறான நிறைகளில் பாண் விற்பனை செய்யப்படுவதனால் அதற்கு ஏற்றவகையில் விலைகளை நிர்ணயிக்குமாறு நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நடைமுறையில் இருக்கின்ற சட்டத்தின் பிரகாரம் பாண் இறாத்தல் ஒன்றின் நிறை 450 கிராம் ஆகும் என்பதுடன் அதன் விலை 54 ரூபாவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

# 19, 20 ஆவது திருத்தச் சட்டங்களை சம்பிக்க தெரிந்திருக்க வேண்டும்

## ஹுனைஸ் பாறூக் எம்.பி தெரிவிப்பு

மன்னார், மே 06

இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டம் இன்னும் முற்றுப் பெறவில்லை.

தேர்தல் மாற்றத்துக்குப் பின்பே அது முற்றுப் பெறும் என மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்திருப்பதானது 19ஆவது, 20ஆவது திருத்தச் சட்டங்கள் என்னவென்று அவருக்குத் தெரியாது என்பதை வெளிப்படுத்துவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னித் தொகுதி அமைப்பாளருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாறூக் தெரிவித்துள்ளார்.

இளைஞர் விளையாட்டு புத்துணர்வு சரித்திரத்தின் முதல் தடவையாக விளையாட்டுஆற்றல்உடைய இளைஞர்களுக்கு வலுவான ஆரம்பத்தை மையமாகக் கொண்டு ஓரே நாளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் சகல இளைஞர் கழகங்களையும் உள்ளடக்கும் விதத்தில் நடத்திய நிகழ்வு கடந்த சனிக்கிழமை மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை பாடசாலையில் இடம்பெற்றது.

இதன்போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாறூக் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்திருந்தார். அதாவது 19ஆவது திருத்தச் சட்டம் இன்னும் முடிவடையவில்லை என்று.

நாங்கள் இந்த நாட்டில் தேர்தல் காலங்களில் ஜனாதிபதிக்கு இருந்து வரும் நிறைவேற்று அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம். இவ் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கும் அமைச்சரவைக்கும் பகிர்ந்து அளிப்போம் என்ற உறுதிப்பாட்டை வழங்கியிருந்தோம். அதற்கமைய இந்த 19ஆவது திருத்தச் சட்டம் வெற்றி அடைந்தபோது அது பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் அமைச்சர்.தேர்தல் மாற்றத்தைக் கொண்டு வரும் பொழுது தான் 19ஆவது திருத்தச் சட்டம் முடிவுறும் என்கிறார். தேர்தல் மாற்றம் என்பது 20ஆவது திருத்தச் சட்டமாகும். ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைப் பகிர்தலாக 19ஆவது திருத்தச் சட்டம் உள்ளது.

ஆனால் தேர்தல் மாற்றத்தை உடனடியாகக் கொண்டு வரும்பொழுது அது சிறுபான்மை மக்களாக வாழ்கின்ற தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு ஒரு சவாலாகவும் உள்ளது.

ஆகவே இதை அவசரப்பட்டு கொண்டுவர முனைபவர்கள் ஓர் இனவாதியாக இருக்கவேண்டும் அல்லது அவர்கள் பெரும்பான்மை இனக் கட்சியைப் பலப்படுத்தும் எண்ணம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். சிறுபான்மை இன நாடாளுமன்ற அங்கத்துவத்தைத் தக்கவைக்க நாங்கள் பரிசீலிக்க வேண்டியுள்ளது -என்றார். (த-56)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** வெளியூர் பயணவாய்ப்புகள் உண்டாகலாம். சோம்பலும் சோர்வும் உண்டாகலாம். மனதில் தேவையற்ற எண்ணங்கள் ஏற்படும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். திடீர் செலவு உண்டாகலாம்.

**இடபம்:** பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக்கரம் நீட்டுவார்கள். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும்.

**மிதுனம்:** தொழில் வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்காமல் சற்று மந்தமாகக் காணப்படும். யோசித்துச் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும்.

**கடகம்:** வீண் மனக்கவலை உண்டாகலாம். காரியங்களில் தடை தாமதம், வீண் செலவு ஏற்படலாம். வெளிநாட்டு வாய்ப்புகள் கை கூடி வரும். உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்த பதவிகளை அடைவீர்கள்.

**சிங்கம்:** குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும். சிலருக்கு திருமணம் கைகூடும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் ஏற்படும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். விரும்பிய பொருளை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி:** மற்றவர்களிடம் பேசும்போது கவனமாகப் பேசுவது நல்லது. வீண்பழி உண்டாகலாம். வேலைகளில் எதிர்பாராத சிக்கலைச் சந்திக்க வேண்டி இருக்கலாம். உத்தியோகத்தர்கள் கூடுதல் பணிச் சுமையை ஏற்க வேண்டி இருக்கும்.

**துலாம்:** தேவையில்லாத வீண் செலவுகள் உண்டாகும். நண்பர்கள், உறவினர்களுடன் வீண்பகை உண்டாகலாம். கவனமாகப் பேசுவது நல்லது. காய்ச்சல், சிரங்கு போன்ற நோய்கள் உண்டாகலாம்.

**விருச்சிகம்:** காரியங்கள் தாமதமாக நடந்தாலும் வெற்றிகரமாக நடக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். எதிர்பார்த்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு:** உங்கள் வாக்கு வன்மையால் காரியம் கைகூடும். ஆன்மிக எண்ணம் உண்டாகும். தொழில் வியாபாரம் நல்ல நிலைக்கு உயரும். போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள்.

**மகரம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் நிலவிய கருத்து வேற்றுமை நீங்கும். மனோதைரியம் கூடும். சாமர்த்தியமான பேச்சால் எடுத்த காரியம் வெற்றிபெறும்.

**கும்பம்:** வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தர்களுக்கு மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். சிறப்பான பலன் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மீனம்:** குடும்ப்த்தில் வீண் வாக்குவாதம் ஏற்படும். உறவினர்களிடம் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. காரிய தாமதம் ஏற்பட்டாலும் சாதகமான பலன் கிடைக்கும்.

# வாலு வருமா, வராதா?



தள்ளிப் போவதில் புது சாதனையே படைக்கிறது சிம்புவின் வாலு. இந்தப் படம் கடைசியாக அறிவிக்கப்பட்ட மே 9 ஆம் திகதியும் வெளியாகாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பு, ஹன்சிகா, சந்தானம் உள்ளிட்ட பலர் நடிப்பில் நீண்ட நாள்களாக தயாரிப்பில் இருந்து வரும் படம் 'வாலு'. தமன் இசையமைத்து இருக்கும் இந்தப் படத்தை நிக் ஆர்ட்ஸ் சக்கரவர்த்தி தயாரித்திருக்கிறார். விஜய் சந்தர் இயக்கி உள்ளார்.

நான்கு ஆண்டுகளாக இந்தப் படம் தயாரிப்பில் இருந்து வருகிறது. அனைத்து பிரச்சினைகளும் முடிந்து மே 9 ஆம் திகதி இந்தப் படம் வெளியாக இருப்பதாக விளம்பரப்படுத்தி வந்தார்கள். தற்போது மே 9 வெளியீடு என்ற விளம்பரமும் நிறுத்தப்பட்டு விட்டது.

தயாரிப்பாளர் சக்கரவர்த்தி கடன் பிரச்சினையில் சிக்கித் தவிப்பதால், இப் படம் வெளியாக மேலும் ஒரு வாரம் தள்ளிப் போகலாம் எனக் கூறப்படுகிறது. இந்தப் படத்துக்கான கடன் பிரச் சினைக்காகவும் சரத்குமார், தாணு உள்ளிட்ட குழுதான் பேச விருக்கிறது.

# 3டி

ப்ளீன் என்கிற நிறுவனம் 3டி புரஜெக்டரை தயாரிக்கும் வேலைகளில் ஈடுபட்டுள்ளது. சற்றே பெரிய சைஸ் முட்டை வடிவத்தில் இருக்கும் கருவியிலிருந்து மேல்நோக்கி வீசும் ஒளிக்கற்றைகள் காட்சியாக விரிந்து ஒளிப் படங்களைக் காட்டும்.

உதாரணமாக ஒரு திரைப்படத்தையோ அல்லது டிவி அலைவரிசையோ பார்க்க வேண்டும் என்றால் எந்த விதமான திரையும் தேவையில்லை. அதாவது கிட்டத்தட்ட கண் எதிரே காட்சி விரிந்து மனிதர்கள் 3டி எபெக்டில் காட்சி களாகத் தோன்றுவார்கள்.

நமக்கு பிடித்தமான நபர்களுக்கு பக்கத்தில் இருப்பதுபோல உணர்வோம்.




# நோயாளிகளுக்கு ஆறுதல் சொல்லும் பாப்பரசர்

பாப்பரசர் பிரான்சிஸ், நோயாளிகளுடன் தொலைபேசியில் அழைத்து பேசுவதை வழக்கமாக கொண்டிருக்கிறார். அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறித் தேற்றுகிறார்.

இப்படித்தான் பிராங்கோ ரபுபி என்பவரை இரு முறை பாப்பரசர் தொலைபேசியில் அழைத்து பேச முயற்சித்தார். 'ஹலோ, நான் போப் பிரான்சிஸ்' என்று அவர் சொன்னவுடன் யாரோ குறும்புச் செயலில் ஈடுபடுகிறார்கள் என நினைத்து பிராங்கோ ரபுபி தொலைபேசி அழைப்பை துண்டித்து விட்டார். ஆனால் பாப்பரசர் மூன்றாவது முறையும் அழைத்த போதுதான், பிராங்கோ தனது தவறை உணர்ந்தார். அழைத் திருப்பது பாப்பரசர் தான் என உறுதி செய்து பேச்சற்று திகைத்துப் போனார்.

அது மட்டுமல்ல அவரையும் அவரது மனைவியையும் தனது வாராந்த சந்திப்பின்போது பாப்பரசர் வரவழைத்து அரவணைத்து ஆறுதல் கூறியதுடன், தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியது நான்தான் எனச் சிரித்துக்கொண்டே கூறினார்.

**எதுவுமே செய்யவில்லையென்றால் முட்டாள் என்பார்கள்**
**ஏதாவது வித்தியாசமாக செய்தால் இது தேறாது என்பார்கள்**



**அவர்களை விட்டுத் தள்ளுங்கள்... அது அவர்களுக்கு அவமானம்!**
**நீங்கள் செய்ய நினைத்ததை செய்து கொண்டே இருங்கள்...**
**அது உங்களுக்கு வெகுமானம்!**

## கொஞ்சம் சிரிங்க பாஸ்....

'ஏம்பா! மாம்பழம் என்ன விலை?'

'ஒன்று வாங்கினால் இரண்டு ரூபாய். இரண்டு வாங்கினால் மூன்று ரூபாய்.'

'இந்தா ஒரு ரூபாய். அந்த இரண்டாவது மாம்பழத்தைக் கொடு.'...





# மே மாத ராசி பலன்கள்

## மிதுனம்

**(மிருகசீரிடம்3ஆம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3ஆம் பாதம் முடிய)**

எதிலும் சிக்காமல் நழுவுவதில் கெட்டிக்காரர். இந்த காலகட்டத்தில் கொடுத்த வாக்கை காப்பாற்றி அதன் மூலம் மதிப்பும், மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். பணவரவு திருப்தி தரும். சிக்கலான சில விடயங்களை சாதுரியமாகப் பேசி முடித்து விடுவீர்கள். வீண் பயத்தைத் தவிர்ப்பது நல்லது.

தொழில் வியாபாரம் முன்பு இருந்ததை விட முன்னேற்றம் காண்பீர்கள். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடும். தங்களது சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் திறம்படச் செய்து முடித்துப் பாராட்டுக் கிடைக்கப் பெறுவார்கள்.



### கலைஞர்களுக்கு

கலைத்துறையினரின் பெயரும் புகழும் சிறக்கும். உங்களின் திறமைகளால் அனைவரையும் அசத்துவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் உங்களைத் தேடிவரும். நல்ல பணவரவு பெறுவீர்கள். கலை நிகழ்ச்சிக்காக பயணங்களை மேற்கொண்டு நன்மைகளை அடைவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்மணிகள் கணவரின் ஆதரவுடன் இல்லத்திற்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமையைக் காண்பீர்கள். குழந்தைகளின் மீது அதிகமான அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். மேலும் உறவினர்களிடமும் ஒற்றுமை பாராட்டுவீர்கள். உங்களின் பக்குவமான பேச்சால் செயற்கரிய செயல்களைச் செய்வீர்கள்.

### மாணவர்களுக்கு

மாணவமணிகள் படிப்பில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். பெற்றோர்களின் ஆதரவுடன் உங்களின் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். படிப்பில் நீங்கள் எடுக்கும் முயற்சிகள் உங்களுக்கு சாதகமாக அமையும். நல்ல மதிப்பெண்கள் பெற்று சிறந்த மாணவராக பெயரெடுப்பீர்கள். நண்பர்களின் உதவி உங்களுக்கு கிடைக்கும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், புதன், வெள்ளி**

### மிருகசீரிடம் 3, 4

இந்த மாதம் கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வாழ்க்கைத்துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகள் மூலம் மனக்கவலை ஏற்படலாம். மற்றவர்களுக்கு உதவி செய்யப்போய் தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரலாம். கவனம் தேவை.

### திருவாதிரை

இந்த மாதம் உத்தியோக உயர்வில் எதிர்பாராத தடை, தாமதம் உண்டாகலாம். சிறிய வேலையும் செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கடன் பிரச்சினை தீரும். பண வரத்து அதிகரிக்கும். மனதில் இருந்த குழப்பம் நீங் கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தக வல்களாக இருக்கும்.

### புனர்பூசம் 1, 2, 3

இந்த மாதம் தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். திருமணம் தொடர் பான விடயங்களில் முன்னேற்றம் காணப்படும்.



றைப் பற்றி அறிந்துகொள்வோம்.

**மாற்றங்கள்**

திருமணத்துக்கு முன்னர் இருந்த இரண்டு தனி நபர்களுக்கு வெவ்வேறு எண்ணங்கள், கருத்துக்கள், கொள்கைகள் என இருந்திருக்கும். திருமணத்திற்குப் பிறகு அவர்களது கருத்துகளும் கொள்கைகளும் மாற வேண்டியது அவசியமில்லை. இம்மாற்றங்களை ஏற்றுக் கொள்ளத் தெரியாத தம்பதிகளின் மண வாழ்க்கை தவறாகப் போகத் தொடங்கும். இங்கு தான் உறுதியற்ற உறவின் தொடக்கம் ஆரம்பமாகிறது.

**புரிதலின்மை**

ஒவ்வொரு உறவும் சிறப்பாக வளர நல்ல புரிதல் அவசியம். வாழ்க்கைத்துணைவரது செயல்கள் ஒவ்வொன்றையும் குற்றமாகப் பார்க்கும் போது, அங்கே புரிதலின்மை ஆரம்பமாகிறது. இதன் விளைவாக தவறாகப் புரிந்து கொள்ளுதல் உருவாகிறது. அது உறவில் விரிசலை உண்டாக்குகிறது.

**தொடர்பின்மை**

தம்பதிகளுக்கிடையே சரியான தகவல் தொடர்பு இருக்க வேண்டும். தாம் நினைத்ததை சரியாக மற்றவருக்கு வெளிப்படுத்த வேண்டும் அல்லது சரியாகத் வெளிப்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். (நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்!) சரியான தகவல் தொடர்பின்மையால் 50வீத திருமணங்கள் தோல்வியடைகின்றன. சிறு சிறு பிரச்சினைகள், மனதில் உள்ள உணர்வுகளை மற்றவருக்கு வெளிப்படுத்த போதிய தொடர்பின்மையால், தீர்க்க முடியாத அளவிற்குப் பூதாகரமாகின்றன. ஒவ்வொருவரும் மற்றவரின் உணர்வுகளுக்கும், கனவுகளுக்கும், எண்ணங்களுக்கும், ஆசைகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் மதிப்பளித்து, பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பளிக்க வேண்டும்.

**நம்பிக்கையின்மை**

ஒவ்வொரு உறவும் நீடித்து வளர அடிப்படையான தேவையாக இருப்பது நம்பிக்கை. பெற்றோர்–குழந்தைகள், ஆசிரியர்–மாணவர், கணவன்–மனைவி ஆகிய உறவுகளில் இருக்க வேண்டியது நம்பிக்கை. இந்த நம்பிக்கையை மெதுவாக, உறுதியாக வளர்க்க வேண்டியது மிகவும் அவசியம். உறவுகளுக்கு இடையே ஏதாவது பிரச்சினை தோன்றினால் உடனடியாக தீர்க்க வேண்டும். தாமதம் செய்தால், உறவுகளுக்கிடையே நம்பிக்கையை இழக்க நேரிடும். நம்பிக்கை இழந்தால், அனைத்தும் இழந்ததாக அர்த்தம். பின்பு அந்த உறவில் மிச்சம் ஏதும் இருக்காது.

**பொருத்தம்**

ஒருவருக்கொருவர் ஏற்றவர்களாக, பொருத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதற்கு லியோ டால்ஸ்டாயின் கூற்று: ‘உங்களது மணவாழ்வின்மகிழ்ச்சியின்அளவை நிர்ணயிப்பது, நீங்கள் எவ்வளவு பொருத்தமுடன் இருக்கிறீர்கள் என்பதல்ல. உங்களது பொருத்தமின்மையை எவ்வளவு வெற்றிகரமாக எதிர்கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது’.

# திருமண பந்தங்கள் முறிவதற்கான காரணங்கள்!




திருமணம் என்பது இருமனம் இணையும் அற்புதமான பந்தம். இறுதிவரையிலும் இணைந்திருப்போம் என்ற உறுதியுடன் இரண்டு உள்ளங்கள் இணைந்து இல்வாழ்க்கை என்னும் இனிய பயணம். ஏமி என்பவர் திருமணத்தைப் பற்றி ' திருமணம் என்பது ஒரு சடங்கும் அல்ல, ஒரு முடிவும் அல்ல!!. இரண்டு ஆத்மார்த்தமான உண்மையான உள்ளன்புடன் கூடிய நீண்டதொரு நடனம். அந்த நடனத்தில், இருவரும் எவ்வாறு அந்த நடனத்தை ஒத்த மனத்துடன் சரி செய்து ஆடுகிறோம் என்பது தான் முக்கியம். மற்ற எதுவும் அல்ல.' என்று கூறுகிறார். சட்டத்தின்படியும், மதக் கோட்பாடுகளின் படியும், திருமணம் என்பது இரண்டு தனி நபர்களுக்கிடையேயான மனம் ஒத்த உறவு ஆகும். அது சட்டபூர்வமானது. இவ்வுறவானது, தேன் நிலவின்போது, மிக நெருக்கமானதாகவும், ஆழமானதாகவும் மாறுகிறது. ஒருவர் மீது ஒருவர் சாய்ந்தும், மடி மீது தலை சாய்த்தும், காதலைப் பரிமாறி, இன்பமான தருணங்களை அனுபவித்து, உடலும் உள்ளமும் இதுவரை கண்டிராத இன்பங்களைத் திகட்டத் திகட்ட அனுபவித்து, கனவு உலகத்தில் உலவி.... கணவனும் மனைவியுமாக நிஜ வாழ்க்கையில் இல்லற வாழ்க்கையை நடத்தத் தொடங்கும் பொழுது தான் வாழ்க்கையின் எதார்த்தம் புரியத் தொடங்குகிறது. அதன் பின் என்ன நடக்கிறது தெரியுமா? ஏன் சிலரின் மண வாழ்க்கை கசக்கிறது? ஏன் பல திருமணங்கள் தோல்வியடைகின்றன? இதற்கான காரணங்கள் பல இருக்கலாம். ஆனால் அடிப்படைக் காரணம் என்னவாக இருக்கும்? திருமணத்திற்கு முன்பாக இருவரும் பழகியபோது, குறையாகக் கண்டு கொள்ளாத, பெரிதாகத் தோன்றாத, முக்கியத்துவம் அளிக்காத ஏதோ ஒன்றாகத் தான் அது இருக்கும். அதைப் பற்றிய அறிகுறிகள் உங்களுக்குத் தெரிந்திருக்கும். காதல் மோகம் கண்களை மறைத்திருக்கும். யாருடைய அறிவுரையும் காதில் விழுந்திருக்காது. காதல் ஜோடிகளின் வாழ்வில் இத்தகைய தருணங்களை ஏற்படுத்தும் இதுபோன்ற காரணங்கள் சிலவற்

**மகிழ்ச்சியான வாழ்க்கைக்கான மந்திரம்**

நாம் அடிக்கடி கேள்விப்பட்டது போல், திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. ஆனால் அதற்கான அடிப்படைப் பணிகள் பூலோகத்தில் தான் மேற்கொள்ளப்பட வேண்டும். வெற்றிகரமான மணவாழ்விற்கு – நட்பு – சுதந்திரம் – மன்னித்தல் இந்த மூன்றையும் வாழ்க்கைத்துணைவருக்காக வாழ்கிறோம் என்பதை நினைவில் வைப்பதோடு, அவரின் நண்பராக, பரஸ்பர சுதந்திரம் அளித்து, மற்றவரின் தவறுகளை மன்னிக்கத் தயாராக இருங்கள். எந்த உறவிலும், மற்றவரிடமிருந்து அதிகம் எதிர்பார்க்காதீர்கள். மற்றவரிடமிருந்து எதிர்பார்ப்பதை விட அவருக்கு அதிகம் கொடுக்கத் தயாராக இருங்கள். இவ்வாறெல்லாம் இருந்தால், எப்போதும் மகிழ்ச்சியாகவே இருப்பீர்கள்



# மாம்பழம் சாப்பிடுவதால்...



தனது வாசத்தாலேயே அனைவரையும் ருசிக்கத் தூண்டும் பழம், மாம்பழம். ஆனால் யாரெல்லாம் மாம்பழம் சாப்பிடலாம், எத்தனை சாப்பிடலாம் என்பதில் பலருக்கும் குழப்பம். நீரிழிவு நோயாளிகள் மாம்பழம் சாப்பிடலாமா, கூடாதா என்ற சந்தேகத்துடனே அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாம்பழங்களில் அதிக அளவில் கரோட்டீன் சத்து உள்ளது. அல்போன்சா வகை மாம்பழத்தில் எக்கச்சக்க மான பீட்டா கரோட்டீன் சத்தும் மற்றும் பெத்தராசலு வகைகளில் மிதமான அளவு பீட்டா கரோட்டீன் சத்தும் உள்ளதாக ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. எனவே மாலைக்கண் போன்ற கண் தொடர்பான நோய்களுக்கு மாம்பழம் சாப்பிடுவது நல்லது. தினமும் ஒரு மாம்பழம் சாப்பிட்டால் உடலில் இரத்த ஓட்டம் சீராகி நரம்புத் தளர்ச்சி நீங்கி உடல் வலுவடையும். காரணம் மாம்பழத்துக்கு இரத்தத்தில் உள்ள நச்சுக் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் உண்டு. இது மட்டுமல்ல, இதயத்தையும், மூளையையும் பலப்படுத்தி நோய் எதிர்ப்புச் சக்தியையும் அதிகரிக்கும். கர்ப்பிணிகள் மாம்பழம் சாப்பிட்டு வந்தால் பிறக்கும் குழந்தை நல்ல ஊட்டமாக இருக்கும். பெண்களின் மாதவிடாய் பிரச்சினைக்கும் மாம்பழம் சாப்பிடுவது நல்லது. நல்ல கனிந்த மாம்பழங்களைச் சாப்பிட்டால் மாதவிலக்கு ஒழுங்குபடும். அதேசமயம் பெண்கள் மாதவிலக்கு நாள்களில் காலை நேரத்தில் சாப்பிட்டால் ரத்தப் போக்கு அதிகரிக்கும். எனவே அளவோடு சாப்பிடுவது நல்லது. மாம்பழம் பல் நோய்களையும் போக்கும். பழத்தைத் துண்டு துண்டாக நறுக்கி வாயில் போட்டு ஈறுகளில் படும்படி வைத்திருந்து 10 அல்லது 15 நிமிடங்கள் கழித்துத் துப்பிவிட்டால் பல்நோய் நீங்கிவிடும். சிறு நீர்ப் பையில் உள்ள கற்களைப் படிப்படியாகக் கரைக்கும் ஆற்றலும் மாம்பழத்துக்கு உண்டு. இரவில் மாம்பழம் சாப்பிட்டுவிட்டுத் தூங்கினால் அடுத்த நாள் மலச்சிக்கல் இல்லாமல் இருக்கும். அதெல்லாம் சரிதான், நீரிழிவு நோயாளிகள் மாம்பழம் சாப்பிடலாமா, கூடாதா அதைச் சொல்லுங்க முதல்ல என்கிறீர்களா? பயப்படாதீர்கள், தாராளமாக சாப்பிடலாம். தினம் ஒரு மாம்பழம் சாப்பிட்டு வந்தால் அதிக கொழுப்புச் சத்து, நீரிழிவு ஆகியவற்றை வருமுன் தடுக்கலாம் என சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. இன்னொரு விடயமும் நம்மை ஆச்சரியப்படுத்தும். அதாவது, மாம்பழத்தில் உள்ள சில வேதிப் பொருள்கள் அதிகக் கொழுப்பு மற்றும் நீரிழிவுக்கு எதிரான மருந்துகளைப் போல செயல்படுவதாக மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். மாம்பழத்துக்கு புற்று நோய்க் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் இருக்கிறதா என்றும் ஆய்வு நடத்தி வருகின்றனர். ஆனால் நீரிழிவு நோயாளிகள், ஆய்வுகளே சொல்லி விட்டன. இனியென்ன என்று இஷ்டம் போல மாம்பழத்தை 'வெட்டாதீர்கள்'. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று நமது முன் னோர்கள் சொல்லிவைத்திருக்கிறார்கள். அதை மனதில் வைத்து, உங்கள் மருத்துவரின் ஆலோசனையின்படி அளவாகச் சாப்பிடுங்கள். உங்கள் நாவும் இனிக்கும், உடல்நலமும் சிறக்கும்.

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 60 | 30 | 40–50 |
| கத்தரி | 120 | 80 | 100 | 80 | 90–100 | 60–80 |
| கரட் | 100 | 100 | 100–120 | 120 | 120–110 | 100–120 |
| மரவள்ளி | 40 | 50 | 40–50 | 50 | 40–50 | 45–60 |
| பயிற்றை | 100 | 80 | 100 | 100 | 100–110 | 80–100 |
| பாகல் | 100 | 140 | 80–100 | 120 | 100–120 | 100–120 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 90 | 80 | 40–60 | 80–100 |
| பெ.வெங்காயம் | 90 | 110 | 120 | 100 | 100–120 | 100–120 |
| சி.வெங்காயம் | 70 | 90 | 60–100 | 80 | 80 | 80 |
| பூசணி | 40 | 25 | 40 | 40 | 25–30 | 40–60 |
| தக்காளி | 80 | 80 | 100 | 80 | 90–100 | 45–60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 60 | 50–60 | 60 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 25–30 | 30–35 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20–30 | 15–20 |
| பச்சை மிளகாய் | 40 | 40 | 40 | 50 | 40–60 | 60–80 |
| புடோல் | 70 | 60 | 60 | 60 | 40–60 | 60 |
| கோவா | 40 | 50 | 50 | 40 | 30–40 | 60–80 |
| வெண்டி | 100 | 50 | 80 | 80 | 80–100 | 40–60 |
| போஞ்சி | 140 | – | 140 | 160 | 120–140 | 100–140 |
| லீக்ஸ் | 180 | – | 160 | 180 | 160–140 | 120 |
| தேங்காய் | 60 | 50 | 60 | 50–60 | 50–60 | 35–50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 90–100 | 90–120 |
| தேசிக்காய் | 160 | 150 | 150–170 | 240 | 160–200 | 120 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30–40 | 15–20 |
| கறிமிளகாய் | 80 | 60 | 50 | 100 | 80–100 | 80 |
| இராசவள்ளி | 100 | 120 | 140 | 120 | 100–120 | 140–160 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 600 | 800 |
| நண்டு | 300 | 200 | 350 | 400 |
| கணவாய் | 600 | 300 | 400 | 600 |
| பாரை | 500 | 500 | 400 | 500 |
| சுறா | 600 | – | 450 | – |
| சீலா | 450 | 400 | 300 | 400 |
| விளை | 400 | 300 | 350 | 400 |
| முரல் | 350 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 300 | 300 | 500 |
| கிழாக்கன் | 400 | – | – | – |
| ஒரா | 350 | 400 | – | – |
| திரளி | 250 | 100 | – | 200 |
| நகரை | 300 | 200 | 300 | 200 |
| சூடை | 160 | 200 | 140 | 100 |
| ஒட்டி | 300 | 200 | 200 | 200 |
| திருக்கை | 250 | – | 150 | 200 |
| பாலை | 400 | 300 | – | – |
| வாழை | 350 | 200 | – | – |
| கொய் | 120 | 50 | – | 130 |
| மதனம் | 230 | 200 | 250 | – |

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | 6 | | 2 | 7 | |
| | 6 | 3 | | | 2 | | 1 | |
| | 5 | 8 | | | 7 | 9 | | 6 |
| | | | | 5 | | 3 | | |
| 4 | | | 6 | 2 | 9 | | | 5 |
| | | 6 | | 1 | | | | |
| 9 | | 4 | 3 | | | 6 | 2 | |
| | 8 | | 2 | | | 4 | 3 | |
| | 1 | 2 | | 7 | | 8 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 9 | 5 | 3 | 7 | 1 | 2 | 8 |
| 3 | 5 | 7 | 8 | 1 | 2 | 9 | 6 | 4 |
| 1 | 2 | 8 | 6 | 9 | 4 | 5 | 3 | 7 |
| 9 | 3 | 4 | 7 | 2 | 1 | 8 | 5 | 6 |
| 7 | 1 | 5 | 9 | 8 | 6 | 2 | 4 | 3 |
| 2 | 8 | 6 | 4 | 5 | 3 | 7 | 9 | 1 |
| 5 | 6 | 2 | 1 | 4 | 8 | 3 | 7 | 9 |
| 8 | 7 | 3 | 2 | 6 | 9 | 4 | 1 | 5 |
| 4 | 9 | 1 | 3 | 7 | 5 | 6 | 8 | 2 |

## நாளை

**சித்திரை-24**
**வியாழக்கிழமை**
**07.05.2015**

திதி: திருதியை மு.ப. 09.31
நட்சத்திரம்: கேட்டை பி.ப.12.44
சுபநேரம்: 07.25-08.55 வரை
இராகுகாலம்: 01.25-02.55 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### உழைப்பால் சாதிப்போம்

மனதில் பலம் நிறைந்திருந்தால், உங்களின் விதியை நீங்களே வகுத்துக் கொள்ள முடியும். பிறருக்கு கொடுத்து உதவுங்கள். உதவி பெறுபவரைக் கடவுளாகவே மதியுங்கள்.

யார் வேண்டுமானாலும் தலைவனாக செயல்படலாம். ஆனால், நல்ல தொண்டனாக இருப்பது கடினம். மகத்தான செயல் எதுவும் கடின உழைப்பு இல்லாமல் சாதிக்க முடிவதில்லை. வெற்றியில் விருப்பம் இருக்குமானால், ஆணவத்தை முதலில் ஒழித்து விடுங்கள். மனத் தூய்மை மிக்கவர்கள் இந்த பிறவியிலேயே கடவுளைக் காண்பது உறுதி.

## 20ஆவது சட்டமூலம் சிறுபான்மையினருக்கு பாதகம் என்கிறார் கிழக்கு முதலமைச்சர்

மட்டக்களப்பு, மே 6

19ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதை அடுத்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 20 ஆவது திருத்தச் சட்டமூலம் சிறுபான்மை மக்களுக்கு பாதகத்தை ஏற்படுத்துகின்ற திருத்தச் சட்டமாக அமையக்கூடும் என்று கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை வை.எம்.சி.ஏ கட்டடத்தில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களின் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

'20ஆவது திருத்தச் சட்டத்துக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்று சிந்தித்து வருகின்றோம். அந்தச் சட்டத்தில் இலங்கையில் பரந்து வாழ்கின்ற சிறுபான்மை இனத்தவர்கள் ஒட்டுமொத்த மாக பாதிப்படையக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதேபோல் வடக்கு கிழக்குக்கு வெளியே இருக்கின்ற தமிழ் மக்கள் அவர்களுடைய நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களை இழக்கின்ற வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதேபோல் மலையகத்தில் உள்ள தமிழ் மக்களுடைய பிரதிநிதித்துவங்களும் கேள்விக்குறியாகிவிடும் வாய்ப்புக்கள் உள்ளன. உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்படுமாக இருந்தால் இந்த அரசியல் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்துக்கு வராமல் போகலாம். நாடாளுமன்றம் கலைக்கப்படாமல் பிற் போடப்படுமாக இருந்தால் அரசியல் கட்சிகள் 20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக பேசுகின்ற காலமாகத்தான் எதிர் காலம் அமையும்' என்றார். (வ–10)

## வடக்கிலுள்ள இந்தியர்களுக்கு நடைபெற்ற கலந்துரையாடல்

வலி.வடக்கு, மே 6

வட மாகாணத்தில் தொழில் புரியும் இந்திய பிரஜைகளுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் துணைத் தூதர் ஆ.நடராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் உட்பட வட மாகாணத்தினுள் தொழில் நிமித்தம் வந்து தங்கியுள்ள எழுபதுக்கும் மேற்பட்ட இந்தியப் பிரஜைகளும் கலந்து கொண் டார்கள்.

வட மாகாணத்துக்கு உட்பட்ட மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட் டங்களில் கடமையாற்றும் இந்தியர்களான தொண்டு நிறுவன ஊழியர்கள் உட்பட ஏனையவர்களும் இதில் கலந்து கொண்ட துடன் தாம் இங்கு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்கள்.

குறிப்பாக அதிக எண்ணிக்கையான தொழி லாளர்கள் இங்கு ஆலயங்களின் சிற்ப வேலைகளுக்காக வந்துள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். (வ–86)

## பட்டதாரிகளுக்கு நியமனம்; சங்கத்தில் கலந்துரையாடல்



வவுனியா, மே 6

வவுனியா மாவட்ட பட்டதாரி கள் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கான நியமனம் தொடர்பான கலந்துரையாடலொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா பட்டதாரிகள் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் முதற்கட்டமாக வவுனியாவி லுள்ள 450 வேலையற்ற பட்ட தாரிகளில் 100 பேருக்கு குறுகிய காலப்பகுதியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச் சரின் பரிந்துரை கிடைக்கப் பெற்றுள்ளது. தெரிவு செய்யப்படுகின்ற 100 பட்டதாரிகளில் 50 பேருக்கு எதிர்வரும் 2 வார காலத்துள் தற்காலிக நியமனம் வழங்குவது தொடர் பாக கலந்துரையாடப் பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் வவுனியா பட்டதாரிகள் சங்கத் தலைவரும், கைத்தொழில் வாணிப அமைச்சின் வட மாகாண ஏற்றுமதி விரிவாக்கல் இணைப்பாளருமான ம. ஆனந்தராஜா மற்றும் இலங்கைத் தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத் தின் தலைவர் கலாநிதி எம்.எஸ். அனீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

## யோகாசன தியான இலவச பயிற்சியின் புதிய பிரிவுகள்

நல்லூர் நாவலர் மணிமண் டபத்தில் இலவசமாக நடத்தப் படும் யோகாசன தியான வகுப்புகளின் புதிய பிரிவுகள் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம் பமாகவுள்ளன. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்தப் பயிற்சி நெறிகள் நடத்தப் படுகின்றன. 3 மாத காலப் பயிற்சி நெறியை முறைப்படி பூர்த்தி செய்பவர்களுக்கு திணைக் களத்தால் பயிற்சி நிறைவில் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

சனி மற்றும் ஞாயிறு தினங்க ளில் காலை 6.30 தொடக்கம் 7.30 மணிவரை ஆண்களுக்கும், 7.30 தொடக்கம் 8.30மணிவரை பெண்களுக்குமாக இருபிரிவுகளாக இந்தப் பயிற்சி நெறி வழங்கப்படும். வயது வேறுபாடின்றி இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளலாம். தேகாரோக்கியம் அற்றோர் குறித்து விஷேட கவனம் செலுத்தப்படும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நாவலர் மணி மண்டபம், நல்லூர் என்ற முகவரியிலமைந்த அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள் ளலாம். மேலதிக தொடர்புக ளுக்கு 021 321 5393 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–4)

## கொடியேற்றம்

பண்டத்தரிப்பு காலையடி ஞான வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திரு விழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (வ–29)

## ஓவிய ஒளிப்பட கண்காட்சி

மாங்குளம், மே 6

கல்மடு மகா வித்தியாலயத்தின் சித்திர கலைப் பாட ஆசிரியர் அ.மனோகரனின் வடிவமைப்பு மற்றும் ஒழுங்கமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஓவிய ஒளிப்படக் கண்காட்சி நாளை வியாழனும், மறுநாள் வெள்ளிக் கிழமையும் பாடசாலையின் பிரதான மண்டபத் தில் இடம்பெறவுள்ளது.

இந்தக்கண்காட்சியில் ஓவியங் களுக்கு மட்டும் ஒளியூட்டப்பட்டு ஏனைய இடங்கள் இருட்டாக இருக்கும் விதத்தில் புதிய முறையிலான கண்காட்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாடசாலையின் அதிபர் க.செல்வதேவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.சிறிஸ்கந்த ராசா, சிறப்பு விருந்தினராக யாழ் கல்வி வலய சித்திர பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் து.துசியந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ள னர். (வ–422)

## முன்பள்ளி விளையாட்டு விழா

உடுவில் உதயசூரியன் முன்பள் ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற் பகல் 2.30 மணிக்கு உதய சூரியன் முன்பள்ளி மைதானத் தில் உடுவில் உதய சூரியன் சன சமூக நிலையத் தலைவர் சி.றமேஸ் தலைமையில் நடை பெற இருக்கின்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக உடுவில் அமெ ரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் எஸ்.முரளிமோகன் கலந்து சிறப்பிக்க வுள்ளார். (வ–288)


**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த 1983 கார்த்திகை 12 இல் செவ்வாய், சூரியன் 35 கிரக பாவமுடைய அரசஉத்தியோகமுடைய மணமகனுக்குப் பொருத்தமான சைவபோசன மணமகள் தேவை (தென்மராட்சி விரும்பத்தக்கது).

தொடர்பு: 077 2395 894

**தேவை**

எமது பட்டயக்கணக்காளர் நிறுவனத்தில் கீழ்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை

1. கணக்காளர்: B.Com/HNDA பட்டம் பெற்றவர்கள் நாளாந்த படியாக 500 ரூபா வழங்கப்படும்.
2. கணக்கியல் உதவியாளர்: A/L வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்தோர். நாளாந்த படியாக 300 ரூபாய் வழங்கப்படும்.
3. சிற்றூழியர்: (Peon)

உணவு, தேவைப்படின் தங்குமிட வசதியும் வழங்கப்படும். நேரில் வரவும். (59865)(10.6.3)

தொடர்பு: 140, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, (பெற்றோல் சேற் முன்பாக) 0779530496

**இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடர்**

வசியம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம், கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

இல. 175, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்விருந்தினர் விடுதி, G.G.Hotel, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 595 0463

**அடிப்படை தாதிய பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்**

மேற்படி எமது நிறுவனத்தில் அடிப்படைத் தாதிய பயிற்சிநெறி (தாதியசேவை, சத்திரசிகிச்சை ஆய்வுகூட பயிற்சி, மருத்துவ உபகரண பாவிப்புமுறை நெறிகள்) ஆரம்பிக்கப்படஉள்ளது. இம் மூன்று மாத பயிற்சியில் பங்குபெற விரும்புபவர்கள் 08.05.2015ஆம் திகதி வெள்ளிக்கிழமை நேர்முகத் தேர்வில் பங்குபற்றவும் , மேலும் எமது நிறுவனத்துக்கு.

* இரவு நேர காவலாளி
* அம்புலன்ஸ் ஓட்டுநர் தேவை.

**நேர்முகத்தேர்வு:**

இடம்: சண்றைஸ் மெடிகிளினிக் இல.888, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: காலை 9.00 மணி

காலம்: 08.05.2015

தொ.பே. 021 492 7162, 021 222 6069

(59600)(45.3.7) நிர்வாகம்

USAID FROM THE AMERICAN PEOPLE "Civil Society Initiatives to Promote the Rule of Law in Sri Lanka"

**மகளிர் அபிவிருத்தி நிலையம் வன்முறைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு இலவச சட்ட சேவைகளை நடத்தி வருகிறது**

தொடர்புகளுக்கு:

இலவச சட்ட சேவை பிரிவு
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல.07, இரட்ணம் லேன்,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144

மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில்

(59259)(45.3.7)

**வாடகைக்கு**

நல்லூர் பகுதியில் முற்றிலும் தனியான வீட்டின் பகுதியொன்று (அனெக்ஸ்) வாடகைக்கு உண்டு. 3அல்லது 4பேர் தங்கலாம். இந்து சமயத்தவர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

(59497)(3.9) தொடர்பு: 076 868 0213

**சமையல் ஆள் தேவை**

நல்லூரில் பல காலமாக இயங்கி வரும் தினக்குரல் விடுதிக்கு, விடுதியில் சமையல் செய்த அனுபவமுடையவரும், சகலவிதமான உணவு வகைகளும் செய்யத் தெரிந்த ஒருவர் தேவை. விருப்பமுள்ளவர்கள் சுயவிவரக்கோவை மற்றும் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.

(59496)(3.9) தொடர்பு: 021 222 6476

**சீரடி சாய்பாபா ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
சாய்ராம் சாஸ்திரிகள்

ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

காலை 9.00 மணி - மாலை 6.00 மணி வரை

076 809 7406

Land Mark Yaal inn Hotel

இல.46/1, கஸ்தூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(59429)(4.3.7)

**பனங்காமம் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) பாலிநகர், வவுனிக்குளம், கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்**

மேற்படி ப.நோ.கூ சங்கத்தின் கிளைக்குழு தேர்வானது எதிர்வரும் 09.05.2015 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அங்கத்தவர்களின் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள இடங்களில் நடைபெறும். மேற்படி கிளைகளுக்கு வாக்களிக்கத் தகைமையுடைய அனைவரும் சமுகமளித்து உங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**குறிப்பு:**

அங்கத்தவர்களுக்கு தனித்தனி அழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

செயலாளர்,
பனங்காமம் ப.நோ.கூ.ச.

(57093)(10.6.3)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.
**சுப்பிரமணியம் குணரத்தினம்**

தோற்றம்
30.03.1955

மறைவு
28.04.2013

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வமே
உங்கள் நினைவுகளுடன்
நாங்கள் என்றும் வாழ்கின்றோம்

குடும்பத்தினர்.
நிலாவரை, புத்தூர்



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும்
மெலிஞ்சிமுனையை வசிப்பிட மாகவும்
கொண்ட
அமரர்.
**சேவியர் றோசலின்**

தோற்றம்
16.03.1949

மறைவு
06.05.2013

நாற்பத்து மூன்று ஆண்டுகள் - எம்மை
பிரிவின்றிக் காத்தவளே உங்கள் குடும்பத்தைப் பிரிந்து
நீங்கள் எங்களைக் கண்ணீரில் மிதக்கவிட்டு
கண்மணியே நீங்கள் எங்கு சென்றீர்கள் !

மெலிஞ்சிமுனை, ஊர்காவற்றுறை.
உங்கள் நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.



## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
16.07.1989

ஆண்டவன் அடியில்
06.05.2008

**செல்வன் வைத்திலிங்கம் ஜிவாகர்**
**(பாலிநகர் மகாவித்தியாலய உயர்தர மாணவன்)**

என் மடியில் தவழ்ந்த முத்தே உனை மறந்து போவோமோ?
கொடிய வினை செய்தானோ கோமகனே உனைப்பிரிய
எம்முடன் இருக்கும் வரை நீ செய்யும் ஒவ்வொரு செயலும்
எமது ஒவ்வொரு நிகழ்விலும் மனதில் அலை பாயுதடா
இளவலே என் ஜீவாக்குட்டி எப்படித்தான் ஆறுவோமோ
அப்பாவும் தனித்து அங்கே இயங்க நிலை வந்ததுவோ
அக்காளும் தங்காளும் அவனியில் தனி மர மாயினரோ
ஏழாண்டுகள் ஆனதையா ஏழுயுகமாய் கழியுதிங்கே!!!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பருத்தித்துறை வீதி,
யூனியன் முன்பாக,
கொடிகாமம்.
(41124) (45.3.7)

உன் பிரிவால் துயரடையும்
குடும்பத்தினர்.
(வைத்திலிங்கம் மனோரஞ்சிதம்)



## நன்றி நவிலலும், அந்தியேட்டியும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்கள் **ஏகாம்பரம் சின்னத்துரை**
திருமதி **பகவதி சின்னத்துரை**

கடந்த 07.01.2015 அன்றும், 11.01.2015 அன்றும் சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்களின் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும், தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், பல வழிகளில் உதவி ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் எமது குடும்பம் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, மேலும் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (07.05.2015) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தருகில் நடைபெறும். அத்தோடு சபிண்டீகரணக் கிரியைகள் 09.05.2015 சனிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருவதோடு அத்தருணங்களில் தாங்களும் தங்கள் குடும்பம் சகிதம் வருகை தந்து அங்கு நடைபெறும் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்தியடி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி,
தொ.பே. 071 829 7207, 071 484 0721

குடும்பத்தினர்.



## 55 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

அமரர்
**பொன்னம்பலம் சிவதாஸ்**
(சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்)



தோற்றம்
06.05.1960

மறைவு
02.10.2014

நினதன்பு இன்றியே நித்தமும் கலங்குகின்றோம்
கனவாகிப் போகாதோவிந்தக் காலனின் கொடூரம்
தினங்கள் நகர்கின்றன திசைகாட்டியின்றி நாம்
மனங்கள் மகிழ்ந்திடவே மறுபடியும் வாரீரோ!

ஆத்ம பதத்திற்காய் ஆண்டவன் தாள் இறைஞ்சும்.
குடும்பத்தினர்.



## 29 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி!
(06.05.2015)



மக்களை, மண்ணை நேசித்து
விடுதலை நோக்கி
வீர நடைபோட்ட சரித்திர
நாயகன் எம் தலைவர்
**சிறீ சபாரத்தினம்**
மற்றும், அவரோடு கூட மரணித்த
நூற்றுக்கணக்கான
போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும்
மீண்டும் எம் அஞ்சலிகள்

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)


## ஆயரின் நலம் விசாரித்தார் அமைச்சர்

கொழும்பு, மே 6

திடீர் சுகவீனமுற்ற நிலையில் கொழும்பு தேசிய மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டுள்ள மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பின் உடல் நிலை தொடர்பில் வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழு வின் தலைவரும்,அமைச்சருமான ரிசாத் பதியுதீன் தேசிய மருத்துவமனைப் பணிப்பாளருடன் தொலைப் பேசியில் தொடர்பு கொண்டு வினவியுள்ளதுடன், அவரது நலத்துக்காக தேவை யான வசதிகளை செய்து கொடுக்குமாறும் கேட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொள்ள வந்த மன்னார் மறை மாவட்ட ஆயர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக வெளி யான செய்தியையடுத்து அமைச்சர் ரிசாத் பதியுதீன் கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு உடல் நிலை குறித்து கேட்டறிந்து கொண்டமை குறிப்பி டத்தக்கது. (வ)

## காணவில்லை

வவுனியா, மே 6

நெடுங்கேணி றம்பைக்குளத்தைச் சேர்ந்த முருகுப்பிள்ளை இராசதுரை என்பவர் கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளார் என்று அவரது உறவினரால் பொலி ஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு அவரது மகளின் வீட்டிலிருந்து காலை உணவு சாப்பிட்டு விட்டு வெளியில் சென்றவர் மீண்டும் அவரது வீட்டுக்கு வரவில்லை.

அவர் தொடர்பாக அவரது உறவினர்கள், பிள்ளைகள் பல இடங்களில் தேடியும் எந்தத் தகவலும் இது வரையும் கிடைக்கப்பெறாத நிலையில் நெடுங்கேணி பொலிஸ் நிலையத் தில் சம்பவம் தொர்டர்பாக முறைப்பாடு செய் துள்ளனர். (வ-435)

## சதுரங்க நடுவர்களாக இருவர் தெரிவு

இலங்கை தேசிய சதுரங்க சம்மேளனத்தால் யாழ். மாவட் டத்தைச் சேர்ந்த இருவர் தேசிய சதுரங்க நடுவர்களாகத் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவன் அருளா னந்தம் பிரதாபன், வயாவிளான் மகா வித்தியாலய பழைய மாண வனும் மருத்து வருமான கார்த் திகேயன் ஆகியோரே நடுவர் களாகத் தெரிவு செய்யப்பட் டுள்ள வர்களாவர்.

அவர்கள் அடுத்த மாதம் கொழும் பில் நடைபெறவுள்ள தேசிய சதுரங்கச் சுற்றுப் போட்டியில் நடுவர்களாகப் பணியாற்றவுள் ளனர். (வ-9)

## திருமுறை மனனப்போட்டி

வண்ணை, சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் சைவச்சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும் சைவ சமய அறிவை விருத்தி செய்யும் நோக்கிலும், திருநாவுக்கரசு நாய னார் குரு பூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டிகள் தரம் 1,2 பாலர் பிரிவிலும்தரம் 3,4 கீழ்ப் பிரிவி லும்நடத்தப்படவுள்ளன.பாலர்பிரி வுக்கு மாசில் வீணையும் மாலை மதியமும்" சொன்றுணை வேதி யன் சோதி வானவன்" ஆகிய இரு திருமுறைகளும், கீழ்ப் பிரி வுக்கு கூற்றாயின வாறு விலக்க கலீர்" நிலை பெறுமா றெண்ணு தியேல்" ஆகிய இருதிரு முறை களும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப் போட்டி நாளை வியாழக்கிழமை நடை பெறவுள்ளது. போட்டிகளில் வெற்றிபெற்றோ ருக்கான பரிசில் கள் எதிர்வரும் 12ஆம் திகதிதிரு நாவுக்கரசு நாயனார் குருபூசை தினத்தன்று வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# கட்டாக்காலிகள், வளர்ப்பு பூனைகளால் கடிபடுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

தென்மராட்சி, மே 6

தற்போது நிலவும் வெப்பநிலை காரணமாக கட்டாக்காலி மற்றும் வளர்ப்புப் பூனைகளால் கடிபடுவோரின் எண்ணிக்கை தென்மராட்சிப் பகுதிகளில் அதிகரித்துள்ளது.

அதிக வெப்பம் காரணமாக குடி தண்ணீர் தேடி அலையும் கட்டாக்காலி நாய்கள் வீதியில் செல்வோரையும் கால்நடைகளையும் கடித்து வருகின்றன.

சந்தைகள், பஸ்நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் போன்ற வற்றில் பெருமளவில் கட்டாக் காலி நாய்கள் காணப்படுவ தால், அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பொது மக்கள் கேட்டுள்ளனர்.

மஹிந்த சிந்தனையின் கீழ் கட்டாக் காலி நாய்களை உள் ளூராட்சி சபைகள் பிடித்து அழிப்பது நிறுத்தப்பட்டதால் அனைத்து இடங்களிலும் நோய்களால் பாதிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான கட்டாக்காலி நாய்கள் பாடசாலைகள், திணைக் கள அலுவலகங்கள் என்பவற்றில் இரவு பகல் வேளைகளில் தங்கியிருந்து வருகின்றன.

இவ்வாறு கட்டாக் காலிகளாக அலையும் நாய்களாலேயே பலர் கடியுண்டதாகத் தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை, வீடுகளில் வளர்க்கப்படும் பூனைகளாலும் சிறுபிள்ளைகள் தொடக்கம் பெரியவர்கள் வரை கடியுண்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது தொடர்பாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; 'கட்டாக்காலி நாய்கள் மற்றும் பூனைகளால் கடியுண்டு காயமடையும் பல பொதுமக்கள் தினமும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருவதாகவும், கடந்த ஜனவரி தொடக்கம் நேற்று முன்தினம் வரையான காலப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் மற்றும் வளர்ப்பு பூனைகளால் கடியுண்ட 400 இற்கும் மேற்பட்டோருக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டதாகவும், ஏப்ரல் மாதத்தில் மட்டும் 92 பேருக்கு இவ்விதம் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தடுப்பூசி மருந்துகள் விலை கூடிய மருந்துகள் என்பதால் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கையை குறைவடையச் செய்தால் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்துக்கு பயன்படுத்தும் நிதியை மருத்துவமனையில் தட்டுப்பாடு நிலவும் ஏனைய மருந்து வகைகளைக் கொள் வனவு செய்யப் பயன்படுத்த முடியும்' என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# 'நௌசல' அறிவகத்தால் பயனடைவோர் அதிகரிப்பு

மானிப்பாய், மே 6

அராலி தெற்கு, நௌசல அறி வகம் ஊடாக வலி.மேற்கில் உள்ள மாணவர் தரப்பு, அரச நிறுவனங்கள் முழுமையாக பல்வேறு தேவைகளை நிறை வேற்றி வருகின்றனர். அராலி நௌசல அறிவகத் தின் தலைவராக க.சர்வானந்தனும், செயலாளராக கே.ஞான சேகரமும் இதற்கு முழுமையாக பங்களித்து வருகின்றனர்.

இங்கு மாணவர்களுக்கான கணினிக் கல்வி, வளர்ந் தோருக்கான கணினிக் கல்வி, சிறுவர்களுக்கான கணினிக் கல்வி, போட்டோ பிரதி, லெமெனேற்றிங், பைண்டிங், விளம்பர டிசைனிங் போன்ற பல்வேறு சேவைகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

குறிப்பாக அரச நிறுவனங் களின் கீழ் செயற்படும் பொரு ளாதார அபிவிருத்தி அமைச் சின் உத்தியோகத்தர்கள், சமுத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்களின் வேலைகள் முன்னுரிமை பிரகாரம் மேற்கொள்ளப்படும் என்று அதன் இணைப்பாளர் இளங்கீரன் தெரிவித்தார். (வ-50)


## துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவனத்தின் பணியாளர் செல்வி தி.சுஜாத்தா அவர்களின் அன்புச் சகோதரன்

**தியாகராஜா சசிக்குமார்**

அவர்களின் மறைவையிட்டு ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் சுஜாதா அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது சகோதரனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எம் இராஜநாயகம் அன்ட் கம்பனி பட்டயக் கணக்காளர்கள் நிறுவன உரிமையாளரும், பணியாளர்களும். இல.140, பரமேஸ்வரார் சந்தி, திருநெல்வேலி. (59502) (45.7.3)


# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதிய நிர்வாகக்குழு உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம், மே. 6



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாகக்குழு உறுப் பினர் தெரிவு அண்மையில் நடைபெற்றது. தேசிய இளைஞர் சேவை மன்ற மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எஸ்.விஜிதரன் தலைமையில் தெரிவு நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந் தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொண்டார். புதிய நிர்வாகக்குழுவில் தலைவராக ச.லக்ஷன் தெரிவு செய்யப் பட்டதுடன், செயலாளராக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஸ்ரீ.விநோதினி, பொருளாளராக எஸ்.மயூரன் உட்பட நிர்வாகக் குழு உறுப்பினர்களாக 19பேர் தெரிவு செய்யப் பட்டனர். மேலும் தேசிய சம்மேளனப் பிரதிநிதிகளாக எஸ்.நேசபாலன், எஸ்.விஜி தரன் ஆகியோர் தெரிவு செய் யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாவட்ட இளைஞர் கழக சம் மேளனத் தலைவர் எஸ்.விஜிதரன், "தேசிய இளைஞர் சேவை மன்ற சம்மேளனம் மாகாண அடிப்படையில் வட பகுதியை வட மாகாணம், வன்னி மாகாணம் என இரு பிரிவுகளாக்ப் பிரித்துள்ளது. வன்னி மாகாணத்துக்குள் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங் களும், வடமாகாணத் துக்குள் கிளிநொச்சி, யாழ்ப் பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் விரைவில் ஒன்றாக்கப்பட வேண்டும்.

மேலும் எமது அமைப்பின் இலச்சினை தனிச் சிங்களத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை மூன்று மொழிகளிலும் பொறிக் கும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கபடவேண்டும். தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி கடந்த வருடம் நடைபெறவில்லை. அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை கடந்த நிர் வாகம் வேறு தேவைகளுக்காக உபயோகித்ததாக அறிய முடியகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும்" என்று தெரிவித்தார். (வ-10)


## கண்ணீர் அஞ்சலி



பூநகரி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் இளைப்பாறிய உப அதிபர் - யாழ் இந்துக் கல்லூரி யாழ்ப் பாணம், பூநகரி சித்தன் குறிஞ்சி முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் போசகரு மாகிய **பொன்னம்பலம் சிறிஸ்கந்தராசா** அவர்களின் அன்புச் சகோதரனான


**பொன்னம்பலம் குகதாசன்** அவர்கள் 27.04.2015 அன்று கனடாவில் இயற்கையெய்தியதையொட்டி மீளாத்துயரில் மூழ்கியுள்ள அவரது குடும்பத்தாருக்கும் உறவினர் களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் பூநகரி பிரதேசசபை**


# புதிய தேர்தல் முறைமையுடன்தான் 19ஆவது திருத்தம் முழுமை பெறும்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



கொழும்பு, மே 6

கடந்த 28 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள 19 ஆவது அரசமைப்புத் திருத்தமானது, 20 ஆவது அரச மைப்புத் திருத்தம் ஒன்று நிறைவேற்றப்பட்டு புதிய தேர்தல் முறைமை உருவாக் கப்படும் வரையிலும் முழுமை பெறமாட்டாது என்று ஜாதிக ஹெல உறுமய அமைப்பின் பிரதம செயலாளரும், அமைச்சருமான பாடலீ சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கூடிய விரைவில் 20 ஆவது அரசமைப்புத் திருத் தமும் கூட நிறைவேற்றப்பட்டு, அதன் பின்னர் நாட்டில் பொரு ளாதார சமூகமய உறுதிப்பாடு ஏற்படக் கூடிய புதிய அரசியல் யுகம் ஆரம்பிக்கப்பட வேண்டி யுள்ளது என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

மேலும் 20 ஆவது அரசமைப் புத் திருத்தத்தின் பின்னர் அரச மைப்புத் திருத்தங்கள் என்ற செயற்பாடுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டி யுள்ளது எனவும் தெரிவித் துள்ள அமைச்சர்,அதன் பின்னர் தேர்தல் நடத்தி நாட்டின் பொரு ளாதாரம் தொடர்பாக நீண்ட காலத் தீர்வுகளை கண்டறி யத்தக்க தரப்பிடம் நிர்வாகம் கையளிக் கப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி மின்சக்தி எரிசக்தி அமைச்சில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் வைத்து கருத்து வழங்கியிருந்த போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். (வ-22)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 03 . 1940



மறைவு 28 . 04 . 2013

அமரர்

**அப்பாக்குட்டி தெய்வேந்திரராசா**

அப்பாவின் தோளில் ஏறி
சாமியைப் பார்க்கும் போது
தெரியவில்லை
சாமியின் தோள் மீது தான்
ஏறி இருக்கின்றேன் என்று.....!
எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மசாந்திக்காக
இறைவனை வேண்டி
நிற்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

அன்பு மனைவி, மகன், மகள்மார் மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல் க.சசிகரன்



## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர் செ.நகுலேஸ்வர தாசன் அவர்களின் தாயார்

திருமதி

**நேசரத்தினம்செல்லப்பா**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 1949 . 03 . 12



மறைவு 2014 . 04 . 17


திதி : 06.05.2015

அமரர் **மாணிக்கம் மணிவாசகம்** (செட்டி)

ஆண்டு காலம் அழுதாலும் தீருமோ - அப்பா உங்கள் இழப்பு
ஓராண்டு காலம் ஓடி மறைந்து விட்டது ஆனால்
உங்கள் நினைப்பு எம் நெஞ்சத்தில் நீக்கமற கலந்துள்ளது.
காலங்கள் மறையலாம், எம் கனவுகளைச் சுமந்த
எம் அப்பாவின் நினைவுகள் மறையாது.

151/2, பருத்தித்துறை வீதி, நல்லூர்

உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்.



# யாழ்ப்பாணம்,
## திருவருள்மிகு சாமுண்
## புனராவர்த்தன அஷ்டபந்த
## இன்று 06.05.20

அதிகாலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, சுத்திபுண்யாக வாசனம், ஆச்சாரிய சந்தியானுஷ்டானம், யாகசாலை பிரவேசம், யாக பூஜைகள், பிரதான யாகபூஜைகள் மஹாபூர்ணாகுதி, வஸ்தாரா ஹோமம், பிரதான யாக மஹா பூர்ணாகுதி, ஹோம சமர்ப்பணம், விஷேட தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், நாதாஞ்சலி, பரதட்சண நமஸ்காரம், அந்தர்பலி, பஹிர்பலி, யாத்திரா தானம், முகூர்த்த தானம், ஸ்தூபி கும்பங்கள் சர்வ மங்கலவாத்திய சகிதம் வீதியுலா வந்து காலை 9 மணியளவில் ஸ்தூல லிங்க அபிஷேகமும், தொடர்ந்து அடியவர்களின் அரோஹரா கோசத்துடன், சர்வமங்கல வாத்திய சகிதம் மூர்த்தி கும்பங்கள் வீதியுலா, புஸ்பாஞ்சலி, பஞ்சக்கிரந்தி விபேதனம், மூலாயப் பிரவேசனம், நியாசங்கள் நிகழ்ந்து சரியாக 9.30 மணியளவில் எம்பெருமானுக்கும், பரிவார தெய்வங்களுக்கும் மஹாகும்பாபிஷேகம் நிகழ்வுறும், தொடர்ந்து திருக்கதவம் காப்பிடுதல், எஜமான் அபிஷேகம், கர்பாவர்ண அபிஷேகம், தசதர்ணம் நிகழ்ந்து ஆசியுரைகள், வாழ்த்துரைகள், நன்றியுரை, கும்பாபிஷேக திருவருட்பிரசாதம் வழங்கல், சிவாச்சாரியார்கள் கௌரவிப்பு, ரட்ஷா விசர்ஜனம் மு.ப.11.30 மணியளவில் மகா அபிஷேகம், விசேடபூசைகள், மதியம் மாகேஸ்வரபூசை (அன்னதானம்) இடம்பெறும், மாலை 6 மணிக்கு சாயரட்சை பூஜையும் 7 மணியளவில் வசந்தமண்டபபூஜையும் இடம்பெற்று எம்பெருமான் சர்வாலங்கார பூஜிதராக விசேட சாத்துப்படியுடன் வீதியுலா வந்து அருள்பாலிப்பார்.

### வைரவரின் திருவருளுடன் குருவருளும் கிடைக்கட்டும்



கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்று சொல்வார்கள். ஆலய தரிசனம் எம் வாழ்வியலோடு ஒன்றி எம்மை வாழ வழிகாட்டுகின்றன.

கும்பத்திலே உள்ள நீரை கங்கை ஜமுனை, கோதாவரி, நர்மதா, சிந்து, காவேரி, சரஸ்வதி ஆகிய புண்ணிய நதிகளின் நீராகப்பாவித்து மந்திர உச்சாடனங்களினாலே தெய்வீக அலைவினையும் அதிர்வினையும் ஏற்படுத்தி கும்பத்துக்கும் பிம்பத்துக்கும் பொன்னாலான கம்பியினாலே ஒரு தொடர்பினை ஏற்படுத்தி அந்தக் கும்பநீரினாலே பிம்பத்துக்கு அபிஷேகம் செய்கின்றபோது அங்கே சுவாமி சாந்நித்தியம் ஏற்படுகின்றது. இதுவே கும்பாபிஷேகத்தினுடைய சிறப்பாகும். இந்நாளில் அந்த கும்ப நீர் எல்லோர் உடலிலும் பட்டு திருவருள் குருவருள் ஆசிகிடைக்கின்றது. எல்லோருக்கும் இந் நன்னாளில் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசி கூறி வாழ்த்துகின்றேன். மேலும் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் சங்கானைப் பிரதேச மக்களும் முன்னிலை வகிப்பதை அறிவேன். அந்த வகையில் சங்கானை நிகரை அருள்மிகு ஞானவைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று (06.05.2015) நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கௌரவ **ஈ.சரவணபவன்**
நாடாளுமன்ற உறுப்பினர் யாழ்மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம்.


### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



சங்கானைத் திருவூரில் அருள்மழைபொழியும் நிகரை வைரவர் ஆலயத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். கடந்த முப்பது ஆண்டுகளாக இவ்வாலயத்தோடு தொடர்புகொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இவ்வாலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகம் முதல் திருமஞ்ச வெள்ளோட்டம், திருவிழாக்களில் தொடர் விரிவுரையெனப் பல வைபவங்களில் வைரவப் பெருமானின் நல்லருளால் நான் பங்குபற்றினேன். இத்திருக்கோயில் சகல சிறப்புக்களுடனும் அழகாக நிறைவாகக் காட்சியளிக்கிறது. இவ்வாலயத்தின் பேரருள் பிரகாசம் மேலும் சிறக்க வேண்டி மகாகும்பாபிஷேகத்துக்காக உழைத்த அனைவரையும் வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

கலாநிதி **ஆறு. திருமுருகன்,**
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.

### ஆசிச்செய்தி



யாழ்ப்பாணம், சங்கானை, நிகரையம்பதி திருவருள் மிகு சாமுண்டா தேவி சமேத நிகரை ஞான வைரவர் தேவஸ்தான நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று நடைபெறுவது சிறப்புக்குரியது. ஞானவைரவப் பெருமானுடைய கும்பாபிஷேகம், ஈழத்திலே வாழ்கின்ற சைவ மக்களுக்கு அறியாமையைப் போக்கி ஞானத்தைத்தர வேண்டும் என்று பிரார்த்தித்து, இம்மண்ணிலே நல்ல வண்ணம் அனைவரும் வாழப்பிரார்த்தித்து, ஆலயங்கள் சமூக மையங்களாகத் தொழிற்பட இவ்வாலயம் முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்று விரும்பி ஆசி கூறுகின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!
இறைபணியில் **ஜாக்ரத சைதன்யா,**
வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.

### அற்புதங்களை அளித்திடும் வைரவர்



இந்துமா சமுத்திரத்திலே முத்துப் போன்ற ஈழநாட்டிலே வட புலமாக இருக்கும் யாழ்ப்பாணத்தின் மேற்குப்புறமாக இருக்கும் சங்கை நகரிலே இருநூறு ஆண்டுகளுக்கு முன் விஸ்வகுல சமூகத்திலே உள்ள ஓர் இடத்தில் தோன்றிய வைரவப்பெருமான் அயலவருக்கும் ஊர்மக்களுக்கும் பல அற்புதங்களைச் செய்து மக்களின் குல தெய்வமாக விளங்கி வந்தார். ஊர் மக்களின் குலதெய்வமாக விளங்கிய வைரவப் பெருமானுக்கு நிகரை ஞானவைரவப் பெருமான் எனப் பெயர் சூட்டி பல திருப்பணி வேலைகள் செய்து கும்பாபிஷேகங்கள் செய்து வழிபட்டு வந்தார்கள்.

சென்ற வன்செயலால் சிறிது சேதமுற்ற ஆலயத்தைச் சிறந்த முறையில் திருப்பணி வேலைகள் செய்து இன்று மகாகும்பாபிஷேகம் செய்ய முடிவு செய்தமைக்கு எங்கள் நிலையத்தின் சார்பாகவும் மக்களின் சார்பாகவும் பரிபாலன சபைக்கும் திருப்பணிச் சபைக்கும் வாழ்த்து தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**சி.சுந்தரலிங்கம்,**
நிகரை அம்பாள் சனசமூக நிலையம், சங்கானை.

### எம்பெருமான் அடியவர்களுக்கு சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு கிடைக்கட்டும்



உலகத்தின் கர்த்தாவாகிய சிவபெருமானின் 64 திருவுருவங்களில் ஒன்று வைரவமூர்த்தமாகும். உயிர்களைக் காக்கும் பொருட்டு சிவன் வைரவர் மூர்த்தம் எடுத்தார். சந்திரப்பிறையும், முத்தலைச்சூலமும் சிவனையே எண்ணத் தோன்றுகின்றன. ஞானிகளிடம் அறிவுச்சோதியை வளர்க்கும் ஞானவைரவராகவும், ஐம்பூதங்களின் சீற்றத்திலிருந்து ஜீவராசிகளைக்காக்கும் காவல் தெய்வமாகவும் விளங்குகின்றார் எம்பெருமான். அந்தவகையில் சங்கானை- நிகரையம்பதியில் விஸ்வகுல மக்களின் இஷ்ட தெய்வமாக விளங்கும் ஞானவைரவப் பெருமான் சந்நிதியை சிற்பசாஸ்த்திர விதிமுறைகளுக்கு அமைவாக ஆலயம் அமைத்து பலவித வர்ணங்களால் புதுமெருகூட்டி பூரணபொலிவோடு மஹா கும்பாபிஷேகம் காண எல்லாம் வல்ல ஞானவைரவரின் திருவருளும், சிவப்பிரம்மஸ்ரீ.சிவா.நித்தியானந்த சிவாச்சாரியாரின் குருவருளும் கிடைக்கப்பெற்றுள்ளன. நிகழும் மன்மதவருடம், சித்திரை மாதம், 06.05.2015 (சித்திரை 23ஆம் நாள்) அனுசநட்சத்திரமும் புதன்கிழமையும் கூடிய காலை 9 மணி முதல் 09.30 மணி வரையுள்ள சுபவேளையில் நவகுண்டங்களோடு கூடிய அதி உத்தமபக்ஷ மஹாகும்பாபிஷேகம் நிகழவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் அடியவர்களுக்கும் சரீரஉதவி, பணஉதவி புரிந்த எல்லா அன்பர் களுக்கும் எம்பெருமானின் பரிபூரண திருவருள் கிடைக்கவும் சகல ஜீவராசிகட்கும் பேரானந்தப் பெருவாழ்வு கிடைக்கவும் வைரவப்பெருமானைப் பிரார்த்தித்து நல்லாசிகள் கூறி அமைகின்றேன்.

சுபமஸ்து
பிரதிஷ்டாபிரதம குரு, கிரியாலங்காரவாருதி, கிரியா கலாபமணி
சிவப்பிரம்மஸ்ரீ நித்தியானந்த - சிவதாண்டவ சிவாச்சாரியார்.
(பரம்பரை ஆதீனம் இலுப்பைத்தாழ் முருகன் தேவஸ்தானம் சங்கானை)

### சைவத்தைப் பாதுகாத்த சூலமே வைரவர்



ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வலிகாமம் மேற்குப் பகுதி சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை நிறைவாகக் கொண்ட சிவபூமியாகும். இப்பிரதேச பண்பாட்டின் நிலைக்களமாக இயக்க சக்தியாக ஆலயங்கள் விளங்குகின்றன. இங்கு விழாக்கள், விரதங்கள், சடங்குகள் கிரியைகளுக்குக் குறைவில்லை. அந்தவகையில் எமது பிரதேசத்தின் சங்கானைப் பகுதியிலுள்ள நிகரையம்பதி திருவருள்மிகு சாமுண்டாதேவி சமேத நிகரை ஞானவைரவர் தேவஸ்தானத்தில் இன்று நடைபெறுகின்ற மகாகும்பாபிஷேகக் கிரியை சிறப்பானது. இதனைச் சிறப் பிக்கும் வகையில் வெளிவருகின்ற கும்பாபி ஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்சியடைகின்றேன்.

நாமரூபங்களைக் கடந்து எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனின் திருவருளை சாதாரண மனிதனும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக எம்முன்னோர்கள் ஆலயங்களை அமைத்தனர். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனக் கூறிவைத்தனர். உடலும் உள்ளமும் தூய்மை பெற வழிபாடுகள் இயற்றினர். இப்பரம்பொருளின் உயர்ந்த வடிவமாக வைரவ மூர்த்தம் விளங்குகின்றது. ஈழத்தில் போர்த்துக்கேயர் ஆட்சி நிலவிய காலத்தில் மறைமுகமாக நடைபெற்ற வைரவர் வழிபாட்டினூடாகவே சைவமரபு பாதுகாக்கப்பட்டதெனலாம். எவ்வாறா யினும் சங்கானை மக்களின் கூட்டுமுயற்சியாக, கூட்டுப்பொறுப்பாக நடைபெறும் வைரவப் பெருமானுடைய கும்பாபிஷேகக் கிரியைகள் எல்லாம் பூரணமாக நிறைவேறி, எம்பெருமானுடைய அருட்பேறுகள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்கவேண்டும் என வாழ்த்துவதுடன் இவ்வான்மீகப் பணியில் ஈடுபட்டுள்ள சிவாச்சாரியார்கள், அறங்காவலர்கள், வழிபடுவோர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர்களின் பணிகள் அனைத்தும் சிறப்படைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
**அ.சோதிநாதன்,** பிரதேச செயலர்,வலி மேற்கு

### அனைவருக்கும் திருவருள் கிடைக்கட்டும்



ஈழத்தின் வடபால் வலி.மேற்குப் பிரதேசத்தில் சங்கானை என்னும் புனித பூமியிலே எழுந் தருளி அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற திருவருள்மிகு சாமுண்டாதேவி சமேத நிகரை ஞானவைரவப் பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகவிழாநடைபெறுவதையிட்டு மிக்கமகிழ்ச்சி யடைகின்றேன்.எமது பாரம்பரிய பண்பாட்டு மரபுகளைப் பேணி வளர்க்கும் இடமாக ஆலயங்கள் காணப்படுகின்றன. "மண்ணில் நல்ல வண்ணம் வாழ" ஆலயங்கள் வழிகாட்டுகின்றன. இதன் மூலமாக இளம் சந்ததியினரிடையே பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களைப் பரவச் செய்யும் பணியைச் செய்கின்றன. ஆலயங்கள் புனிதமடைவதால் ஆலயச்சூழலில் வாழும் மக்களும் புனித மடைவார்கள். இவ்வாறான பணிகளைச் செய்யும் ஆலயங்களைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்து பராமரிப்பது முக்கிய கடமையாகும். அந்தவகையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இவ்வாலயத்தில் நடைபெறுவது ஊரருக்கும், ஆலயத்துக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். வைரவ வழிபாடு நம் சமயத்தில் நீண்டகாலமாக உள்ளது. சிவனுடைய 64 மூர்த்தங்களுக்கு இடையே ஒரு மூர்த்தமாகவே வைரவமூர்த்தத்தைக் குறிப்பிடுகின்றனர்.எனவே இந்த கும்பாபிஷேக விழாவில் பங்கேற்கும் அனைத்துப் பக்தர்களும் வைரவப்பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்பதோடு, இந்த ஆன்மீகப் பணிக்காக பாடுபட்ட அனைவருக்கும் வைரவப்பெருமானின் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து இந்த ஆலயம் மேன்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகின்றேன்.

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

**திருமதி. ஜனார்த்தனன் அகல்யா,** அபிவிருத்தி உத்தியோகத்தர் (இந்து கலாசாரம்)
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

### வைரவ

இந்து சமுத்திரத்
வடபால் அமைந்துள்
மும், தானதர்மமும், இ
திருவூரில் நிகரை எ
மைந்துள்ள நிகரை ஞ
நூற்றுஐம்பது, இரு
பெற்றதாகச் செவிவழி
சங்கானை நகர
வீதியில் பரந்தகாணி
இருந்தன. அந்த வீதி
கிளுவை மரத்தடியில்
இதனைக் கேள்வியுற்
சூலத்தினை அமைத்
காலவோட்டத்தில்
பெற்றுள்ளது. சரஸ்வ
பெற்று வந்தன. 194
பெற்று மகா கும்பா
இடம்பெற்று வந்த
பரிபாலன சபை அ
2001 ஆம் ஆண்டு ம
அவ்வப்போது ப
சிறப்பாக ஆகமவிதி
இந்திய திருவாவடுது
மலரில் இலங்கையி
ஒன்றாக எமது ஆலய
புக்கு எடுத்துக்காட்ட
வைரவப் பெருமானி
சபை அமைக்கப்பட்டு
களாலும் சரீர உதவிக
வர்ண கட்டட அ
வடிவங்களாலும் அல
வைரவர் ஆலயங்க
நைமித்திய பூஜைகள்
அலங்காரத் திருவிழா
பரணி, சரஸ்வதி பூ
பூஜைகள் என சிறப்

...வப பிரம்மனே நமஹ

# ம், சங்கானை, நிகரையம்பதி

## ழண்டாதேவி சமேத நிகரை ஞானவைரவர் தேவஸ்தானம்

## பந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

## 2015 (சித்திரை 23 ஆம் நாள்) புதன்கிழமை

உ

### வைரவப் பெருமான் துணை

### ஆலய வரலாறு

சமுத்திரத்தின் முத்தெனப்படும் இலங்கைத் திருநாட்டின் அமைந்துள்ள வலிகாமம் மேற்குப் பகுதியில் சைவகலாசார தர்மமும், இறை நம்பிக்கையும் கொண்ட சங்கானை எனும் நிகரை என்கின்ற திவ்யசேத்திரத்தில் கோயில் கொண்ட நிகரை ஞானவைரவப் பெருமான் ஆலயம் இற்றைக்கு சுமார் பது, இருநூறு வருடங்களுக்கு முற்பட்டு தோற்றம் ச் செவிவழிக் கதைகளாக அறியக் கிடைக்கின்றது

னை நகர மத்தியிலிருந்து வடக்குப் பக்கமாக செல்லும் ரந்தகாணி கிளுவைமரங்கள், பனைமரங்கள் அடர்த்தியாக அந்த வீதியால் செல்வோர் இந்தக் காணியில் இருந்த பெரிய மரத்தடியில் வைரவர் இருப்பதாக கண்ணுற்று கூறிவந்தனர். கேள்வியுற்ற விஸ்வக்ஞ குலத்தைச் சேர்ந்தவர்கள் வைரவ ன் அமைத்து வழிபட்டுவரலாயினர்.

வாட்டத்தில் ஆலயத்தை அமைத்து கும்பாபிஷேகம் நடை ாது. சரஸ்வதி பூஜை, திருவெம்பாவைப் பூஜைகள் நடை ந்தன. 1948 ஆம் ஆண்டளவில் திருத்த வேலைகள் இடம் கா கும்பாபிஷேகம் நடைபெற்று, விசேட திருவிழாக்கள் று வந்தன. அதன் பின்னர் 1985 ஆம் ஆண்டில் புதிய சபை அமைத்து 1987 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகமும் ஆண்டு மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றன.

ப்போது பற்பல திருப்பணிவேலைகள் செய்து ஆலயம் ஆகமவிதிகளுடன் அமைந்து காட்சிதருகின்றது. மேலும் ருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட மகா வைரவர் என்ற லங்கையின் தொன்மைவாய்ந்த வைரவர் ஆலயங்களில் மது ஆலயத்தின் பழைமை பற்றிய தகவல் ஆலயத்தின் சிறப் ந்துக்காட்டாக அமைந்துள்ளது. இந்த ஆண்டு நிகரை ஞான பெருமானின் திருவருளும், குருவருளும் கைகூடி திருப்பணிச் மக்கப்பட்டு அதன் மூலம் விஷ்வக்ஞ மக்களின் அறக் கொடை ரீர உதவிகளாலும் இந்திய, உள்ளூர் சிற்ப விற்பன்னர்களின் ட்ட அமைப் பாளர்களின் கலை அம்சம் பொருந்திய ாலும் அலங்கரிக்கப்பட்டு இலங்கைத் திருநாட்டின் சிறந்த ஆலயங்களில் ஒன்றாக அமையப்பெற்றுள்ளது.நித்திய, பூஜைகளும் ஆண்டு தோறும் தைப்பொங்கல், சிவராத்திரி, திருவிழாக்கள், சித்திரைப் பொங்கல், வைகாசிப் பொங்கல், ஸ்வதி பூஜைகள், திருவெம்பாவைப் பூஜைகள், அஷ்டமி என சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

### அருளாசிச் செய்தி

சிவனேயச் செல்வர்களே!




சங்கானைப் பிரதேசத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் வைரவப் பெருமானுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதனையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். பழமையும், பெருமையும் வாய்ந்த இந்த ஆலயத்தின் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் வைரவப் பெருமானுக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவது இவ்வூருக்கும் ஆலயத்துக்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். இதனை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக! அப்புனித காரியத்தை செயற்படுத்தும் குருமாருக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் ஊர்மக்களுக்கும் இறைவனுடைய அருள் கிடைப்பதாக!

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்.

### ஒல்லாந்தர் கால பழைமைமிக்க ஆலயம்



இயற்கை எழில்மிகு சங்கானை பதியினில் காவல் தெய்வமாக விளங்கும் வைரவர் ஆலயங்களின் மத்தியில் விஸ்வகுல மக்களின் குலதெய்வமாக கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நிகரை ஞானவைரவப் பெருமான் ஆலயம் இலங்கையின் பிரதான வைரவர் ஆலயங்களில் ஒன்றாகும்.

இலங்கையின் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் சைவர்கள் வெளிப்படையாகத் தம் வழிபாடுகளை நடத்துவதற்கு எதிரான பல தடைகள், தண்டனைகள், இம்சைகள் இருந்தகாலம், இவ் விதமான மதபேராதிக்கம் கொண்டு செயற்பட்ட காலத்தில் எம்மூதாதையர்கள் நிகரைவைரவர் ஆலயம் என சிறுகோயில் அமைத்து வழிபட்டு வந்தனர். பின்னர் 1932ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தை நடத்தினர்.

படிப்படியாக ஆலயம் பெருவிருட்சமாக வளர்ந்து பூரணத்துவம் அடைந்த கோயிலாக தோற்றம் பெற்று, பரிவாரங்களும், தல விருட்சமும் நிறைந்து ஒரு பெரிய ஆலயமாகக் காணப்படுகின்றது. இந்த ஆலயத்தில் இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளமை எமக்கு பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. இன்றைய இந்நன்நாளில் எம்மக்கள் அமைதியும் சமாதானமும் பெற்று சீரும்சிறப்போடும் வாழ நிகரையம்பதியான் அருளளிப்பார்.

"எல்லோரும் எல்லாமே பெறவேண்டும்
இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்"
என வாழ்த்தி அமைகின்றேன்

**தலைவர் - தருமலிங்கம் கமலகாந்தன்.நிகரை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை.**

### நித்தியபூசைக் குருமணியின் ஆசியுரை




சங்கானைப் பதியினிலே கோயில் கொண்டு நிகரற்ற அருளாட்சி புரிகின்ற நிகரை சாமுண்டா தேவி சமேத ஸ்ரீஞானவைரவப் பெருமானின் மகாகும்பாபிஷேகத்தினை முன்னிட்டு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எம் பெருமான் சிவபாலன், வற்றாத அருள் பொழிந்து வீற்றிருந்து, வரும் அடியார்களுக்கு சகல வரங்களும் அருளி, குறைகள் தீர்த்து நற்கதி அருளும் தெய்வம். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு குலம் காக்கும் தெய்வமாக இருந்து காத்தருள்புரிகின்றார். அப்பெருமானுக்கு கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா நடைபெறுவது, அண்டி வரும் அடியார்கள் அனைவருக்கும் அமைதி, ஆனந்தம், பெருவாழ்வு அளிக்கும். கும்பாபிஷேகம் காண்பது கோடிபுண்ணியம். இப்பெருவிழா சீருற்று, சிறப்புப் பெற்று, வெற்றிபெறவும், மாறாத, நிலையான, திகட்டாத, பேரின்பமான, ஒளிமயமான வாழ்வு எல்லோருக்கும் அமைய எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானின் திருவடிகளை வணங்கி அருளாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நித்திய பூசைக் குருமணி பிரம்மஸ்ரீ **சுபா சந்திரசேகரசர்மா**

### நமக்கு நல்லாட்சி அளிக்கும் வைரவர்



உலகத்தை முதல்முதல் தோற்றுவித்த விஸ்வகர்ம பரப்பிரம்மம் வழியில் தோன்றி பஞ்சகம்மாளர்களின் விஸ்வக்ஞ குலமக்களின் குலதெய்வமாக சங்கானையூரின் மத்தியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நிகரை ஞான வைரவப் பெருமான் ஆலயம் மிகவும் தனிச்சிறப்புமிக்க ஆலயமாகும்.

இந்த ஆலயம் இலங்கையின் பிரசித்திபெற்ற வைரவ ஆலயங்களில் ஒன்றாகும். இங்கு பதினொரு தினங்கள் திருவிழா நடைபெறும். பதினோராவது நாள் மாசி மகத்தன்று அலங்கார உற்சவ பூர்த்திவிழா இடம்பெறும். தற்போது எமது ஆலயத்தில் புனருத்தாரண திருத்தவேலைகள் யாவும் நிறைவு பெற்றுள்ளன. இன்றையதினம் 06.05.2015 மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றமை இந்து மக்களின் வாழ்வில் ஒரு சுபீட்சமான நாளாகும். இந்நாளில் நாட்டில் சாந்தி, சமாதானம் மலர்ந்து எம் மக்கள் நல்வாழ்வு வாழ நிகரை ஞானவைரவப் பெருமான் நல்லருளாட்சி புரிய பிரார்த்திக்கின்றேன்.

"தனந்தரும் நிகரை வைரவர் தளிரடி பணிந்திடல்
தளர்வுகள் தீர்ந்து விடும்"
தலைவர்- **இரங்கநாதன் பார்த்தீபன்**
நிகரை இந்து இளைஞர் மன்றம்

### சங்கானை காவல் தெய்வம் வைரவர்



"சரியையில் ஆணவம் கால் சரிந்திடும்
கிரியையில் அரைமலம் கெடுதிஉற்றிடும்
மருவுயோகத்தில் முக்கால் மடிந்திடும்
விரி சிவஞானத்தில் முற்றும் வீயுமே"

இந்து சமுத்திரத்தின் முத்து எனத் திகழும் இலங்கைத் திருநாட்டிலே எழில் கொஞ்சும் சங்கானையின் கண் அமைந்துள்ள நிகரையில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டு இருக்கின்ற திருவருள் மிகு சாமுண்டா தேவி சமேத நிகரை ஞானவைரவர் ஆலயத்தின் மஹாகும் பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்களினூடாக இறைவனை வழிபட்டு முத்தியடையலாம் என வழிகாட்டும் சைவப்பெருநெறியில் சரியைத் தொண்டை ஆற்ற அடியேனுக்கு கிடைத்த வாய்ப்பை பெரும்பாக்கியமாக ஏற்று நான் தொண்டு ஆற்றிக்கொண்டு இருக்கிறேன்.

என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற திருநாவுக்கரசரின் நன் வாசகத்தை நானும் சிரம் மேற்கொண்டு சிறு பணியைச் செய்து வைரவப் பெருமானின் கடைக்கண்பார்வை என் மீது மட்டும் அல்லாது இந்த ஊர்முழுவதும் படவேண்டும் என்று இறைஞ்சுகிறேன்.

காவல் தெய்வமாக இன்று புதுப்பொலிவு பெற்றுள்ள வைரவரின் கும்பாபிஷேகத்தை காணுகின்ற அரும் பெரும்பேறு பெற்றவனாக இந்த அடியேனும் இவ்வூர் அடியார்களும் உள்ளன்போடு இவ் ஆலயத்தின் திருப்பணிகளுக்கும் மற்றும் பல்வேறு வகைகளிலும் பங்கெடுத்த அனைத்து அடியார்களுக்கும் எம்பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுமென இருகரம் கூப்பி வணங்குவதோடு திருவருள்மிகு சாமுண்டாதேவி சமேத நிகரை ஞானவைரவப் பெருமானாரின் ஆலய மகாகும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துக்களையும் கூறி நிற்கிறேன்.

**பா. ஜெயபாலன்**
சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலயம். கும்பாபிஷேக திருப்பணிச் சபைத் தலைவர்

### அபிவிருத்திக்கு அருள் பாலிக்கும் வைரவர்



இன்று வெகுசிறப்பாக குடமுழுக்கு பெறும் சங்கானை நிகரை ஞான வைர வர் பாதம் பணிந்து இந்த நிகழ்விற்கு வெகு ஒற்று மையுடனும் இந்து கலாசாரத்துடனும் மிகுந்த அர்ப்பணிப்போடும் அறப்பணியாற்றும் ஆலய பரிபாலன சபையினரையும் தொண்டர்களையும் பாராட்டுகின்றேன்.

சங்கானை நகரத்தின் மத்தியில் அருள் பாலித்து நிற்கும் எம் வைரவப்பெருமான் சங்கானைப் பிரதேசம் நகர அந்தஸ்தைப் பெற்று வலி.மேற்குப் பிரதேசத்திற்கு வலுச்சேர்க்கவும் சங்கானைப் பிரதேசம்வளம்பெறும் பொருட்டு முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி கள் இனிதே நிறைவுறவும் அருள்பாலிக்க வேண்டி நிற்பதோடு சாந்தி சமாதானம் பெருகிடவும் வேண்டி நிற்கின்றேன்.

என்றும் மக்கள் பணியில்
**திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன்.**
தவிசாளர், வலி மேற்கு பிரதேச சபை.

### வேண்டுவார்க்கருளும் வைரவர்



வளம் சூழ்ந்த நிகரை மண்ணிலே கும்பாபிஷேக பெருவிழா காணுகின்ற சாமுண்டாதேவி சமேத நிகரை ஞானவைரவர் ஆலயத் தின் தொன்மைகளும், புதுமைகளும் ஊரறிந்தவையே. மக்களை நல்வழிப்படுத்தி நேரிய திசையிலே கொண்டு செல்கின்ற பெரும் பொறுப்பு ஆலயங்களிற்கே உள்ளது. அவ்வாறான ஆலயங்கள் தங்களிற்கே உரிய நியமங்களைக் கொண்டிலங்க வேண்டியவையே. அந்தவகையில் இந்த ஆலயமும் நைமித்திய கிரியைகளில் ஒன்றாக விளங்குகின்ற கும்பாபிஷேகத்தை காணுகின்றது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர்வாக்கு ஆலயவழிபாட்டின் முக்கியத்துவம் எவ்வளவு தூரம் வலியுறுத்தப்பட்டு இருக்கின்றது என்பதனை இதன் மூலம் அறியலாம். அந்நியர் ஆட்சிக்காலத்திலே எம் சமயத்தினையும், சமய ஆசாரங்களையும் காத்த பெருமை வைரவர் வழிபாட் டிற்கே உரியது. இவ்வாறான பெருமைகளையெல்லாம் கொண்டு விளங்கும் இந்த ஆலயம் மென்மேலும் சிறப்புற்று இயங்கி சமயப்பணியோடு சமூகப்பணியிலும் ஈடுபட்டு நலம் காக்கவேண்டும் என்று வேண்டுவ தோடு ஆலயத்தின் கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**த.பிருந்தாகரன்.**
பிரதேச செயலாளர் பிரதேச செயலகம்
மாந்தை கிழக்கு.

...றப்படைய

...ரி அடியவர் ...னவைரவப் ... பாரம்பரிய ...ணம் வாழ" ...ளைப் பரவச் ...புனித மடை ...மையாகும். ...ஊருக்கும், ...ய 64 மூர்த் ...ரும் அனைத் ...பட்ட அனை ...துகின்றேன்.

**தேவஸ்தான பரிபாலன சபையினர்**
**கும்பாபிஷேக திருப்பணிச்சபையினர்**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மெனிக்பாம் காணியை முழுங்கும் முயற்சியா...?

வவுனியா, செட்டிகுளம், மெனிக்பாம் நலன் புரி நிலையத்துக்கு மூடுவிழா நடத்துவதற்காக, அங்கு தங்கியிருந்த கேப்பாபிலவு மக்களை நிர்ப் பந்தித்து, அரசு வெளியேற்றி வருகிறது --

முகாமைவிட்டு வெளியேறாவிட்டால் உதவிகள் அனைத்தும் நிறுத்தப்படும் என்று மக்கள் நிர்ப் பந்திக்கப் பட்டுள்ளனர். கண்ணி வெடிகள் அகற்றப்படாத பகுதிக்குள் மக்களை எப்படி மீள் குடியேற்றம் செய்யப் போகிறார்கள்? --

வவுனியா மாவட்டத்தில் அகதிமுகாம்களில் அகதிகளாக எவரும் இல்லை என்று காட்டுவதற்காகவே இந்த நாடகமா? என்று மக்கள் கேட்கிறார்கள்.

மேலே பதிக்கப்பட்டுள்ள வரிகளை வாசித்ததும் உதயனின் வாசகர்களில் மிகப் பலருக்கு, சுமார் மூன்றரை வருடங்களுக்கு முந்திய வடக்கின் நிலைமை நினைவுக்கு வரக்கூடும் --

அவர்களது ஞாபகசக்தி, சுமார் மூன்று வருடங்களுக்கு, முந்தைய வடக்கின் நிலையை மீட்டுப் பார்க்கும் என எதிர்பார்க்கலாம்; நம்பலாம்.

ஆம், வவுனியா, செட்டிக்குளம் நலன்புரி முகாமில் தங்கியிருந்த கேப்பாபிலவு, மந்துவில் கிராமங்களைச் சேர்ந்த 361 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பலவந்தமாக, பெரும் பாதுகாப்புடன் இராணுவத்தினரால் செட்டிகுளத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டதை விவரிக்கும் வகையில் "உதயன்" 2012 செப்ரெம்பர் மாதத்தின் இறுதி வாரத்தில் தொடர்ச்சியாகச் செய்திகளை வெளியிட்டிருந்தது.

கேப்பாபிலவு மக்கள், அப்போதைய அரசின் எடுபிடியான இராணுவத் தரப்பினால், மனிதாபிமானம் துடைத்து எறியப்பட்ட நிலையில், இடம் பெயர்க்கப்பட்ட அக்கிரமத்தை, அநியாயத்தை, தொடர்ந்து மூன்று நாள்களாக வெளிக்கொணர்ந்த உதயனின் செய்திகள் வாசகர்களுக்கு, இப்போது மறந்துபோன விடயமாகிப் போயிருக்கலாம். ஆனால் அவை ஆவணப்படுத்தப்பட்டவை.

அவற்றை மீள ஞாபகப்படுத்த வேண்டிய வேளை -- சந்தர்ப்பம் --இப்போது மேலெழுந்துள்ளது.

மெனிக்பாம் காணியை, இராணுவத்தினரின் தேவைக்கு வழங்குவதில்லை என்று, வவுனியா செயலகத்தில், கடந்த வாரம் நடைபெற்ற மீள் குடியேற்றம் தொடர்பான மாநாட்டில் (கூட்டத்தில்) முடிவு செய்யப்பட்டது.

அது தொடர்பில், வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சின் ஊடகப் பிரிவு விடுத்த உத்தியோகபூர்வ செய்திக்குறிப்பில் அந்த முடிவு குறித்து விஸ்தாரமாக விவரிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் தேவைகளுக்குப் புதிதாக (மக்களின்) காணிகளை வழங்குவது பொருத்தமற்றது. இத்தகைய விடயங்களுக்கு (பிரச்சினைகளுக்கு) தீர்வு காணும் வகையில், மத்திய மீள் குடியேற்ற அமைச்சரால் --அமைச்சால் உரிய அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக தகுதிவாய்ந்த உயர் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

தமிழர் பிரதேசங்களை அரச உடமையாக்கும் புதிய அலை வேகவேகமாக மேலெழுந்து வருவதனையே, மேற்சொன்ன தகவல் -- நிலைப்பாடு, பால் வெள்ளை போல் வெளிச்சமாகக் காட்டுகிறது.

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அரச தேவைக்கு என்று சாயம் பூசி அபகரிக்கும் உத்தியை, புதிய அரசு மேலெழுப்ப முனைகிறதோ என்ற சந்தேகம் மேலுயர்வதைத் தவிர்க்க இயலாதுள்ளது. அதேவேளை இது குறித்த மீள் குடியேற்ற அமைச்சரின் பதில் எதுவாக இருக்கும் என்ற பென்னம்பெரிய வினா மேல் உயர்ந்து நிற்கிறது.

தமிழ் மக்களின் வாக்குகளால் புதிய பதவியைப் பெற்ற ஜனாதிபதியின் நிலைப்பாடும், இது விடயத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எதிர்பார்க்கலாமா.....??

# அரசமைப்பு திருத்தத்தினால் தமிழர்களுக்கு பயன் உண்டா?



> அதிகார மமதையினால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின்போது நிறைவேற்றப்பட்ட 17 ஆவது திருத்தச் சட்டத்துக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரத்துக்கு வலுச்சேர்க்கக் கூடியதான 18 ஆவது திருத்தச் சட் டத்தை உருவாக்கியவர். தற்போது 18 ஆவது திருத்தச் சட்டம் ஒழிக் கப்பட்டு 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் மீண்டும் தான் ஜனாதி பதியாக வரமுடியாது என்பதைக் கருத்தில் கொண்ட அவர் பிரதமராகும் எண்ணத்தையும் கைகழுவிவிட்டார் என்றே தெரிகிறது.

**■ வந்தியத்தேவர்**

தான் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிக்கவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்த அறிவிப்பு வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தனக்குப் பயந்துதான் 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததாக அவர் ஏற்கனவே தெரிவித்திருந்தார். குறிப்பிட்ட சட்டத்திருத்தம் நிறைவேறாது தடுப்பதில் அவர் மும்முரமாகச் செயற்பட்டார். அவரது ஆதரவாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு எதிராகச் செயற்பட்டதுடன் நாடாளுமன்றத்துக்குள் உட்கார்ந்து போராட்டங்கள் வேறு நடத்தினார்கள். குறிப்பிட்ட சட்டத் திருத்தம் பின்னர் நாடாளுமன்றத்தில்மூன்றில் இரண்டு வாக்குகளைப் பெற்று பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியாக இருந்து, அதற்கு உகந்தவகையில் காய் நகர்த்தல்களை முன்னெடுத்ததால் மஹிந்தவுக்காக மார்தட்டியவர்களும் தமது போராட்டங்களைக் வைவிட்டு இறுதியில் ஜனாதிபதிக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டியதாயிற்று. மஹிந்த இதனால் மனமுடைந்துபோனார். தனக்காக இதுவரை பேசியவர்களையும் தன்னோடு ஒட்டிக் கொண்டிருந்தவர்களையும் இப்போது புரிந்துகொண்டதால் அவர்கள் மீது நம்பிக்கை இழந்த மஹிந்த அவர்களை நம்பித் தேர்தலில் இறங்கத் தயாராக இல்லாத நிலையிலேயே, தான் போட்டியிடுவதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கலாம்.

தற்போதைய அரசியல்களத்தில் மஹிந்த ஆதரவு இழந்த ஒருவராகவே தென்படுகின்றார். அவர் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலங்களில் தமிழர்களை மட்டுமே தமது எதிரிகளாகக் கொண்டு அவர்களை அழிக்க முனைந்தவரல்ல. சரத் பொன்சேகா கூறுவது போன்று நாட்டின் முக்கிய பொறுப்புக்களில் இந்த சிங்களப் பிரமுகர்களையும் பழிவாங்க அவர் தயங்கவில்லை. எல்லாமே நானாக வேண்டும். என்னை மிஞ்சியதாக யாரும் இருக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தவர். தனது அதிகார மமதையினால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின்போது நிறைவேற்றப்பட்ட 17 ஆவது திருத்தச் சட்டத்துக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரத்துக்கு வலுச்சேர்க்கக் கூடியதான 18 ஆவது திருத்தச் சட்டத்தை உருவாக்கியவர். தற்போது 18 ஆவது திருத்தச் சட்டம் ஒழிக்கப்பட்டு 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் மீண்டும் தான் ஜனாதிபதியாக வரமுடியாது என்பதைக் கருத்தில் கொண்ட அவர் பிரதமராகும் எண்ணத்தையும் கைகழுவி விட்டார் என்றே தெரிகிறது.

சர்வாதிகாரத்துக்கு சாவுமணியடிக்கப்பட்டுள்ளதால் 19 ஆவது திருத்தச் சட்டம் நாட்டில் ஜனநாயகம் துளிர் விடக் காரணமாகிவிட்டது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்வதற்கு இது உதவும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தலைவர்களைப் பொறுத்தவரை அவர்கள் தொடர்ந்து அவநம்பிக்கையுடனேயே வாழ்ந்து வருகின்றனர். அதனைப் போக்கும் வகையில் தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வு கிடைக்குமென அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களைப் பொறுத்தவரை பொலிஸ், காணி போன்ற விடயங்களை உள்ளடக்கியதான மாநில சுயாட்சிதான் அவர்களது அபிலாசையாகவுள்ளது. இந்தத் திருத் தம் அதற்கு வழியமைக்குமா என் பதுதான் அவர்களது எதிர்பார்ப்பாகும். கொழும்பு அரசின் தலையீடில்லாத தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைப்பதற்கு 19 ஆவது திருத்தச்சட்டம் இடமளிக்கிறதா என்பதை தமிழர் பிரதிநிதிகள் தெளிவுபடுத்த வேண்டும். இந்தத் திருத்தத்தின் மூலம் அதிகாரங்களை விட்டுக் கொடுத்து சிறுபான்மை மக்களுக்குரிய சலுகைகளை வழங்க விரும்பாததன் காரணமாகவே மஹிந்த தேர்தலில் போட்டியிடப் பின்வாங்குகிறார். இதனால் சிறுபான்மை மக்களுக்கு நன்மையுண்டு. அரசியல் உரிமைகள் கிடைக்க வழியும் ஏற்படும். பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறிய இந்தத் திருத்தச் சட்டத்தினால் எதிர்காலத்தில் என்ன நன்மைகள் கிடைக்கப் போகின்றன என்பது போகப் போகத் தான் தெரிய வரும். ■

# 19 ஆவது திருத்தம் நிறைவேற ஜனாதிபதி எடுத்த முயற்சி

## ராஜபக்ஷ இன்னமும் சமரசத்துக்கு தயாரில்லை

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
**ரெங்கன்**


19 ஆவது திருத்தத்தின் முதல் வரைவில் காணப்பட்ட எல்லா அம்சங்களும் அதில் இல்லாமல் போனாலும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் அதிகாரங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டே இருக்கின்றன. சகல விதமான அதிகாரங்களும் ஒரு தனிமனிதனிடம் குவிந்து கிடந்தமையின் காரணமாக நண்பர்களின் அதிகார்ம், உறவினர்களின் அதிகாரம், இலஞ்சம், ஊழல், தப்பான ஆட்சி முதலியவை தலைவிரித்தாடிய நிலைமை இப்போது பெருமளவில் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டன.

ஜனாதிபதியானவர் நாடாளுமன்றத்துக்கு பதில் கூறும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பதவியிலிருக்கும் ஜனாதிபதி இரண்டு முறைக்கு மட்டுமே பதவியிலிருக்கலாம் என்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்ற பதவிக்காலம் நான்கு ஆண்டுகளும் ஆறுமாதங்களும் நிறைவேறுவதற்கு முன் ஜனாதிபதியால் அது கலைக்கப்பட முடியாது. சுயாதீன ஆணைக் குழுக்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மீள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. தகவல் அறியும் உரிமையானது, குடிமக்களின் அரசமைப்பு உரிமையாக நிறுவப்பட்டுள்ளது.

இவை அனைத்துக்கும் பாராட்டப்பட வேண்டிய ஒரு மனிதர் யார் என்றால், அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான் என்பதில் கேள்விக்கிடமில்லை. செவ்வாய்க்கிழமை மாலை ஆறுமணியளவில் இரண்டாவது வாசிப்பு சபையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னரும்கூட 19 ஆவது திருத்தம் தோற்கடிக்கப்பட இருந்தமை பலருக்குத் தெரிந்திருக்காது. பொறுமையுடன் மற்றும் திரைமறைவு முயற்சிகளை அவர் மேற்கொண்டதனால் அந்த நிலைமை முறியடிக்கப்பட்டது. சற்றுமுன் வரைவைத் தோல்வியுறச் செய்வதற்கு ஒரு நிலைப்பாட்டை எடுத்திருந்த அவருடைய சொந்தக்கட்சி உறுப்பினர்களுடனேயே அவர் ஓர் இணக்கப்பாட்டை உருவாக்கியமை பல வகையில் முக்கியத்துவத்துக்குரியதாகும். கட்சியின் தலைவர் என்ற முறையில் அதனை ஒருங்கிணைத்துள்ளதுடன், அவர்களின் ஆதரவையும் வென்றுள்ளார். அந்த ஒருமைப்பாடு மேலும் வலுவடைந்திருப்பது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மேதின பேரணியில் வெளிப்படுவதாய் இருந்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது முன்னாள் சுகாதார அமைச்சரினால் தோற்கடிக்கப்பட்ட தாக்கத்திலிருந்து இன்னமும் விடுபடாததனால் மேதின மேடையில் தோன்றுவதற்குத் தயக்கம் காட்டியுள்ளார். என்றாலும் அந்தப் பேரணிக்கு அவர் செய்தியொன்றை கட்சியின் போசகர்களில் ஒருவர் என்ற முறையில் அனுப்பியிருந்தார். கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவினால் அது கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. இவ்வாறு அவர் செய்திருப்பது கட்சியினருடன் சமரசம் செய்து கொள்ள எச்சரிக்கையுடன் முயல்கிறார் என்பதைக் காட்டுகிறது. தனது சொந்தப் பேரணியை நடத்தாது விட்டிருப்பதுடன் விரைவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்கவும் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ராஜபக்ஷ அனுப்பியிருந்த செய்தியில், 30 வருட கால பிரிவினைவாதப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து, உழைக்கும் மக்கள் உரிமைகளை மட்டுமல்ல முழு நாட்டு மக்களின் உரிமைகளையும் நிலைநாட்டினோம். இலங்கை விவகாரங்களை வெளிநாடுகள் தீர்மானிப்பதை நிறுத்தினோம். இதற்காகவே உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊழல் சக்திகள் மக்களுக்காக நாம் சாதித்திருந்த வெற்றியைத் தோற்கடித்துவிட்டன. முற்போக்கு சக்திகள் எல்லாம் ஒன்றிணைவதன் மூலம் மட்டுமே ஐ.தே.கவை தோற்கடிக்க முடியும். 1951 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செய்தது போன்று உழைக்கும் வர்க்கத்தைக் காப்பாற்ற நானும் இந்த சக்திகளுடன் சேர்ந்து கொள்கின்றேன் என்று தெரிவித்திருந்தார்.

இருந்தாலும், ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளர்களான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, மகாஜன எக்சத் பெரமுன தலைவர் தினேஷ் குணவர்தன, ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார, லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திஸ்ஸ விதாரண, பிவித்துரு ஹெல உறுமய தலைவர் உதய கம்பன்பில போன்றவர்களை உள்ளடக்கிய கட்சித் தலைவர்கள் கிருலப்பனையில் தங்களின் தனியான மேதினக் கொண்டாட்டங்களை நடத்தினார்கள். இந்தக் கூட்டத்திலும் வாசிப்பதற்கென ராஜபக்ஷ செய்தியொன்றை அனுப்பியிருந்தார். ஆனால் வித்தியாசமான சொற் பிரயோகங்களைக் கொண்டதாக அது இருந்தது.

ஜனதா வாதி ரஜயக் பிஹி கரன்ன – மக்கள் அரசு ஒன்றை நிறுவுவதற்காகவே தாங்கள் அந்தப் பேரணியை நடத்துவதாக அதன் அமைப்பாளர்கள் கூறிக் கொண்டார்கள். ராஜபக்ஷ வேறு ஓர் அரசியல் அணியையும் ஊக்குவிக்கிறார் என்பதன் நோக்கம் அவர் தொடர்ந்தும் தமது தெரிவை முடிவுசெய்யவில்லை என்பதையே காட்டுகின்றது. நிலைமைகள் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதே அவர் அவதானித்துக் கொண்டிருக்கிறார் என்பதே இந்த நகர்வுகளின் கருத்து. ராஜபக்ஷ தாம் விரும்பும் எங்கிருந்தும் போட்டியிட முடியும். ஆனால் பிரதம அமைச்சர் பதவிக்கு அவர் வேட்பாளராய் நிறுத்தப்படுவதை ஆதரிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே வலியுறுத்தியிருப்பது இதற்கொரு காரணமாய் இருக்கலாம்.





**"30 வருட கால பிரிவினைவாதப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து, உழைக்கும் மக்கள் உரிமைகளை மட்டுமல்ல முழு நாட்டு மக்களின் உரிமைகளையும் நிலைநாட்டினோம். இலங்கை விவகாரங்களை வெளிநாடுகள் தீர்மானிப்பதை நிறுத்தினோம். இதற்காகவே உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊழல் சக்திகள் மக்களுக்காக நாம் சாதித்திருந்த வெற்றியைத் தோற்கடித்துவிட்டார்கள். முற்போக்கு சக்திகள் எல்லாம் ஒன்றிணைவ தன் மூலம் மட்டுமே ஐ.தே.கவை தோற்கடிக்க முடியும்.**

19 ஆவது திருத்தம் நிறைவேறுவதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பாராட்டப்படும் வகையில் செயற்பட்டிருந்தார். நாடாளுமன்றில் சிறுபான்மைக் கட்சியொன்றுக்கு அவர் தலைமை வகித்தாலும் இரண்டாவது வாசிப்பின்போது முன்னர் எதிர்பார்க்கப்பட்ட எல்லாமே அதில் இடம்பெற்றிருக்கவில்லை என்பதை அறிவித்தார். இருந்தாலும் இவ்வாறு மாற்றத்துக்குள்ளாகியிருக்கும் திருத்தத்தை தாங்கள் எதிர்க்கப் போவதில்லை, ஆதரித்து நிற்போம் என்று கூறினார். இதை நிறைவேற்றுவதானது ஒன்றுமே இல்லாமல் போவதைவிட நல்லதாகும் என்றார் பிரதமர். ஏனைய கட்சிகளையும் திருத்தத்துக்கு ஆதரவளிக்கும்படி அவர் தனிப்பட்ட முறையிலும் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். 19 ஆவது திருத்தம் தொடர்பான விவாதம் சபையில் நடைபெற்றுக்கொண்டிருந்த அதே சமயம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர்களுக்கு இடையில் இருந்துவந்த முட்டுக்கட்டை நிலைமையை நிவர்த்திக்கும் வகையில் சபையின் குழுக்கள் அறையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சி உறுப்பினர்களின் கூட்டமொன்றை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் பிரதமர் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. பிரதமர் தம் குரலைச் சற்று உயர்த்திக் கொண்டு விவாதங்களின் போது பீரிஸ் வாக்குறுதிகளை அள்ளிவீசுவார். பின்னர் அவைகளுக்கு மாறாகவே செயற்படுவார் என்று குற்றஞ்சாட்டினார். என்றாலும் அது தவறான குற்றச்சாட்டு என்று பீரிஸ் சற்று தடுமாற்றத்துடன் மறுத்தார்.

இரண்டாவது வாசிப்பின் மீது வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு இன்னமும் ஒரு மணி நேரம்தான் இருந்தது. இரண்டு தரப்பினருக்குமிடையில் தொடர்ந்து விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நிலைமையை ஜனாதிபதி உன்னிப்பாகக் கவனித்து வந்தார். அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். இறுதியில் அவருடன் நடைபெற்ற ஒரு சந்திப்பின் பின்னர் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டது. அரசமைப்பு சபைக்கு ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சிவில் சமூகத்திலிருந்து மூன்று உறுப்பினர்களையும் நியமிப்பது என்ற தீர்வுக்கு அவர்கள் ஒப்புதல் வழங்கினார்கள். அவ்வாறு சிவில் சமூகத்திலிருந்து நியமிக்கப்படும் பிரமுகர்களின் நியமனம் நாடாளுமன்றத்தினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்த வகையில்தான் சபை குழு நிலைக்கு மாறி செவ்வாய்க்கிழமை இரவு 11 மணிக்கு 19 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டது.

ராஜபக்ஷ ஆதரவாளர்களான எம்.பிக்கள் இந்த விடயத்திலும் சங்கடத்துக்குள்ளாகியே இருந்தார்கள் என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்களில் பேச்சு அடிபட்டது. 19 ஆவது திருத்தத்தைத் தோற்கடிக்க அவர்களால் 75 உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள முடியவில்லை. அதனால் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு தலைதூக்குவதற்காக அவர்களும் சமரசத்துக்கு வந்தார்கள். ஆனால் இது உறுதிப்படுத்தப்படவில்லை.

# தானமா? தர்மமா?




இறந்தவர்களின் நினைவுநாளில் அவர்கள் ஆத்மா சாந்தியடைவதற்காக எல்லா மதத்தவரும் அவரவர் சமய முறைப்படி, தம்மை விட்டுப் பிரிந்தவர்களுக்கு நன்றியுடன் அந்தியேட்டி கிரியைகள் செய்வது வழமை. அவர்கள் இறையடி சேரவும், ஆத்மா சாந்தியடையவும் எமது முன்னோரின் வழிகாட்டலில் இதுவும் ஒன்று. இந்த நாளில் பசித்தவனுக்கு உணவும், உடையும் கொடுத்து தானதர்மம் செய்வது புண்ணியம் என்பது எல்லா மதமும் சொல்கிறது. சாதாரண வசதி உள்ளவர்கள் விரலுக்கு ஏற்ற வீக்கம் போல் ஒரு சிறிய வட்டத்துக்குள் இந்த நிகழ்வைச் செய்வதைக் காண்கிறோம். சில வசதி படைத்தவர்கள் பல ஆயிரங்கள் செலவு செய்து தமது உறவுகளையும், நண்பர்களையும் அழைப்பிதழ் கொடுத்து புடை சூழ விருந்தோம்பல் நடத்துவது வேதனை. பசித்தவன் ஒரு வேளை சோற்றுக்கு ஏங்கும் நிலையில் அவர்களையும் நினைவில் வைத்தால் என்ன? நாம் செய்வது தானமா, தர்மமா! பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்களையும் இறந்தவர்களின் நினைவு நாளிலாவது கவனம் எடுத்தால் நன்மையே. புண்ணியம் சேரட்டும். இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைவதாக.

உதயன் வாசகி, சாவகச்சேரி.


# மாயை உலகுக்குள் அழைத்துச் செல்லும் தலைக்கவசம்

Virtual Reality எனும் மாயையை ஏற்படுத்தும் தொழில்நுட்பமானது இன்று அசுர வேகத்தில் பிரபல்யமடைந்து வருகின்றது. அதிகளவில் வீடியோ ஹேமில் பயன்படுத்தப்பட்டு வரும் இத்தொழில்நுட்பத்திற்காக மூக்குக் கண்ணாடி பல்வேறு சாதனங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தற்போது தலைக்கவசம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத்தலைக்கவசத்தினூடாக ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் தனித்தனியான வாசனையை உணரக் கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

தற்போது Kickstarter தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள இத்தலைக்கவசம் விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது.



# லெனோவாஅறிமுகம் செய்யும் புதிய கைபேசி





ஸ்மார்ட் கைபேசி வடிவமைப்பு நிறுவனங்களுடன் போட்டிபோட்டு சிறந்த ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகப்படுத்திவரும் லெனோவா நிறுவனம், A3900 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசியினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

இந்தக்கைபேசியானது 5 அங்குல அளவுடையதும், 854 X 480 பட கொள்ளளவுடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் 1.2GHz வேகத்தில் செயற்படக்கூடிய MediaTek MT 6752 புரொசெஸர், பிரதான நினைவகமாக 512 எம்.பி நினைவகம் மற்றும் 4 ஜிபி சேமிப்பு நினைவகம் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது.

மேலும் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவற்றுடன் 2,300 mAh மின்கலத்தினையும் உள்ளடக்கியுள்ளது.

அன்ரோய்- 4.4.4 கிற்கற் இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இந்தக்கைபேசியின் விலையானது 100 டொலர்கள் வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# வெடித்துச் சிதறியது Google Nexus 6 மின்கலம்



உள்ளங்கையில் அடங்கும் ஸ்மார்ட் கைபேசியில் தரப்பட்டுள்ள வசதிகள் காரணமாக மக்கள் மத்தியில் அவை அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்த நிலையில் ஸ்மார்ட் கைபேசி நிறுவனங்களுக்குள் ஏற்பட்டுள்ள போட்டி நிலைமை காரணமாக ஒவ்வொரு நிறுவனமும் புதிய பல அம்சங்களை உள்ளடக்கியதாக கைப்பேசிகளை வடிமைத்து வருகின்றன.

எனினும் ஸ்மார்ட் கைபேசிகளில் தரப்படும் அம்சங்களுக்கு ஏற்ப அவற்றின் மின்கலங்கள் செயற்படுவதற்கு போதிய சக்தியைக் கொண்டிருப்பதில்லை. இதனால் கடந்த காலங்களில் சம்சுங்கின் கலக்ஸி எஸ் 4 மற்றும் ஐபோன் 5 என்பவற்றின் மின்கலங்கள் வெடித்துச் சிதறியுள்ளன. இவற்றினைத் தொடர்ந்து தற்போது Google Nexus 6 ஸ்மார்ட் கைபேசியின் மின்கலமும் வெடித்துச் சிதறியுள்ளது. இதனால் பயனர்கள் குறித்த கைபேசி வகை தொடர்பாக கூகுள் நிறுவனத்திடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

# மின் தாக்கி உயிரிழப்பு தரும் படிப்பினை

மின்கம்பி அறுந்து வெள்ளவாய்க்காலில் விழுந்து மின் பாய்ந்து கொண்டிருந்தபோது, வெள்ளவாய்க்காலைக் கடந்த தந்தையும் மகனும் தண்ணீர் மூலமாக மின்தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தமை அந்தப் பகுதியில் பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது.

சில விநாடிகளில் பறிக்கப்பட்ட அந்த உயிர்களின் இழப்பு அவர்களது குடும்பத்தினருக்கு ஈடுசெய்ய முடியாத தொன்றாகிவிட்டது. வேறு வகைகளில் இழப்புக்கள் நிகழ்ந்துகொண்டு தானிருக்கின்றன. என்றாலும் மின் கம்பி அறுந்து விழுந்து ஒரே நேரத்தில் தந்தையும் மகனும் இவ்வாறு உயிரிழப்பார்கள் என்று எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

அந்தக் குடும்பஸ்தர் தனது மகனுக்குத் தலைமுடி வெட்டுவதற்காக சிகை அலங்கரிப்பு நிலையத்துக்குக் கூட்டிச் சென்றிருந்தார். அந்த வேலை முடிந்ததும் வீட்டுக்குப் புறப்படத் தயாரானபோது அந்தப் பகுதியில் இடி மின்னலுடன் கூடிய கடும் மழை பொழிந்துள்ளது. அதனால் மழை விடட்டும் என்று இருந்துவிட்டார் தந்தை. மழை விட்டபின்னர் அவர் சைக்கிளில் தனது மகனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அதற்கு முன்னர் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்திருந்ததனால் அவர் பயணிக்க வேண்டி வீதி நீரில் மூழ்கியிருந்தது. அந்த வீதிக்குப் பெயர் வெள்ளவாய்க்கால் வீதி. மழை பெய்ததால் அது வீதியாக இல்லாது வெள்ளவாய்க்காலாகவே மாறிவிட்டிருந்தது. அதனூடாக வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது.

அந்தப்பகுதியிலுள்ள தென்னை மரத்திலிருந்த ஓலைகள் மின் கம்பியில் அழுந்தியபடி இருந்துள்ளதாகவும் அதனால் அந்த மின் கம்பி அறுந்ததாகவும் மின்சார நிலையத்தரப்பினரால் கூறப்படுகிறது. அவ்வாறு அறுந்த மின்சாரக் கம்பி மழைவெள்ளத்தில் விழுந்ததனால், மின்சாரம் தண்ணீரூடாக அவர்கள் மீது பாய்ந்து இருவரினதும் உயிரைப் பறித்துக் கொண்டது.

அதனை அவர்கள் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அவர்களுக்கு அவ்வாறு நிகழும் என்று அவர்களது குடும்பத்தினரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இளம் குடும்பஸ்தரதும் அவரது 9 வயதுச் சிறுவனதும் வாழ்க்கை விநாடி நேரத்தில் முடியும் என்று எவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். வறுமைப்பட்ட அந்தக் குடும்பத்தினருக்கு அவர்களது இழப்பு பேரிழப்பாகவே மாறிவிட்டது. மின் தாக்குதலுக்கு உள்ளான அவர் தனது கையை அசைத்து ஆபத்து என்று சைகை மூலமாகக் காட்டியவாறு உயிரிழந்தார். அதனால் அந்த இடத்தில் நின்றிருந்தவர்கள் அதிர்ச்சியடைந்துவிட்டனர். என்ன நடந்தது என்று ஆராய முற்பட்ட போதே அங்கு மின் கம்பி அறுந்து வெள்ளத்தில் இருப்பது தெரியவந்தது. பின்னர் மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டு மின் நிறுத்தப்பட்டு சடலங்கள் அகற்றப்பட்டன.

இந்த விபத்து தடுத்திருக்கக் கூடிய ஒன்று என்றால் அதனை முற்றுமுழுதாக மறுக்க முடியாது. ஏனெனில் அந்த இடத்தில் தென்னை மர ஓலை மின் கம்பியை அழுத்திக் கொண்டிருந்தது என்றும் அதன் காரணமாகவும் அந்தக் கம்பி அறுந்து விழுந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. இடி, மின்னல் போன்ற இயற்கை தவிர்ந்த மனித நடவடிக்கைகள் – செயற்கை நடவடிக்கைகள் எந்தளவுக்கு அதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன? எந்தளவுக்குச் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கின்றன? என்பது பற்றிக் கவனம் செலுத்த வேண்டிய தேவை இனிமேலாவது உணரப்பட வேண்டும். அதனைப் பொதுமக்களே நன்கு உணர்ந்து செயற்படுத்த வேண்டும்.

வீதியோரங்களில் சரி ஏனைய இடங்களில் சரி மின் கம்பிகள் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அந்த இடங்களில் மின் கம்பிகளுக்கு அருகில் மரக்கிளைகள், தென்னை ஓலைகள், பனை ஓலைகள் எதுவும் இருக்கக் கூடாது. ஆனால் அதனை பெரும்பாலானவர்கள் பின்பற்றுவது இல்லை. அவ்வாறான அறிவுறுத்தல்களைப் பின்பற்றாததனாலேயே பல இழப்புக்களையும் பலரும் எதிர்கொண்டு வருகின்றனர்.

மின்சார சபையினர் பல இடங்களுக்கும் சென்று மின் கம்பிகளுக்கு அருகில் உள்ள அதற்கு மேலாக உள்ள மரக்கிளைகள் உள்ளிட்டவற்றை அகற்றி வருகின்றனர். ஆனால் தென்னை ஓலை போன்றவை வெட்டிவிட்ட சில மாதங்களிலேயே மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிடக்கூடியன. அதனால் தென்னை உள்ள இடங்களில் விஷேட கவனிப்புத் தேவைப்படுகிறது.


அதனை மின்சார சபையினர் செய்து கொண்டிருப்பதாகக் கூறினாலும் அந்தந்தப் பிரதேசத்தவர்கள் தத்தம் சூழலில் உள்ள மின் கம்பிகளுக்கு இடையூறாகவுள்ள மரக்கிளைகளை அகற்ற வேண்டிய தேவை, பொறுப்பு அவர்களுக்கு உண்டு என்பதனை அவர்கள் உணர வேண்டும். மின்சார சபை ஊழியர்கள் அவற்றைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் பொறுப்பு அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களிடமும் இருக்கிறது என்பதனை மறவாதீர்கள்.


இழப்புக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படலாம். நஷ்ட ஈடும் கோரலாம். பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் போன உயிரைத் திரும்பப் பெறமுடியுமா? மின் தாக்குதல் மட்டுமல்ல ஏனைய வாகன விபத்துக்கள் கூட இதனை உணர்த்துகின்றன.

சுன்னாகத்தில் நடந்த இரட்டை உயிரிழப்பு அனைவருக்கும் ஒரு பாடமாக அமையட்டும். மின் தாக்குதலின் தாங்கமுடியாத தன்மை, கொடூரம், எதிர்கால தவிப்பு, இழப்பு அனைவர் மனதிலும் அது மறக்காமல் இருக்கட்டும். அதன் மூலமாகவாவது மின் கம்பிகள் செல்லும் இடங்களில் விஷேட கவனிப்புச் செயற்பாடுகள் தீவிரமடையட்டும். பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படட்டும்.

பத்தி எழுத்து

# உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்





நம் உடலில் உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை உள்ள எல்லா உறுப்புகளுமே முக்கியமானவைதான். மூளை முக்கியம், இதயம் முக்கியம் அதற்கடுத்தது நகம். ஆகக் கடைசி என்றெல்லாம் வரிசைப் படுத்திக் கொண்டு இருக்க முடியாது.

ஆனால் நம் உடலில் உள்ள அத்தனை உறுப்புக்களும் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலை செய்ய வேண்டும் எனில் அதற்குச் சக்தி வேண்டும். அந்தச் சக்தியை நம் உடலில் உள்ள அத்தனை உறுப்புக்களுக்கும் கொண்டுபோய்ச் சேர்ப்பது உதிரம் தான்.

மனித உடலில் சுரக்கும் இரத்தம் மிக மிக அபூர்வமானது. அதைச் செயற்கையாகத் தயாரிக்க ஆராய்ச்சிகள் நடக்கின்றன என்றாலும் இரத்தத்தின் தேவை தங்கத்தை விட, பெற்றோலை விட அதிகமாகவே இருக்கிறது.

அது தான் உயிர்காக்கும் திரவம் என்கிறபோது அதைத் தாக்காமல் நோய்க் கிருமிகளுக்கு வேறு என்ன வேலை? நோய்கள் ஒரு பக்கம் என்றால், தினம் தினம் நடக்கும் விபத்துக்கள் இன்னொரு பக்கம்.

இதில்வீதிகளில் நடக்கும் விபத்துக்களே அதிகம். தினமும் நூற்றுக் கணக்கான மனிதர்கள் இந்த விபத்துக்களில் இறக்கிறார்கள். அரை குறையாக அடிபட்டு, அதிக அளவில் உதிரத்தை இழந்து மருத்துவமனைக்கு வருகிறவர்களுக்குச் சரியான நேரத்தில் இரத்தத்தை ஏற்றாவிட்டால், உயிர் பிழைக்க வைப்பது கடினம்தான்.

இது மாதிரி ஏற்படும் அத்தனை பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு இரத்த தானம் தான். நாம் தானமாகக் கொடுக்கும் உதிரம் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு தேவைப்படும் இடத்திற்கு உடனடியாகக் கொண்டு செல்லப்படுகிறது.

அங்கு தேவைப்படுகிற மனிதர்களுக்கு உடனடியாக ஏற்றப்படுகிறது. இதனால், ஒரு மனிதனின் உயிர் பிழைக்க நீங்கள் ஒரு காரணமாக மாறிவிடுவீர்கள். எவரெல்லாம் இரத்ததானம் செய்யலாம்? படிக்காதவர்கள், படித்தவர்கள், ஆண்கள், பெண்கள் என்கிற எந்தப் பாகுபாடும் இன்றி இரத்தத்தைத் தானமாகக்கொடுக்கலாம்.

என்றாலும் இரத்ததானம் செய்ய சில விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவை 18 வயது முதல் 60 வயது வரையுள்ள ஆரோக்கியமான ஆண்களும் பெண்களும் இரத்ததானம் செய்யலாம்.

மனிதஉடலில்சராசரியாக 5 முதல் 6 லீற்றர் இரத்தம் உள்ளது. இதில் 350 மில்லி லீற்றர் இரத்தம் மட்டுமே எடுக்கப்படுகின்றது. அவ்வளவு இரத்தம் கொடுக்க வேண்டுமா என்று யாரும் கவலைப்படாதீர்கள். நீங்கள் கொடுக்கின்ற இந்த 350 மில்லி லீற்றர் உதிரம் அடுத்த 24 மணி நேரத்தில் உற்பத்தியாகிவிடும்.

இரத்ததானம் செய்பவரின் உடல் நிறை குறைந்தபட்சம் 45 கிலோவாக இருக்க வேண்டும். ஹீமோகுளோபின் அளவு 12 கிராமுக்கு மேல் இருக்கவேண்டும். இரத்த அழுத்தம் இயல்பாக இருக்க வேண்டும்.

அதேபோல எவரெல்லாம் இரத்த தானம் செய்யக்கூடாது என்பதற்கு தெளிவான விதிமுறைகள் உள்ளன. அவையாவன, எயிட்ஸ் நோயாளிகள், போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள், மஞ்சள் காமாலை போன்ற நோய்வந்தவர்கள் இரத்ததானம் செய்யக்கூடாது.

இரத்தத்தைத் தானமாகக் கொடுப்பதால் நமக்கும் மற்றவர்களுக்கும் என்ன நன்மை கிடைக்கும்? நீங்கள் தானமாகக் கொடுக்கும் இரத்தம் சிவப்பணு, தட்டணு என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஐந்து உயிர்களைக் காப்பாற்றுகிறது.

பொதுவாக ஆண்களின் உடல் எடையில் ஒரு கிலோவுக்கு 76 மில்லி லீற்றர் இரத்தம் இருக்கிறது. பெண்களின் உடல் எடையில் ஒரு கிலோவுக்கு 66 மில்லி லீற்றர் இரத்தம் இருக்கிறது. இதில் வெறும் 8 மில்லி லீற்றர் இரத்தம் கொடுப்பதனால் எவருக்கும் எந்த இழப்பும் ஏற்படப்போவதில்லை.

இன்று நாம் இரத்தத்தைத் தானமாகக் கொடுக்கலாம் . ஆனால் எதிர்காலத்தில் இரத்தத்தைத் தானமாகப் பெற வேண்டிய நிலை ஏற்படலாம். இன்று நாம் இரத்த தானம் செய்ய மறுத்தால் எதிர்காலத்தில் நமக்கு யார் இரத்த தானம் செய்ய முன்வருவார்கள்?

உதவும் மனப்பாங்கு உள்ளவர்கள் மட்டுமே இதைச் செய்வார்கள். உதிரம் கொடுத்து உதவும் மனப்பாங்கே உதிரம் கொடுப்பதற்கு முக்கிய தகுதியாகும்.

எனவே உதிரம் கொடுப்போம் உயிர்களைக் காத்திடுவோம்.

**நேச. வித்தியாசாகர்,**
*கிளிநொச்சி மகா வித்தியாலயம்.*

---

# வெளிநாட்டிலிருந்து பணத்தை பெற்றுக் கொள்ள விரைவான சேவையை வழங்கும் சம்பத் வங்கி

வெளிநாட்டிலிருந்து இலங்கையிலுள்ள தமது அன்புக்குரியவர்களுக்கு வெவ்வேறு தேவைகளின் நிமித்தம் பணத்தை அனுப்பும் போது அது விரைவாகவும், பாதுகாப்பாகவும், வசதியான முறையிலும் இலங்கையிலுள்ளவரை சென்றடைய வேண்டும் என்பது அனுப்புபவரின் எதிர்பார்ப்பாக உள்ளது. அது போலவே, இலங்கையிலுள்ளவர்களுக்கும் தமக்கு வரும் பணம் முழுமையாக பாதுகாப்பாக துரிதமாக கிடைக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது. வெளிநாடுகளிலிருந்து பணத்தை அனுப்புவதற்கு வெவ்வேறு முறைகள் காணப்பட்ட போதிலும் உறுதியான வங்கி வலையமைப்பு ஒன்றினூடாக அனுப்பப்படும் சேவை என்பதன் மூலமாக அனுப்பும் தொகை பாதுகர்ப்பாகவும் விரைவாகவும் வசதியான முறையிலும் பெறுபவரை வந்தடைவது உறுதி செய்யப்படுகிறது.

சம்பத் வங்கியின் ஈ – ரெமிட்டன்ஸ் சேவை பற்றி வங்கியின் வட பிராந்தியத்துக்கான முகாமையாளர் பி.சங்கருடன் மேற்கொண்ட நேர்காணலின் போது –

வட பிராந்தியத்தில் எட்டுக் கிளைகளை சம்பத் வங்கி கொண்டுள்ளது. நெல்லியடி, யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, திருநெல்வேலி, புங்குடுதீவு, சாவகச்சேரி ஆகிய நகரங்களில் இந்தக் கிளைகள் காணப்படுகின்றன.

ஈ–ரெமிட்டன்ஸ் சேவையை பொறுத்த மட்டில் கடந்த இரண்டு வருடங்களில் உயர்வடைந்துள்ளது என குறிப்பிடலாம். இதற்கு பிரதான காரணியாக நாம் வழங்கும் சேவையின் தரத்தை நாம் மேம்படுத்தியுள்ளோம். ஈ–ரெமிட்டன்ஸ் சேவையை பயன்படுத்த வரும் வாடிக்கையாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நாம் சேவைகளை வழங்குகிறோம். இதன் காரணமாக எமது சேமிப்புக் கணக்குகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

துரித சேவையை, சாந்தமான முறையில் வழங்குவதன் மூலமாக வட பிராந்தியத்தில் நாம் வெற்றிகரமாக எமது வங்கிச் செயற்பாடுகளை முன்னெடுக்கிறோம். இந்தப் பிராந்தியத்தின் மக்கள் மத்தியில் ஈ–ரெமிட்டன்ஸ் சேவை தொடர்பில் சிறந்த வரவேற்பும் அறிவும் காணப்படுகிறது என தெரிவித்தார்.

ஈ–ரெமிட்டன்ஸ் சேவை தொடர்பில் அவருடனான முழு நேர்காணலின் விவரம் வருமாறு:–

**ஈ–ரெமிட்டன்ஸ் என்றால் என்ன?**

ஈ–ரெமிட்டன்ஸ் என்பது இணையத்தை அடிப்படையாக கொண்டு வெளிநாடுகளிலிருந்து பணத்தை உள்நாட்டுக்கு அனுப்பும் சேவையாக அமைந்துள்ளது.

**இது எவ்வாறு செயற்படுகின்றது?**

குறித்தவொரு சர்வதேச கட்டமைப்பினூடாக அனுகூலம் பெறுபவருக்கு பணத்தை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது.



**சட்டபூர்வமான வெளிநாட்டு நாணய பரிமாற்றல் சேவையை பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் என்ன?**

பணத்தைப் பாதுகாப்பான முறையிலும் நம்பிக்கையான வகையிலும் அனுப்புவதற்கு சட்டபூர்வமாக வெளிநாட்டு நாணயத்தை அனுப்புவது சிறந்ததாகும்.

**ஈ–ரெமிட்டன்ஸ் பற்றி பொதுவாக நிலவும் தவறான கருத்துக்கள் என்ன?**

இந்த முறையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் பற்றி போதியளவு அறிவின்மை மக்கள் மத்தியில் நிலவுகின்றது. அத்துடன் இந்த முறை தொடர்பில் மக்கள் மத்தியில் போதியளவு நம்பிக்கையின்மையும் காணப்படுகிறது. ஆனாலும் எமது ஈ–ரெமிட்டன்ஸ் சேவை பற்றி மக்கள் அதிகளவு விழிப்புணர்வுடன் உள்ளனர்.

**ஈ–ரெமிட்டன்ஸ் ஊடாக அனுப்பும் தொகையில் ஏதேனும் வரையறைகள் காணப்படுகிறதா?**

பொதுவாக வரையறைகள் இல்லை. இருந்த போதிலும், அனுப்பும் நாடுகளில் காணப்படும் வரையறைகளை பொறுத்து இந்த தொகை வேறுபடும். இது இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தலுக்கு அமைவாக சகல நிதி நிறுவனங்களாலும் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டியுள்ளது.

**ஈ–ரெமிட்டன்ஸ் சேவையை பயன்படுத்தும் போது வரி விதிப்புகள் உண்டா?**

இந்த சேவையை பயன்படுத்தும் போது எவ்விதமான வரி அறவீடுகளும்மேற்கொள்ளப்படமாட்டாது.

**பணத்தை அனுப்பும் போது ஈ–ரெமிட்டன்ஸ் முறை என்பது ஏன் நவீன மற்றும் பாதுகாப்பான முறையாக கருதப்படுகிறது?**

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் பணத்தை பாதுகாப்பாகவும் விரைவாகவும் வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

**சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் சேவை ஏன் பிரத்தியேகமானதாக அமைந்துள்ளது?**

பரந்த வலையமைப்பினூடாக இந்த சேவையை பெற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது. சந்தையின் முன்னோடிகளாக திகழும் நிறுவனங்களுடன் கைகோர்த்துள்ளது. பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் வேகமானதாக அமைந்துள்ளது. குறைந்தளவு தரகுக் கட்டணம் அறவிடப்படுகின்றது. உயர் தரம் வாய்ந்த சிறந்த சேவை போன்றன வழங்கப்படுகின்றன.

**சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் ஊடாக எவ்வாறு பணத்தை அனுப்பவும் பெற்றுக் கொள்ளவும் முடியும்?**

சம்பத் வங்கியின் சம்பத் இலத்திரனியல் பண பரிமாற்றல் கட்டமைப்புச் சேவையை பயன்படுத்துவதன் மூலமாக இந்த சேவையை பயன்படுத்த முடியும்.

**சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் ஊடாக கிடைக்கும் விசேட சௌகரியங்கள் என்ன?**

குறைந்தளவு நேரத்தில், பணத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளமை. நாட்டினுள்ளேயே பணத்தை அனுப்பக்கூடியதாக உள்ளமை. சம்பத் மொபைல் பண சேவை ஊடாகப் பணத்தை நாடு முழுவதும் காணப்படும் ATM வலையமைப்பினூடாக 365 நாட்களினுள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

**சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் சேவையை வாடிக்கையாளர்கள் எவ்வாறு எங்கிருந்து பெற்றுக் கொள்ளலாம்?**

வெளிநாட்டிலுள்ள வாடிக்கையாளர்கள் ஈ–ரெமிட்டன்ஸ் சேவை ஊடாக எமது பரிமாற்றல் கம்பனிகள் மற்றும் பி.பி.ஓக்கள் ஊடாக இந்த சேவையை பெற்றுக் கொள்ள முடியும்.

# அல்குவைதா மிரட்டல் எதிரொலி பிரதமர் மோடிக்கு பாதுகாப்பு



டில்லி,மே 6

பிரதமர் நரேந்திர மோடிக்கு அல்குவைதா தீவிரவாதிகள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். "யுடியூப்" இணையத்தளத்தில் சுமார் 9 நிமிடம் ஓடும் வீடியோ காட்சியில் ஆசிம் உமர் என்பவர் அந்த அச்சுறுத்தலை வெளியிட்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் பெயரைக் குறிப்பிட்டு, தீவிரவாதிகள் கொலை மிரட்டல் விடுத்துள்ளதால் மத்திய பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த 2 தினங்களாக இது பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து பிரதமர் நரேந்திர மோடிக்குப் பாதுகாப்பை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர் பங்கேற்கும் விழாக்களில் எத்தகைய பாதுகாப்பு நடைமுறையைக் கடைப்பிடிப்பது என்று மறுஆய்வு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி டில்லியை விட்டு வெளி மாநிலங்களுக்குச் செல்லும் போது குறைந்தபட்சம் அவருக்கு 5 முதல் 7 அடுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர பிரதமர் மோடி செல்லும் பாதைகளில் கண்காணிப்பை இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (14)



## இறந்த குழந்தைகளை தத்தெடுக்கும் பெண்மணி


பெற்ற குழந்தைகளையே அன்போடும் பரிவோடும் வளர்க்கத் தெரியாத பலர் வாழும் இந்த உலகத்தில், சிலி நாட்டில் உள்ள பெண் ஒருவர் இறந்த குழந்தைகளைத் தத்தெடுத்து இறுதி சடங்குகளை செய்து வருகிறார். சிலியைச் சேர்ந்த பெர்னார்டா கலார்டோ என்ற பெண், குப்பைகளில் தூக்கி எறியப்படும் இறந்து போன குழந்தைகளைத் தத்தெடுக்கிறார். அவ்வாறு தத்தெடுக்கும் குழந்தைகளுக்கு இறுதிச் சடங்கு செய்து, அஞ்சலி செலுத்தி, அடக்கம் செய்கிறார்.

இவ்வாறு அவர் செய்வதற்கு காரணம், கலார்டோ கடந்த 12 வருடங்களுக்கு முன்பு செய்தித் தாள் ஒன்றில் ஒரு குழந்தை குப்பையில் வீசப்பட்ட செய்தியைப் படித்துள்ளார். அந்த செய்தியின் பாதிப்பினால் தான், இவ்வாறு இறந்த குழந்தைகளை தத்தெடுத்து இறுதிக் காரியங்களைச் செய்து வருகிறார். மேலும் அந்தக் குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு காரணம், சிலி நாட்டில் இதுபோன்று கைவிடப்பட்டு இறந்து போகும் குழந்தைகளுக்கு இறுதிச் சடங்கு செய்ய வேண்டுமெனில், அந்த குழந்தையை தத்தெடுக்க வேண்டும். அதனால் தான் அந்த பெண் மணி, இறந்த குழந்தைகளைத் தத்தெடுத்து பெயர் சூட்டி, முறையாக அடக்கம் செய்து வருகிறார். (14)

## வெளிநாட்டு மீட்புக் குழுக்களை வெளியேற வேண்டுகோள்

காத்மண்டு,மே 6

நேபாளத்தில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் வெளிநாட்டு குழுவினர் தங்கள் பணியை முடித்துக் கொள்ளும்படி நேபாள அரசு கேட்டுக்கொண்டுள்ளது.



மீட்புப் பணிகளுக்குப் பதிலாக, நில நடுக்கத்தால் வாழ்வைத் தொலைத்த லட்சக்கணக்கான மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் மிகப்பெரிய பணியைத் தொடங்க விருப்பதால் வெளி நாடுகள் தங்களது குழுவினரை விலக்கிக்கொள்ளும்படி அரசு கூறியிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

அதேசமயம், இடிபாடுகளை அகற்றுவதற்குநவீனஉபகரணங்கள்தேவை என்பதால் இந்தியாவிடம் உதவி கேட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தியாவின் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை இந்திய ஊடகங்கள் புகழ்ந்து பேசி வருவதாக நேபாள மக்கள் சமூக வலைத்தளங்கள் மூலம் விமர்சித்து வரும் நிலையில், மீட்புக்குழுவினரை விலக்கிக்கொள்ளும் இந்த முடிவை நேபாள அரசு எடுத்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், மீட்பு நடவடிக்கையில் இந்தியாவின் பங்களிப்பு மிகப் பெரிய அளவில் இருந்ததாகப் பாராட்டியுள்ள நேபாளம், அடுத்தகட்டமாக மறுவாழ்வுப் பணிகளிலும் இந்தியா ஈடுபடும் என்று தெரிவித்துள்ளது. (14)

## 10 லட்சம் கூடாரங்கள் உடனடியாகத் தேவை

காத்மண்டு,மே 6

நேபாளத்தில் நிலநடுக்கத்தால், 1.60 லட்சம் வீடுகள் இடிந்துள்ளதாகவும், 1.43 லட்சம் வீடுகள் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் அரசுதகவல்வெளியிட்டுள்ளது.



வீடுகளில் விரிசல் ஏற்பட்டுள்ள தால் மக்கள் பலரும் வீடுகளுக்குள் செல்லஅஞ்சுகின்றனர்.

அதனால், பல்லாயிரக்கணக்கான மக்கள், வெளி இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இது குறித்து அந்த நாட்டின் துணைப் பிரதமர் பிரகாஷ் மன் சிங் கூறுகையில், 3 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. மோசமான வானிலையில், பல்லாயிரக் கணக்கான மக்கள் வெளி இடத்தில் தஞ்சமடைந்துள்ளனர். மறுசீரமைப்பு பணிகள் முடிய இன்னும் சில மாதங்கள் ஆகும்.

அதுவரை நிலைமைய சமாளிக்க உடனடித் தேவையாக 10 லட்சம் முகாம் அமைக்கும் கூடாரங்கள் தேவைப்படுகின்றன.

இந்தக் கூடாரங்கள் தயாரிக்கும் ஆலைகள் நேபாளத்தில் இல்லை. எனவே இதில் இந்தியா, தாய்லாந்து, பாகிஸ்தான் உள்ளிட்ட சர்வதேச நாடுகள் உதவ முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (14)

## பனிச்சரிவில் உயிருடன் புதைந்த 100 பேரின் உடல்கள் மீட்பு

காத்மண்டு,மே 6

நேபாளத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தால் இதுவரை 7 ஆயிரத்து 365 பேர் உயிரிழந்துள்ளதாக நேபாள அரசு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த வாரம் பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்த மலையேற்ற வீரர்கள் 100 பேரின் உடல்களை லாங்டாங் என்ற கிராமத்தில் நேபாள பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

அந்த உடல்கள் அனைத்தும் 6 அடி ஆழ பனிக்கட்டிகளுக்குள் புதைந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேபாளத்தில் நில நடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் 34 நாடுகளைச் சேர்ந்த 4 ஆயிரத்து 50 நிபுணர்கள் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். (14)

## அகதிகளுக்கு அழைப்பு விடுத்த அமைச்சர்

பாரிஸ்,மே 6



பிரான்ஸ் நாட்டில் தற்காலிகமாக தங்கியுள்ள வெளிநாட்டு அகதிகளை தங்களது நாட்டிலேயே குடியேற விண்ணப்பிக்குமாறு பிரான்ஸின் உள்துறை அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரான்ஸில் சூடான், எத்தியோப்பியா, எரித்தியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான அகதிகள் தற்காலிகமாகக் கூடாரங்கள் அமைத்து தங்கியுள்ளனர்.

அகதிகளின் பகுதிக்கு நேற்று முன் தினம் வருகை தந்த அந்த நாட்டின் உள்துறை அமைச்சர், அகதிகளுக்கு உள்ள நிறை குறைகளை கேட்டறிந்தார்.

அப்போது, தங்களுடைய நாடுகளில் நிலவி வரும் போர் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாமல், அங்கிருந்து வெளியேறி உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். மேலும், பிரான்ஸிலிருந்து பிரிட்டனுக்குச் செல்ல விரும்புவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், பிரிட்டனுக்குச் செல்வதை மறந்து விடுங்கள். பிரிட்டனை விட நாங்கள் உங்களுக்கு ஆதரவும், சிறந்த சலுகைகளும் அளிக்கிறோம். பிரிட்டனுக்குச் செல்லும் எண் ணத்தை கைவிட்டு, பிரான்ஸில் குடி யேறத் தேவையான விண்ணப்பங் களை அளிக்கும் முயற்சியில்இறங்குங்கள் என அவர் அகதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இருப்பினும், பிரான்ஸை விட்டுச் செல்ல விரும்புபவர்களை நாட்டின் எல்லையில் விடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் உறுதி அளித்துள்ளார். (14)

## மனிதர்களுக்குப் போட்டியாக ரோபோக்கள்

பெர்லின்,மே 6

மனிதர்கள் செய்து வந்த மூன்றில் இரண்டு சதவிகித வேலைகளை ரோபோக்கள் செய்யும் வகையில் அதிநவீன தொழில்நுட்ப புரட்சியில் ஜேர்மனி ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்ங்-டிபா என்ற தனியார் நிறுவனம் நடத்திய ஆய்வில், இன்னும் சில வருடங்களில் ஜேர்மனியில் உள்ள 59 சதவிகித பணிகளில் இயந்திரங்களான ரோபோக்களைப் பயன்படுத்த முடிவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.



ஜேர்மனியின் இந்தப் புதிய முயற்சி அந்த நாட்டின் அடிப்படை வேலை வாய்ப்புக்கு அபாயம் விளைவிப்பதாக தொழில்துறை வல்லுநர் கள் குற்றம் சாட்டியுள்ளனர். தற் போது ஜேர்மனியில் 30.9 மில்லி யன் மக்கள் முழு நேர அல்லது பகுதி நேர பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் புதிய தொழில்நுட்பம் நடைமுறைக்கு வந்து, அனைத்து துறைகளிலும் ரோபோக்களை பயன்படுத்தினால், சுமார் 18 மில்லியன் மக்களை பணிகளிலிருந்து நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இந்தத் திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்துவதற்கு அதிக நிதி செலவிட வேண்டும் என்பதால், இது நாட்டின் பிற வளர்ச்சிப் பணிகளைப் பாதிக்கும் அபாயமும் உள்ளது. (14)

## வாழைப்பழ பெட்டிக்குள் சிக்கிய போதைப்பொருள்


பெர்லின்,மே 06

ஜேர்மனில் உங்ள அங்காடிகளில் இருந்து 300 கிலோ போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக உணவுப்பொருள்களில் வைத்து போதைப்பொருள் கடத்துவது அதிகரித்து வருகிறது.

இந்தநிலையில், ஜேர்மன் பெர்லின் நகரில் அல்டி நிறுவனத்துக்கு சொந்தமான 13 பலசரக்கு அங்காடிகளில் இருந்து 300 கிலோவுக்கும் அதிகமான கொகைன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அல்டி நிறுவனத்துக்கு சொந்தமான பலசரக்குஅங்காடிகளில்விற்பனைக்கு தேவையான வாழைப்பழங்களை ஊழியர்கள் பெட்டியில் இருந்து எடுத்து வைத்துக்கொண்டிருந்தனர். அதன்போது அந்த வாழைப் பழ பெட்டிகளில் கொகைன் போதைப் பொருள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் நடத்திய தேடுதலில் 300 கிலோவுக்கு அதிகமான போதைப்பொருள்கள் பெர்லின் மற்றும் பெரெண்டன் பெர்க் நகரில் உள்ள பலசரக்கு அங்காடிகளில் கைப்பற்றப்பட்டன. (14)





அரேபியன் டிராவல் கண்காட்சி டுபாயில் உள்ள உலக வர்த்தக மைய கண்காட்சி அரங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. இந்தக் கண்காட்சியில் ஐக்கிய அரபு அமீரகம், இந்தியா, ஓமன், கட்டார், பஹ்ரைன், சவுதி அரேபியா, இலங்கை உள்ளிட்ட 86 நாடுகள் பங்கேற்றுள்ளன. (14)

## சவூதி அரேபியாவில் தலை துண்டிப்பு

ரியாத்,மே 06

இந்தியர் ஒருவரை ஆயுதங்களுடன் வழிமறித்து கொலை செய்து, கொள்ளையடித்த குற்றத்துக்காக ஐந்து பேரின் தலை துண்டிக்கப்பட்டதாக சவூதி அரேபிய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த நாட்டின் மேற்கு கடற்கரை நகரமான ஜெட்டாவில், தண்டனை விதிக்கப்பட்ட யேமன் நாட்டைச் சேர்ந்த இருவரும், சாட், எரித்ரியா மற்றும் சூடான் நாட்டைச் சேர்ந்த தலா ஒருவரும் தலைை துண்டித்து கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்தியரை கொன்ற சம்பவம் அங்குள்ள ஒரு கடையில் நடைபெற்றதாக மட்டும் தெரிவித்துள்ள உள்துறை அமைச்சகம், கொல்லப்பட்ட இந்தியர் யார்? தண்டனை நிறைவேற்றப்பட்ட 5 பேர் யார் என்ற விவரத்தை தெரிவிக்கவில்லை.

கடந்த வருடம் மட்டும் அந்த நாட்டில் 87 பேருக்கு தலை துண்டித்து தண்டனை நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (14)

# யேமன் விமான நிலையம் மீது சவுதி ராணுவம் வான் தாக்குதல்

### விமானங்கள் பலவும் எரிந்து நாசம்; தாக்குதலை நிறுத்த ஐ.நா. கோரிக்கை





சனா,மே 06

யேமன் நாட்டில் உள்ள விமான நிலையத்தை சவுதி அரேபியா தீயிட்டு கொளுத்திய வீடியோ வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யேமன் அரசுக்கும், உள்நாட்டு கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பல மாதங்களாக போர் நடைபெற்று வருகிறது. கிளர்ச்சியாளர்கள் யேமனின் தலைநகரான சனாவைக் கைப்பற்றிய நிலையில், யேமனுக்கு ஆதரவாகப் போர் புரிவதில் சவுதி அரேபியா ஈடுபட்டு வருகிறது.

தலைநகரில் தாக்குதலில் ஈடுபட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் வகையில், அந்தப் பகுதிகளில் சவுதி அரேபிய இராணுவம் வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

தலைநகர் சனாவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் சவுதி அரேபியா மோசமான தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. அந்தத் தாக்குதலில், ஓடுபாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பயணிகள் விமானங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

விமானங்கள் எரிவது போன்று வெளியான வீடியோக் காட்சிகளை அடுத்து, விமான நிலையத்தை தாக்குவதை சவுதி அரேபிய தலைமையிலான இராணுவங்கள் கை விட வேண்டும் என ஐ.நா சபை அவசர கோரிக்கையை விடுத்துள்ளது.

இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஐ.நா சபை , சவுதி அரேபியா சனா விமான நிலையத்தைத் தாக்குவதை கைவிட்டு அங்கிருந்து வெளியேற வேண்டும்.

தாக்குதலில் விமானங்கள் எரிந்து சாம்பலானதுடன், விமான நிலையமும் மோசமாக சேதம் அடைந்துள்ளதால், வெளிநாடுகளிலிருந்து விமானங்கள் மூலம் மீட்பு பணிகளில் ஈடுபடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மேலும், விமான நிலையங்கள் மட்டுமின்றி, கப்பல் துறைமுகங்கள் மற்றும் பிற முக்கிய பகுதிகளில் தாக்குதல் நடத்துவதை உடனடியாக கைவிட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. (14)

## தைரியமிக்கவர் குட்டி இளவரசி
### ஜோதிடரின் கணிப்பு

லண்டன்,மே 06

புதிதாக பிறந்துள்ள குட்டி இளவரசி மிகவும் மனதைரியத்துடன் இருப்பார் எனச் சீன ஜோதிடர் கணித்துள்ளார்.

பிரிட்டன் இளவரசர் வில்லியம் தம்பதியினருக்கு அழகிய பெண் குழந்தை பிறந்துள்ளது. தங்கள் நாட்டுக்குக் குட்டி இளவரசி வருகை தந்துள்ளதை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வரு கின்றனர், மேலும் தம்பதியினருக்கு வாழ்த்துகளும் குவிந்து வருகின்றன.

இந்த நிலையில், குட்டி இளவரசி



யின் ஜாதகத்தை சீன ஜோதிடர் ஒருவர் கணித்துள்ளார்.

முடிசூட்டும் வரிசையில் 4 ஆவது இடத்தில் இருக்கும் அவர், திறமையும், கற்பனை வளமும் நிறைந்தவராகவும் திறந்த் மனம் படைத்தவராகவும் இருப்பார் என ஹாங்காய் ஜோதிட கலை நிபுணர் மேக்லிங்லிங் தெரிவித்துள்ளார் மேலும் மனதைரியம் மிக்கவராகவும் திகழ்வார், அவரது அண்ணன் இளவரசர் ஜோர்ஜ் மிகவும் அமைதியானவராக இருப்பார், அவரைப் போன்று இவர் இருக்கமாட்டார் என்றும் மிகவும் மகிழ்ச்சிகரமான பெண்ணாக திகழ்வார் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை இங்கிலாந்தின் குட்டி இளவரசிக்கு சார்லோட் எலிசபெத் டயானா எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும்; கேம்பிரிட்ஜின் மதிப்புக்குரிய இளவரசி சார்லோட் என்று அவர் அழைக்கப்படுவார் எனவும் கென்சிங்டன் அரண்மனை நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. (14)

## சாவுத்தண்டனையை நியாயப்படுத்தும் ஆஸ்திரேலியப் பொலிஸார்

சிட்னி,மே 06



ஆஸ்திரேலியப் பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட சாவுத் தண்டனை விவகாரத்தில் தங்களது செயலை ஆஸ்திரேலிய பொலிஸார் நியாயப்படுத்தியுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தியதாக கூறி ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இலங்கைத் தமிழர் மயூரன் சுகுமாரன் மற்றும் ஆண்ட்ரூ சான் அ யோருக்கு இந்தோனேஷிய சாவுத்தண்டனையை நிறைவேற்றியது.

அதற்கு உலக நாடுகள் பலவும் எதிர்ப்பு தெரிவித்தன. இந்தநிலையில் சாவுத் தண்டனை விதிக்கப்படும் எனத் தெரிந்தும் மயூரன், ஆண்ட்ரூ ஆகியோரின் தகவலை ஆஸ்திரேலியப் பொலிஸார் அளித்ததே அவர்களது சாவுக்குக் காரணம் எனப் பொலிஸார் மீது விமர்சனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அதுபற்றி கருத்து தெரிவித்த ஆஸ்திரேலிய பொலிஸ் ஆணையாளர், ஒன்பது குழு பற்றிய முழுத் தகவல் முன்னரே கிடைத்து இருந்தால் நாங்களே அவர்களைக் கைது செய்து இருப்போம் எனக் கூறியுள்ளார். மேலும் கடத்தல் குழுவில் எத்தனை பேர் இருந்தனர். அவர்கள் யாருடன் தொடர்பு கொண்டனர் என்ற தகவல் எங்களுக்கு தெரியாது. மேலும் சாவுத்தண்டனை விதிக்கப்படும் நாடுகளில் போதைப்பொருள் கடத்தும் ஆஸ்திரேலியர்களுக்கு இதேபோன்ற தண்டனை வழங்கப்படுமா என உறுதியளிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார். (14)

## யேமனில் கொத்துக்குண்டுகளை வீசி வரும் வளைகுடா நாடுகள்

ஏடன்,மே 06

யேமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து சவுதி அரேபியா உள்ளிட்ட வளைகுடா நாடுகள் போரில் ஈடுபட்டு வருகின்றன.




சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படையினர், தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகளைப் பயன் படுத்துவதாக மனித உரிமை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

யேமனில் சாடா மாகாணத்தில் உள்ள கிராமங்களுக்கு அருகே கொத்துக் குண்டுகளை வீசியதற்கான ஆதாரங்கள் இருப்பதாக கூறியுள்ளது. மேலும், அந்தக் குண்டுகள் அமெரிக்காவால், சவுதி அரேபியாவுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தும் புகைப் படங்கள் ஆதாரமாக உள்ளன என்று மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

கொத்துக்குண்டுகள் பயன்படுத்துவதைப் பல நாடுகளில் தடைசெய்யப்பட்டபோதிலும், அமெரிக்காவும், சவுதியும் இதனை தடை செய்யவில்லை என்று குற்றம்சாட்டியுள்ளது. சவுதி தலைமையிலான கூட்டுப் படையினர் யேமனின் ஏடன் துறைமுக நகரில் பெரும் தரைவழிப் படை நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாக வெளியான தகவல்களை சவுதி அரேபியாவின் இராணுவப் பேச்சாளர் மறுத்துள்ளார். மேலும், இந்தக் குற்றச்சாட்டினை சவுதி மன்னரும் மறுத்துள்ளார். (14)

# வர்ணம் தீட்டலாம் வாங்க...



## தெரியுமா உங்களுக்கு?

- பாம்புகளின் விஷச்சுரப்பிகளைக்கூட விட்டு வைக்காமல் விழுங்கி விடும் திறமை கீரிகளுக்கு உண்டு!
- உலகத்தின் மிகப்பெரிய சிறுநீரகம் வாஸிரான் மாலா என்ற பாகிஸ்தானியின் உடலிலிருந்து அகற்றப்பட்டது. எடை 1.8 கிலோ. சாதாரண சிறுநீரகத்தைப் போல 10 மடங்கு!
- காண்டர் என்ற ராஜாளி பறவையானது, ஒருமுறை தென் அமெரிக்காவில் 20 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த ஒரு விமானத்தையே தாக்கியது.
- கோலியாத் வண்டு தன் கொம்புகளாலேயே வாழைப் பழத் தோலை உரித்துத் தின்று விடும்.
- இப்போது கடற்கொள்ளையரைப் பிடிப்பதற்காக மிக அதிக ஒலி (162 டெசிபல்) எழுப்பக்கூடிய கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. மனித செவியின் அதிகபட்ச ஒலி தாங்கு அளவு 130 டெசிபல்.

## உயர்ந்த எண்ணம்



ஓர் ஊரில் ஒரு மலையடிவாரத்தில் ஒரு பெரிய ஆலமரமொன்றில் ஒரு காகமும், ஒரு புறாவும் நெடுநாள்களாகத் தவம் செய்து கொண்டிருந்தன. அவைகளைப் பார்த்த இறைவன் மனமிரங்கினார். அந்த மலையடிவாரத்தில் அந்தப் பறவைகள் முன் காட்சியளித்தார். இறைவ்னைத் தங்கள் கண் முன்னே கண்டதும் புறாவும், காகமும் மகிழ்ச்சியடைந்தன. பறவைகளே! உங்கள் தவத்தைக் கண்டு என் மனமிரங்கிவிட்டது. உங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறேன். என்று கூறினார். உடனே காகம் இறைவா எனது கருமை நிறம் மாறி என்னுடல் பொன்னிறமாக வேண்டும், என் பொன்னிற இறக்கைகளைப் பார்த்து எல்லோரும் பொறாமைப் படவேண்டும், அதனைப் பார்த்து நான் ரசிக்க வேண்டும், என்று கூறியது. காகமே உனக்கு உனது எண்ணப்படியே வரம் தந்தேன் என்று கூறியவாறு இறைவன் உடனே புறாவைப் பார்த்தார். புறாவும் இறைவா இந்த உலகில் இப்போது எல்லா உயிர்களுக்குமே கருணையுள்ளம் குறைந்து வருகிறது. அன்பும் இல்லாமல், இரக்கமும் இல்லாமல் பல கொடிய வழிகளில் ஈடுபடுகின்றார்கள். இவ்வாறான மனப் போக்கெல்லாம் அவர்களை விட்டு மறைய வேண்டும். எல்லா நாடுகளும் செழித்து எல்லா மக்களும் நலமாக வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் என்றது. இறைவன் புறாவை வியப்போடு பார்த்தார். புறாவே உனது நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் உன்னுடைய வேண்டுகோளை அப்படியே என்னால் நிறைவேற்ற முடியாது. இந்த உலகில் எல்லா உயிரினங்களுக்கும் அவரவர்கள் எண்ணப்படியே வாழ்க்கையமைகிறது. நல்ல எண்ணத்தை உடையவர்கள் நலமடைவார்கள். தீய எண்ணத்தை உடையவர்கள் துன்பமடைவார்கள். அவர்களின் வாழ்க்கை அவர்கள் கையில்தான் உள்ளது. நீ நல்லெண்ணம் உடையதாக இருக்கின்றாய். எனவே நீ கூறும் நல்ல வார்த்தைகளைக் கேட்கும் அனைவரும் அதை மதித்து நடப்பார்கள். உனக்கு எந்த துன்பமும் ஏற்படாதவாறு நலமாக வாழ வரமளிக்கிறேன். இருவரும் மகிழ்ச்சியாகச் செல்லுங்கள் என்று கூறி மறைந்தார். காகத்தின் இறக்கைகள் எல்லாம் உடனே பொன்னிறமாக மாறிவிட்டது. அதனைப் பார்த்து காகம் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து அந்த இடத்தை விட்டுப் பறந்து சென்றது. புறாவும் உற்சாகமடைந்து, மகிழ்ச்சியோடு அந்த இடத்தை விட்டு பறந்து சென்றது. புறாவைக் கண்ட மற்ற பறவைகள் எல்லாம் அதனிடம் ஏதோ ஓர் சக்தி இருப்பதாக உணர்ந்தன. புறாவைக் கண்டு வணங்குகின்றன. புறாவும் அந்தப் பறவைகளுக்கெல்லாம் நல்லறிவுரைகளை எடுத்துக் கூறியது. புறா சென்ற இடமெல்லாம் அதற்கு மதிப்புக் கிடைத்தது. புறாவும் மிகவும் மகிழ்ச்சியோடு தமக்குக் கிடைத்த உணவு வகைகளை மற்ற பறவைகளுக்கும் பகிர்ந்து கொடுத்தது. ஒரு நாள் பொன்னிறமான இறக்கைகள் கொண்ட காகத்தை வேடன் பார்த்தான். உடனே அந்த காகத்தைப் பிடித்துச் சென்று கூண்டிலடைத்து வேடிக்கைப் பொருளாக்கினான். வேடன் பிடியில் சிக்கிய காகம் அப்போது தான் தன் தவறை உணர்ந்தது. எனது பேராசை பிடித்து கீழ் தரமான எண்ணத்தால் இறைவனின் வரத்தை வீணாக்கிவிட்டேனே. நானும் புறாவைப் போன்று நல்லெண்ணத்தோடு வரம் கேட்டிருந்தால் இந்தத் துன்பம் நேர்ந்திருக்காதே. இறைவன் சொன்னது உண்மை தான். ஒருவரின் எண்ணப்படியே வாழ்க்கை அமைகிறது. உயர்வான எண்ணம் உடையோர் உயர்ந்த வாழ்க்கையை அடையலாம். தாழ்வான எண்ணம் உடையோர் தாழ்ந்த வாழ்க்கையை அடைவார்கள் என்பதை இப்போது புரிந்து கொண்டேன்என்று தனக்குள் கூறியபடி மனம் வருந்தியது. எண்ணத்தால் எண்ணம் போல் வாழ்க்கை அமைவதால், நல்ல எண்ணங்களை மனதில் கொண்டு வாழ வேண்டும்.

# சிலந்தி



உங்கள் வீடுகளை நூலாம் படைகளின் கூடாரமாக்கும் சிலந்திகளும் உண்டு. கடித்து உயிரையே பறித்துவிடும் சிலந்திகளும் உண்டு. சிலந்திகளிலும் ஆயிரம் வகை!

**வீட்டுச் சிலந்தி**

வீட்டுச் சிலந்திகள் இருள் அடைந்த இடங்களை அதிகம் விரும்பும். வீட்டுக் கூரையிலோ, ஜன்னல் பக்கமோ வலை கட்டும். நிறைய பூச்சிகளைப் பிடிக்க முடியும் என்பதால் இந்த இடங்களை தேர்ந்தெடுக்கிறது. வலையைக் கட்டி முடித்ததும் ஓர் ஓரமாக அமர்ந்து பூச்சிகள் வருவதற்காகக் காத்திருக்கும்.

பெரிய பூச்சிகள் மாட்டினால் அவற்றின் மேல் அதிக அளவு நூலைப் போட்டு பிடித்துக்கொள்ளும்.

**பிளாக் விடோ**

கறுப்புக் கண்ணாடி போல் உடலுள்ள சிலந்தி இது. ஆண் சிலந்திக்கும் பெண் சிலந்திக்கும் பல வித்தியாசங்கள் உண்டு. பெண் சிலந்திகள் ஆண் சிலந்திகளை விடச் சற்றுப் பெரியவை. பெண் சிலந்திகளின் வயிற்றுப் பகுதியில் ஒரு சிவப்பு வட்டம் இருக்கும். ஆண் சிலந்திகளுக்கு இரு புறமும் சிவப்பு மற்றும் வெள்ளையில் கோடுகள் காணப்படும்.

பொதுவாக இவை தனிமை விரும்பிகள். வலையில் சின்ன அதிர்வு ஏற்பட்டாலும் ஓரமாக பதுங்கிக்கொள்ளும். இந்த வகை சிலந்திகளின் கடி விஷமுள்ளது. ஆனால், ஆரோக்கியமானவர்களை ஒன்றும் செய்யாது. பெண் சிலந்திதான் கடிக்கும். ஆண் கடிக்காது.

**தோட்டச் சிலந்தி**

தோட்டங்களிலும் புல்வெளிகளிலும் வாழும். கறுப்பு மற்றும் மஞ்சள் கோடுகளுடன் காணப்படும். நடுப்பகுதியில் சற்று அதிக வலிமையாக இருக்கும்படி வலை கட்டும். அந்த இடத்தில் பெண் சிலந்தி அமர்ந்து கொள்ளும். ஆண் சிலந்தி பெண் சிலந்தியைச் சுற்றி வலையை மேலும் பெரிதாக்கிக்கொண்டே போகும்.

**தங்கக்கம்பி சிலந்தி**

இதைப் 'பூச்சிலந்தி' என்றும் சொல்வார்கள். மஞ்சள் உடலில் சிவப்பு தீற்றல்கள் இருக்கும். கண்களுக்கு இடையேயும் சிவப்பு வண்ணம் காணப்படும். இவை புல்வெளி, வயல், தோட்டங்களில் வெள்ளை, மஞ்சள் மலர்களின் மேல் மலர்ந்திருக்கும்.

இவை பெரிய மலர்களின் ஓரத்தில் அமர்ந்திருக்கும். பூவிலுள்ள தேனைக் குடிக்க பூச்சிகள் வந்ததும் பிடித்து அவற்றின் உடலுக்குள் விஷத்தை ஏற்றும். இந்த விஷம் பூச்சியின் உடலில் உள்ள பாகங்கள் அனைத்தையும் உருக்கி திரவமாக மாற்றும். அதன் பிறகு அந்த திரவத்தை அப்படியே உறிஞ்சிக் குடிக்கும்.

**பச்சைச் சிலந்தி**

இவை வயல்களிலும் காடுகளிலும் காணப்படும். புதர்களிலும் சின்னச் செடிகளிலும் கூட இருக்கும். வேகமாக ஓடக்கூடிய இச்சிலந்திகள் பூச்சிகளை பூனை போல் பதுங்கிச்சென்று பிடித்து உண்ணும்.

**பாலைவனச் சிலந்தி**

சிலந்திகளுள் மிகப்பெரியவை இவை. மணலுக்கடியில் புதைகுழிகள் கட்டி வாழும். இரவில் குழியின் வாசலருகே குட்டிப்பூச்சிகளுக்காக காத்திருந்து பிடிக்கும். மற்ற நேரங்களில் வெளியே வராது. ஆண் சிலந்திகள் 10–11 ஆண்டுகள் வாழும். பெண் சிலந்திகள் 25 ஆண்டுகள் வரை வாழும்.

## பெரிய பிரச்சினைகளை சிறியதாக்கும் வழி

நீங்கள் உங்கள் கையளவு உப்பை எடுத்துக்கொள்ளுங்கள். அதை ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு கரையும் வரை கரையுங்கள். கரையாமல் சிறிதளவு உப்புமிருக்கும். அது பரவாயில்லை. பிறகு உங்கள் விரலால் ஒரு சொட்டு அந்த உப்புத் தண்ணீரை வாயில் வைத்துப் பாருங்கள். சுவை எப்படி இருக்கின்றது? அதிகமாகவே உப்பு கரிக்கும். இந்த நிலையில் உங்களால் அந்த டம்ளர் முழுவதுமுள்ள தண்ணீரை குடிக்க முடியுமா? முடியவே முடியாது! அது தானே உங்கள் பதில். சரி... அதே அளவு உப்பை ஒரு குளத்தில் கரையுங்கள். உப்பு இருக்குமிடம் தெரியாமல் போகிறது. இப்போது குளத்தில் இருக்கும் தணணீரை ஒரு டம்ளருக்கு மேலும் குடிக்க உங்களால் முடியும். அதன் சுவை கூட இந்த உப்பால் மாறியிருக்காது. அதுபோல பிரச்சினை என்பது உப்பு என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி பிரச்சினைகளை எதிர் கொள்ளும்போது உங்களுடைய எண்ணங்களும் செயல்களும் குளம் போல விசாலமாக்கிக் கொண்டால் எவ்வளவு பெரிய பிரச்சினைகள் கூட இருக்கிற இடம் தெரியாமல் காணாமல் போய்விடும். அதை விட்டுவிட்டு பிரச்சினை வரும்போது அதை டம்ளர் போல குறுகிய மனப்பான்மையோடு எதிகொண்டால் மிகச் சிறிய பிரச்சினை கூட உங்களுக்கு பூதம் போல் நின்று பயமுறுத்தி கொண்டிருக்கும். அதை உங்களால் அவ்வளவு எளிதாக தீர்க்க முடியாது. இன்னொரு வகையில் சொல்லப் போனால் எந்த ஒரு சிறிய அல்லது பெரிய பிரச்சினை வந்தாலும் அதை உங்கள் வாழ்க்கை முன்னேற்றத்தின் மேல் அக்கறை கொள்ளும் நபர்களிடம் குளத்து தண்ணீர் போல பகிர்ந்துகொள்ள தவறாதீர்கள். அப்படி செய்யும் போது உங்கள் பிரச்சினை பல பகுதிகளாக பிரிக்கப்படும்போது பிரச்சினை சிறியதாகி வெகு விரைவில் சுலபமாக தீர்க்கப்பட்டு இருக்கின்ற இடம் தெரியாமல் போய்விடும். அதே பிரச்சினையை யாரிடமும் பகிர்ந்து கொள்ளாமல் டம்ளர் உங்களுடனே வைத்துக்கொண்டால் அதுவே உங்களுடைய வாழ்க்கை முழுவதும் பரவி பாரமாக மாறி உங்களது வழமையான சந்தோஷத்தையும் வாழ்வையும் பாழாக்கி விடும்.



# மனித உரிமைகள் தொடர்பில் மௌனம் காத்தார் ஜோன் கெரி

கொழும்பு, மே 6
முன்னணி மனித உரிமை குழுவொன்றின் சார்பில் அமெரிக்கா இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.
அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் தொடர்பாக வெளிப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஜோன் கெரி கோரிக்கை முன்வைத்துள்ளார்.
ஜோன் கெரி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் நீதி மற்றும் பொறுப்புக் கூறல் மையத்தினால் மின்னஞ்சல் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் தொடர்பாக தங்களுக்கு வெளிப்படுத்துமாறு குறித்த மின்னஞ்சலில் வலியுறுத்தப்பட்டிருந்தது.
ஊடகங்களினால் அம்பலப்படுத்தப்பட்ட திருகோணமலையில் உள்ள தடுப்பு முகாம் பற்றியும் குறிப்பிடுமாறு மின்னஞ்சலில் குறிப்பிடப்படிருந்தது.
நீதி மற்றும் பொறுப்புக் கூறல் மையத்தினால் 5 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. போர்க்குற்றங்கள் தொடர்பாக குற்றவியல் சட் டத்தரணியை நியமித்தல்.
போர் குற்றங்கள் தொடர் பான முறையீடுகளை விசா ரணை செய்ய சிறப்பு இடங் கள் அமைத்தல்.
பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகளைப் பொழுதுபோக்காக வைத்துக்கொள்ளாமல் குற்றங்கள் மற்றும் தப்பித்தவர்களுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளல்.
சமூக தலைவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர்களின் ஆலோசனைகளை ஆராய்தல்.
உண்மை மற்றும் நேர்மையானவர்களின் பாதுகாப்புக்காகப் பயங்கரவாதத் தடைச்சட்டம், பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் குற்றபுல னாய்வுப் பிரிவுகளை நியமித்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக் கப்பட்டுள்ளன.
எனினும், ஜோன் கெரி இது குறித்து தன்னுடைய நிலைப்பாடு தொடர்பாக தெளிவான அறிக்கை ஒன்றினை வழங்கவில்லை என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (த)


## சிறுநீரகம் தேவை

19 வயதுடைய அல்வின்மணி தர்மினி அவர்களுக்கு $B^+$ அல்லது $O^+$ உடைய சிறுநீரகம் தேவை.
அத்துடன் அலிவின்மணி தர்மினி அவர்கள் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய இரண்டு சிறுநீரகமும் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கான சத்திரசிகிச்சை உடனடியாக செய்யவேண்டியுள்ளதால் நல்லுள்ளம் கொண்டவர்களிடமிருந்து தங்களால் இயன்ற உதவிகளைச் செய்துதவுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
077 271 9027, 077 9427 667
(59229)(10)



யாழ். நகரில் பிரபல்யமான
## கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி
## Mobile Phone Repairing Course

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

May 16ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 16,17,18,19 ஆகிய நான்கு தினங்களில்

- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- தனிப்பட்ட கவனிப்பு.
- 1000 இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி திருத்தும் இரகசியங்கள் .
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:
- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

Special Trainer
Ganesh Sir

பாடநெறிக் கட்டணம் 8500/- | பதிவுக் கட்டணம் 2000/-

வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது

குறைந்த முதலீடின் உடனடியாக தொழில் தொடங்குவதற்கு தேவையான அனைத்து தகவல்களும்
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

BTEC # 21, Sirimbiyadi Land, (off Stanley Road), Jaffna. 077 6131358


## ரயில் விபத்துக்களால் மாதாந்தம் 12 பேர் சாவு

கொழும்பு, மே 6
ரயில் விபத்துக்களினால் மாதாந்தம் 12 பேர் வரை உயிரிழப்பதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.
வாகனச் சாரதிகள் மற்றும் மக்களின் கவனவீனமே இவ்வாறான விபத்துக்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணம் என ரயில்வே திணைக்களத்தின் பொதுமுகாமையர்ளர் விஜய அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.
ரயில் கடவைகளைக் கடக்கின்ற சந்தர்ப்பங்களில், சமிக்ஞைகளைப் பொருட்படுத்தாது பயணிக்கின்றமையினால் அதிக விபத்துக்கள் இடம்பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.
கடந்த சில நாள்களாக வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற ரயில் விபத்துக்களினால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுவதனால் ரயில் கடவைகள் தொடர் பான போக்குவரத்து விதிமுறைகளைப் பின் பற்றுவது குறித்த தெளிவூட்டல் களையும் வழங்கவுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட் டுள்ளது. (த)







## மணமகள் தேவை

செவ்வாய் 8இல் உள்ள இந்து மதத்தை சேர்ந்த ஐம்பது வயது நிரம்பிய பட்டதாரியான விவாகரத்து பெற்ற ஆணுக்கு முப்பது வயதுக்கு மேற்பட்ட மணமகள் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.
T.P: 076 660 6255

## சாரதி தேவை

தங்கி இருந்து பணியாற்ற அனுபவமுள்ள சாரதி ஒருவர் தேவை.
தொடர்புகொள்ளவும் 071 0380 149

## Personal/group class
(English / Tamil)

A/L Chemistry & Biology
A/L Science & Technology
Theory & 37 years past papers கற்பிக்கப்படும். T.P: 077 547793

## வேலை ஆள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள திருமண மண்டபத்துக்கு வேலை ஆள்கள் தேவை. ஆண்கள்-25 வயதுக்குட்பட்டவர்கள், மூன்று வேளை உணவு, தங்குமிட வசதிகளுடன் 20,000/= ரூபா சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 9234176


## வீதியில் இறங்கிய ஹெலிகள்

கொழும்பு, மே 6
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் அவருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகச் சென்ற குழு வினரையும் ஏற்றிக் கொண்டு பயணித்த இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் இரண்டு, வீதியில் தரையிறக்கப்பட்ட சம்பவ மொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் அவருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகச் சென்ற குழுவினரையும் ஏற்றிக்கொண்டு இரண்டு ஹெலிகொப்டர்கள் அம்பாந்தோட்டை சூரியவெவவுக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை சென்றன.
கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத் தெற்கு வளாகத்தை திறந்து வைப்பதற்காகவே ஜனாதிபதி அங்கு சென்றிருந்தார்.
அங்கு பெய்த கடும் மழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாகவே, அந்த இரு ஹெலிகொப்டர்களும் பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் காப்பெற் இடப்பட்ட வீதியில் தரையிறக்கப்பட்டன. (த)


## 2015ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் வாகனத் தரிப்பிடம் என்பவற்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் வாகனத் தரிப்பிடம் ஆகியவற்றை 01.06.2015 தொடக்கம் 31.05.2016 வரையான காலப்பகுதிக்கு வாடகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிராந்திய கேள்விச் சபையினால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவம் 18.05.2015 ஆம் திகதிவரை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கணக்குக் கிளையில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை பின்வரும் கொடுப்பனவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| சேவை விவரம் | மீளளிப்புச் செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| சிற்றுண்டிச் சாலை | 1000.00 | 20000.00 |
| வாகனத்தரிப்பிடம் | 750.00 | 5000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 19.05.2015 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பாக பணிமனையிலுள்ள கேள்விப்பெட்டியில் (Tender Box) இடப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed ) அதன் இடது பக்க மூலையில் சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி சமர்ப்பிப்பவர்கள் "2015 ஆம் ஆண்டு சிற்றுண்டிச் சாலையை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி " எனவும், வாகனத்தரிப்பிடத்துக்கு கேள்வி சமர்ப்பிப்பவர்கள் "2015ஆம் ஆண்டு வாகனத்தரிப்பிடத்தை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" எனவும் குறிப்பிட வேண்டும்.
சகல கேள்விப்பத்திரங்களும் 19.05.2015 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்
பிராந்திய கேள்விச் சபை,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கிளிநொச்சி.
(C/15754)(10)



## அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் 2016

அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் 2016ஆம் ஆண்டுக்கு தெரிவானோரின் விபரங்கள் வெளியாகியுள்ளது. இதில் தெரிவாகும் அதிர்ஷ்டசாலிகள் நிரப்பவேண்டிய படிவங்களை 2003ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் விண்ணப்பிப்பதில் அனுபவம் வாய்ந்த எமக்கூடாக பூர்த்தி செய்துகொள்வதுடன் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்.

முறைப்படி படிவங்கள் பூர்த்திசெய்யாமை அல்லது தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களால் அமெரிக்க தூதரகத்தினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் உங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

BRISTOL CYBER CAFE
No. 8/3/4, Bristol Street, Colombo 01.
Tel: 0112 393919 / 0774 276579 www.bristolcc.biz



## தேவை

கணக்கீட்டு அனுபவத்துடன்
கம்பியூட்டரில்
தமிழ், ஆங்கில தட்டெழுத்தையும்
செய்யக்கூடிய இளம் பணியாளர் தேவை.
யாழ் நகர்ச் சூழலில் வசிப்பவர் விண்ணப்பிக்கலாம்.
பணிப்பாளர், - பரந்தாம்,
375, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(59506)
(45,7,9)



## அறிவித்தல்

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய தலைவர் தமது 20.04.2015 ஆம் திகதிய கடித மூலம் அமரர் திரு. முருகேசு சிவசிதம்பரம் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்-பிரதிச் சபாநாயகர்) அவர்களுக்கு ஒரு சிலையை அமைப்பதற்கு நெல்லியடிச் சந்தியில் அமைந்துள்ள பின் கூறப்படும் ஆதனத்தில் ஒரு பகுதி நிலத்தை ஒதுக்கித் தருமாறு கோரியுள்ளார். வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நெல்லியடி உப அலுவலகப் பிரிவில் தற்போது தற் காலிக தகரக்கொட்டகை (தற்காலிக பஸ் தரிப்பிடம்) அமைந் துள்ள இவ்வாதனத்தை ஒதுக்குவது தொடர்பில் ஆட்சேபனை உள்ளவர்கள் ஒரு மாத காலத்துக்குள் எழுத்து மூலமாக எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஆதன இடாப்பு:-
வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலி கோயிற்பற்று கரவெட்டி வதிரிக் குறிச்சியிறை நாவல் நின்றெல்லை நி.ப (3/4) முக்கால், எல்லை கிழக்கு வீரகத்திப்பிள்ளை கணபதிப்பிள்ளைக்குடைய ஆதனம், தெற்கு றோட்டு, வடக்கும் மேற்கும் சின்னத்தம்பி சிற்றம் பலத்துக்குரிய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், மடம் முழுவதும்.

தொடர்பு:- பொ.வியாகேசு
தலைவர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.
(C/15752)(10)

# அத்தநாயக்கவை ஐ.தே.க. வெளியேற்றியது செல்லாது

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, மே 6
ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து முன்னாள் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க நீக்கப்பட்டது செல்லுபடியாகாது என்று உயர்நீதிமன்றம் நேற்றுக் காலை தீர்ப்பளித்துள் ளது.

ஐ.தே.கவின் பொதுச் செயலராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்திருந்து டன், அரசில் இணைந்து சுகாதார அமைச்சர் பதவியையும் பெற்றுக் கொண்டார்.

இந்தநிலையில், கடந்த பெப்ரவரி மாதம், அவரைக் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து ஐ.தே.க. நீக்கியது. இதனை எதிர்த்து, மார்ச் மாதம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார் திஸ்ஸ அத்தநாயக்க.

அந்தவழக்கின்தீர்ப்பு நேற்று காலை உயர்நீதிமன்றத்தினால்அறிவிக்கப்பட்டபோது, திஸ்ஸ அத்தநாயக்கவைக் கட்சியில் இருந்து நீக் குவதற்கு முறையாக வழிமுறைகளைப் பின்பற்ற வில்லை என்று கூறி, அவரது வெளியேற்றம் செல் லுபடியற்றது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (த)

### விமானப்படை சிப்பாய் நேற்றுச் சடலமாக மீட்பு

இரத்மலானை விமானப் படை முகாமைச் சேர்ந்த படைச் சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்தில் துப்பாக்கிச் சூட்டு காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலை செய்து கொண்டாரா அல்லது எவரேனும் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்களான என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி விமானப்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜிஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார். (த)

### ஸ்ரீ சபாரத்தினத்தின் 29 ஆவது ஆண்டு நினைவு தினம்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) முன்னாள் தலை வர் ஸ்ரீ சபாரத்தினத்தின் 29 ஆவது ஆண்டு நினைவு தினம் கோண்டாவில் அன்னங்கை கோகிலா வீதி தோட்டவெளியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தலை மையில் நடைபெறும் நிகழ்வின் போது திருநெல்வேலி கலாசாலை வீதி, உரும்பிராய் போன்ற பகுதிகளில் உள்ள சைவ விருத்திச் சங்க கருணை இல்லங்களிலுள்ள 276 சிறுவர்களுக்கு உணவு வழங்கல், கோண்டா வில் அன்னங்கை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் ஆத்மா சாந்திப் பூசை, மாலை உருவப்படத் துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துதல் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறும். (த-14)

## மரண அறிவித்தல்கள்

### இராசா சண்முகசுந்தரம்
(தவில் வித்துவான் -சித்தங்கேணி



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா சண்முகசுந்தரம் நேற்று (05.05. 2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், தவராசா-தனலட்சுமி தம்பதியரின் அன்பு மரு மகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், சுந்தரவதனா, அர விந்தன், கிருஷ்ணவேணி, துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜகுமார், சரண்யா ஆகியோரின் அன்பு மாமனும், சாமினி, வைஷ்ணவி, பிரபாகர், அஜீஷன், மதுஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2015) புதன்கிழமை பிற்பகல் 02 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக விளான் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டத்தரிப்பு றோட்,
வடலியடைப்பு.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 0774143149

### சீனியன் ஞானசேகரம்



உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் டிப்போ அருகாமையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீனியன் ஞானசேகரம் நேற்று (05.05. 2015) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியன்-முத்தம்மா தம்பதியரின் மகனும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், பபிர்தா, நித்தியா, லக்ஷிகா, நிறோசன், சாரங்கன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் தெற்கு வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

### திருமதி கமலாம்பிகை குலசேகரம்பிள்ளை



தோற்றம் 09.01.1936 மறைவு 04.05.2015

வேலணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் இல.4, கரப்பன்காடு வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை குலசேகரம்பிள்ளை கடந்த (04.05. 2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை குலசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான நல்லதம்பி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், தாமோதரம்பிள்ளை -அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), சிவசக்திவேல் (கொழும்பு), விவேகானந்தன் (லண்டன்), சிவகுமார் (வவுனியா), தமிழ்ச்செல்வன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைவாணி, திருமலர், விஜிதா, தமயந்தி, கமிலா ஆகியோரின் அன்பு மாமியும், ஆதித்தன், துவாரகா, துவாரகன், விலா ஜினி, விலோசன், அனோஜன், அஞ்சுகா, அர்ச்சனா, யதுசன், சாருஜன், தட்சகன், சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னேஸ்வரா நகைப்பூங்கா,
வவுனியா.

தகவல்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 08 . 1942

இறப்பு 04 . 05 . 2015

### திருமதி கமலவேணி கந்தசாமி

யாழ். காரைநகர் தோப்புக்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கமலவேணி கந்தசாமி 04-05-2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தங்கமயில் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு-பூசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தசாமியின் (போட் ஜாட் படகுதள உரிமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் உதயதாசன், தமிழ்ச்செல்வி, கலைச்செல்வி, ஆனந்ததாசன், கமலாம்பாள், காந்ததாசன், உதயநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கிருஷ்ணவேணி மற்றும் மதுரவேணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயராஜா, ஸ்ரீகுகன், ஸ்ரீநடராஜமூர்த்தி, சுகந்தி, நின்மதி, அருள்வாணி, வினோதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், குமரன், சிந்துஜா, லக்ஷ்மன், குகநேசன், தேவராஜ், இதயராஜ், சுயன், தினேஸ்குமார், லோசன், ரூபன், திலீபன், சோபியா, தினேஸ், தேனவன், நேகா, தருணிகா, நம்மிகா, தென்னவன், ஜெயஸ்ரீ, டிசான், பிரவினா, றொசான், லெனினா ஆகியோரின் அன்புப் பேத்தியும், லக்ஷயா, மிருதுளா, ஆர்த்தி, பிரதா, சதுர்யன், அஞ்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்
077 0659284

(59512)(10)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி பாலசுப்பிரமணியம் (M.M.B)

(மார்க்கண்டு அன் சன்ஸ், தம்புள்ள றோட், கலேவலை, பசார் வீதி, வவுனியா, கண்டி றோட், கிளிநொச்சி)



தன்னை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், 58, கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி பாலசுப்பிரமணியம் 04.05.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு- சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நந்தினியின் (லண்டன்) அன்புத் தாயும், தேவராசாவின் (லண்டன்) அன்பு மாமியும், ஹரிஷின், அருண், ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் செல்லம்மா தம்பதியரின் சம்பந்தியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சிவபாக்கியம், சிவபாதசுந்தரம் மற்றும், சிவபாலன், சிவராசா, சிவலட்சுமி, சிவயோகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவஞானத்தின் உடன் பிறவா சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா-பொன்னையா, பாக்கியம்-சிவசுப்பிரமணியம் மற்றும் செல்லம்மா-காலஞ்சென்ற செல்லத்துரை, இராமநாதி-தெய்வானை (கிளிநொச்சி), மயில்வாகனம்-உருக்குமணி (வவுனியா), தையல்நாயகி-சிவசம்பு (காரைநகர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சந்தானலட்சுமி (பெறாமகள்), மனோகரனின் (கொழும்பு) மாமியும், தமிழேந்தி, ஜெயவாணி, லாவண்ஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கணவர் (M.M.B)
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்
T.P: 021 222 1971

# மும்பை திரில் வெற்றி


டெல்லி எதிர் மும்பை அணிகளுக்கிடையிலான ஆட்டம். இரண்டு அணிகளும் அடுத்த சுற்றுக்கு முன்னேறாமல் வெளியேறக்கூடிய இக்கட்டான நிலையில் உள்ளன. இதனால் அடுத்து வரும் ஆட்டங்களில் இயலுமான அளவுக்கு வெற்றிகளைப் பெற்று இருப்பை உறுதிப்படுத்த வேண் டும் என்ற கட்டாயம் இரு அணிகளுக்கும். எனவே தமக்குள் யார் வெற்றி பெறுவது எனற தீவிரப்போராட்டத்தில் இரு அணிகளும்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் அகர்வாலுடன் அய்யர். அகர்வால் முதல் பந்திலேயே வாலைச்சுருட்டிக்கொண்டு பவிலியனுக்குச் சென்றார். மும்பை மண்ணில் ஆட்டம். சொந்தமண் ரசிகர்களின் அட்டகாசத்தைக் கேட்கவும் வேண்டுமா. எங்குபார்த்தாலும் நீலக் கொடிகள் பறந்தன. தலைமை இன்னிங்ஸுற்காக டுமினி. அய்யரும் சிறிது நேரம் தாக்குப்பிடிக்க டெல்லி படிப்படியாக சரிவில் இருந்து மீள ஆரம்பித்தது. அணியின் ஓட்டம் 43ஆக இருந்தபொழுது அய்யர் விடைபெற களத்தில் யுவராஜ். மேலதிக இலக்குகள் இழப்பின்றி ஒருவாறு அரைச்சதத்தை எட்டியது டெல்லி. அதே ஓட்டத்தில் டுமினி யும் ஆட்டமிழக்க டெல்லிக்கு மீண்டும் சிக்கல். வேறுவழி யின்றி அடித்தாடும் எண்ணத்தை விடுத்து நிதானிக்க ஆரம்பித்தார் யுவராஜ். யுவராஜ் ஒரு பக்கம் டெல்லியைக் கரைசேர்க்கும் முயற்சியில் தீவி ரம் காட்டினாலும் மறுமுனையில் இலக்குகள் சரிவதை எவராலும் தடுக்க முடியவில்லை. யுவராஜ்யுடன் இணைந்தார் இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ். வந்த வேகத்தில் ஒரு இமாலய சிக்சரை விளாசினார். அளவு கோல் 89 மீற்றராக அடையாளப்படுத்தியது. ஆனால் மத்தியூஸாலும் பதின்மத்தைத் தாண்டவில்லை. செய் அல்லது செத்துமடி பாணியில் அதிரடி காட்டத் தொடங்கினார் யுவராஜ். மலிங்கவின் பந்துகள் யுவராஜ்ஜின் மட்டையில் பட்டு பவுண்டரிகளாக சீறிப்பாய்ந்தன. சிக்சர்களும் இல்லாமல் இல்லை. மேலும் ஒரு இமாலய சிக்சருடன் அரைச்சதத்தைக் கடந்தார் யுவி. அடங்கியிருந்த நீலக்கொடிகள் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் யுவியின் ஆட்டமிழப்புடன் மீண்டும் பறக்க ஆரம்பித்தன. முடிவில் டெல்லி 152-6.



ரி-20 ஆட்டங்களில் 153 என்பது ஒரு இலக்கேயில்லை. ஆனால் ஷகீர்கான், மிர்ஷ்ஜு, குட்லர் நீல் இவ்வாறான பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டு எட்டுவதென்பது சற்று சவாலான விடயம்தான். இந்தியாவின் அதிகம் உழைக்கும் நகரமான மும்பைக்காக ஆட்டத்தை வெல்வதற்கு உழைக்க களத்தில் சிம்மொன்ஸிடன் பட்டேல். டெல்லியின் முதல் இலக்கு ஓட்டங்கள் ஏதும் பெறப்படாத நேரத்தில் பறிபோனதைப்போலவே மும்பையின் முதல் இலக்கும் பறிபோனது. சிம்மொன்ஸை அனுப்பி வைத்தார் ஷகீர். பாண்ஜாவும் நிலைக்கவில்லை. ஐந்தே ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். நான்காவது பந்துப்பரி மாற்ற நிறைவில் மும்பை 25-2. மழையின் ஆதிக்கம் ஆட்டத்தில் இடம்பெறலாம் என்ற காரணத்தி னால் ஓட்ட விகிதத்தை அதிகரித்து அணியின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் சற்று அடித்தாட முற்பட்டார் பார்த்திவ் பட்டேல் களத்தில் நிற்கவிடவில்லை மத்தியூஸ். அதே நோக்கத்தில் ஹர்ப ஜென்னை களத்தில் இறக்கியது மும்பை. ஐந்துடன் பவிலியனுக்குதிரும்பினார் பஜ்ஜி. ஐந்தாவது பந்துப்பரிமாற்றத்தில் மழை குறுக்கிட மும்பை 40-4. மழையின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்பட்டதனால் ஆட்டம் 50 நிமிடங்கள் தாமதித்தே ஆரம்பமானது. ராயுடுவும் பொலார்ட்டும் இணைந்து ஆட்டத்தின் போக்கை அப்படியே மாற்றி விட்டனர். இருவரது இன்னிங்ஸிலும் அடிக்கொரு தடவை பந்து பவுண்டரி எல்லையை எட்டிப் பார்க்க தவறவில்லை. முடிவில் மும்பை 5 இலக்குகளால் வெற்றி பெற்றது. (ரி)

# இந்தியா எதிர் பங்களாதேஷ் அடுத்த மாதம் ஆரம்பம்



அடுத்த மாதம் இ ந் தி ய அ ணி பங்களாதேஷுக்கு சு ற் று ப் ப ய ண ம் மேற்கொண்டு 3 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரிலும் ஒரு டெஸ்ட் ஆட்டத்தைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும் விளையாடவுள்ளது.

இந்தத் தொடர்களில் டெஸ்ட் தொடர் பதுல்லா மைதானத்திலும் ஒருநாள் தொடர்கள் மிர்பூரிலும் நடைபெறவுள்ளன. பொதுவாக ஜுன், ஜுலை உள்ளிட்ட மாதங்களில் பங்களாதேஷில் மழை பொழிவு அதிகமாக இருக்கும். இதனால் பொதுவாக, இக்காலங்களில் டெஸ்ட் தொடர்கள்நடத்தப்படமாட்டாது. இதனால் ஆட்டங்களுக்குஇடையிடையே மழையும் ஆதிக்கம் செலுத்தலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**கண்ணீர் அஞ்சலி**



நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தி யோகத்தராக J/94 பிரிவில் கடமையாற்றும் திருமதி **சவிதா சசிக்குமார்** அவர்களது அன்புக் கணவர்

**தியாகராசா சசிக்குமார்**

அவர்கள் அகால மரணமானார். அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், நல்லூர்.**

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

**பிறப்பு** 10 . 04 . 1928



**இறப்பு** 07 . 04 . 2015

அமரர் வல்லிபுரம் முத்துப்பிள்ளை

கடந்த 07.04.2015 அன்று சிவபதம் அடைந்த எமது தாயாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை (07.05.2015) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வ. செல்வராசா (மகன்)
T.P:- 077 6079274

# தோல்வியுடன் விடைபெற்ற இங்கிலாந்து வீரர் ட்ரொட்

இங்கிலாந்து அணியின் நட்சத்திர டெஸ்ட் வீரர் ட்ரொட் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.



சமீபத்தில் மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சென்ற இங்கிலாந்து அணியில் ட்ரொட் இடம்பெற்றிருந்தார். 3 டெஸ்ட் ஆட்டங்களைக்கொண்ட இந்தத் தொடரில் 6 இன்னிங்ஸிலும் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பம் ட்ரொட்டுக்கு கிடைத்தது. இந்த 6 இன்னிங்ஸிலும் சேர்த்து ட்ரொட் மொத்தம் 72 ஓட்டங்கள்தான் எடுத்தார். இந்தத் தடுமாற்றத்தையடுத்தே இவர் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஓய்வு குறித்து ட்ரொட் தெரிவித்ததாவது; 'கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன். இது கடினமானது என்றாலும், இங்கிலாந்து அணியில் விளையாடக் கூடிய அளவுக்கு என்னுடைய ஆட்டம் சிறப்பாக இல்லை என்றே உணர்கிறேன். எனக்கு அணியில் விளையாட வாய்ப்பு அளித்த, ஆதரவு தந்த அனைவருக்கும் நன்றி. இங்கிலாந்து கிரிக்கெட் தற்பொழுது அதன் கடின காலங்களை எதிர்கொள்ளுகின்றது. மிக விரைவில் கிரிக்கெட்டின் தாயகம் நாங்கள்தான் என்பதை எமது அணி நிரூபிக்கும்-என்றார். (த-ரி)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு**

கடந்த 18.04.2014 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர்
*சின்னையா சிவபாக்கியம்*



அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கிரியைகள் இன்று (06.05.2015) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

## 19 இல் கையெழுத்திடாமல் வெளிநாடு சென்ற சபாநாயகர்

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்ட 19ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இன்னும் கையெழுத்திடவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அடுத்த நாள், சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்து , 19ஆம் திருத்தச் சட்டத்தில் கையெழுத்திடாமல் வெளிநாடு சென்றுள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
எனினும், விரைவில் சபாநாயகர் 19ஆவது திருத்தச் சட்டத்தில் கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த)

## இலங்கைக்கு அமெ. பாதுகாப்பு உதவிகள்

கொழும்பு, மே 6
இலங்கைக்கு கடல்சார் பாதுகாப்பு உதவிகளை வழங்கும் திட்டம், அமெரிக்காவுக்கு இருப்பதாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் ஜெப் ரத்கே தெரிவித்துள்ளார். வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட பிராந்திய விவகாரங்களின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டியிருப்பதாகவும், எனவே கடல்சார் பாதுகாப்பில் அமெரிக்காவின் பங்கு என்ன என்றும், இந்த விவகாரத்தில் இலங்கையின் பங்கை அமெரிக்கா இந்தியப்பெருங்கடலிலா அல்லது ஏனைய பிராந்தியங்களிலா எதிர்பார்க்கிறது என்று கேள்வி எழுப்பப்பட்டது.
அதற்குப் பதிலளித்த, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் ஜெப் ரத்கே, இலங்கையின் நடவடிக்கைகள் தொடர்பான மேலதிகமான விவரங்கள் தன்னிடம் இல்லை என்றும், ஆனால், நிச்சயமாக இலங்கையை ஒரு பங்காளராக பார்க்கிறோம், இலங்கையுடனான உறவுகளை நாம் கட்டியெழுப்புகிறோம், ஆனால், ஜோன் கெரியின் கருத்துகள் தொடர்பான மேலதிக விவரங்கள் என்னிடம் இல்லை என்றும் தெரிவித்தார்.
இதையடுத்து, கடல்சார் பாதுகாப்பு விடயத்தில், இலங்கைக்கு எவ்வாறு உதவி அளிப்பது என்பது தொடர்பான திட்டம் எதையும் அமெரிக்கா கொண்டிருக்கிறதா என்று, எழுப்பப்பட்ட மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர், ஆமாம் என்று பதிலளித்தார். (த)

## மைத்திரி - மஹிந்த சந்திப்பு நடக்குமா ?

கொழும்பு, மே 6
ஜனாதிபதி மைத்திரிக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் இடையில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சந்திப்பு நடைபெறுமா என்பது சந்தேகமே என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தச் சந்திப்பு தொடர்பில், மஹிந்தவுக்கு எதுவுமே தெரியாது என்று, அவரது பேச்சாளர் தெரிவித்துள்ளமையினாலேயே இந்தச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் இடையில் கடந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு ஏற்கனவே ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், இரண்டாவது தடவையாக இன்று ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பும் ஒத்தி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில், கட்சியின் முக்கிய உறுப்பினர்களால், இன்றைய சந்திப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்தச் சந்திப்பு, சபாநாயகரும் முன்னாள் ஜனாதிபதியின் சகோதரருமான சமல் ராஜபக்ஷ வீட்டில் இடம்பெறும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் ஜனாதிபதி செயலகத்திலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறும் என்று பின்னர் குறிப்பிடப்பட்டது.
இந்த நிலையில், இத்தகைய சந்திப்புத் தொடர்பான விவரங்கள் எதையும், மஹிந்த அறிந்திருக்கவில்லை என்று அவரது பேச்சாளர் றொகான் வெலிவிற்ற கூறியுள்ளார்.
இந்தச் சந்திப்பு நடக்காது போனால், ஜனாதிபதி மைத்திரியைச் சந்திக்க மஹிந்த பின்வாங்குகிறார் என்று காட்டுவதற்கான ஒரு திட்டமிட்ட முயற்சியாக இது இருக்கலாம் என்றும், அவர் குறிப்பிட்டுள்ளார்.
அதேவேளை, முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று, மஹிந்த மைத்திரி சந்திப்பு திட்டமிட்டவாறு இன்று இடம்பெறும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (த–5)

## சட்டத்தை நிறைவேற்றியும் நடைமுறைப்படுத்தாத அரசு

கொழும்பு, மே 6
தேசிய ஔடத கொள்கை தொடர்பிலான சட்ட விதிகள் இன்னமும் தயாரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
தேசிய ஔடத கொள்கை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டு இரு மாதங்கள் கடந்துள்ளன. எனினும் இது தொடர்பிலான சட்ட விதிகள் இதுவரை தயாரிக்கப்படவில்லை.
100 நாள் வேலைத்திட்டத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதி தொடர்பிலான சட்டம் மார்ச் மாதம் 6ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. எனினும் அந்தச் சட்டம் நிறைவேற்றபட்டாலும் – இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த)

# இலங்கைத் தமிழர்களை காக்கவேண்டும் பா.ஜ.க.

### இல. கணேசனிடம் மனோ கணேசன் கோரிக்கை



கொழும்பு, மே 6
இலங்கையில் வாழும் 32 லட்சம் தமிழர்களையும், பிரதமர் நரேந்திர மோடியின் பாரதீய ஜனதா அரசு கவனத்தில் எடுத்து பாதுகாக்க வேண்டும். இலங்கைத் தீவில், தமிழர்களுடன் 18 லட்சம் முஸ்லிம்களும், 150 லட்சம் சிங்களவர்களும், பிற சிறுபான்மையினரும் வாழ்கின்றார்கள். இலங்கையில் வடக்குக்கும், தெற்குக்கும், தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும், வட–கிழக்கு, இந்திய வம்சாவளி, மலையகத் தமிழர்களுக்கும், தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கும் இடையில் நமது கட்சி எப்போதும் உறவுப் பாலமாகச் செயலாற்றுகின்றது என ஜன நாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசன், இலங்கை வந்துள்ள பாரதிய ஜனதா கட்சி பிரமுகர் இல. கணேசனிடம் தெரிவித்தார்.
நேற்று நண்பகல் இடம்பெற்ற சந்திப்பில் பாரதீய ஜனதா கட்சி சார்பாக இல. கணேசன் மற்றும் தமிழக துணைத் தலைவர் சக்கரவர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர். ஜனநாயக மக்கள் முன்னணி சார்பில் கட்சி தலைவர் மனோ கணேசன், உப செயலாளர் சண். குகவரதன், பரப்புரைச் செயலர் குருசாமி, ஊடக செயலர் பாஸ்கரா ஆகியோர் கலந்துக்கொண்டனர். இல. கணேசனுடன் நடத்திய கலந்துரையாடல் தொடர்பில் செய்தியாளர்களிடம் உரையாற்றிய மனோ கணேசன் கூறியதாவது:–
கடந்த மன்மோகன் சிங் அரசின் இலங்கை தொடர்பான கொள்கை இந்திய தேசிய நலனுக்கும், இலங்கையில் வாழும் தமிழர்களின் நலனுக்கும், இலங்கை–இந்திய நீண்டகால நட்புறவு கோட்பாடுகளுக்கும் அப்பால் சென்று சில தனிப்பட்ட உணர்வுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டதோ என்ற சந்தேகம் எனக்கு இருகின்றது. எனவே இன்று இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள அதேவேளையில், இந்தியாவிலும் புதிய அரசு ஆட்சியில் இருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியை தருகிறது. அதேவேளை இந்தியாவின் பிரதான ஆளும் கட்சியில், இலங்கை தொடர்பான நீங்கள் முக்கிய பாத்திரம் வகிப்பதும் எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை தருகிறது. இது சோனியா காந்தியின் காங்கிரஸ் அரசு அல்ல. இது நரேந்திர மோடியின் பாரதீய ஜனதா கட்சி அரசு என்ற செய்தியும், இரண்டு ஆட்சிகளுக்கும் இடையிலான வேறுபாடும் இன்று இலங்கையில் அனைத்து தரப்பினராலும் புரிந்துக்கொள்ளப்பட்ட விடயங்கள் என்பதை உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.
இன்றைய இலங்கை அரசு கடந்த கால மஹிந்த அரசுடன் பிரதான இரண்டு அடிப்படைகளில் வேறுபடுகிறது. ஒன்று, கடந்தகால தமிழர் எதிர்ப்பு அரச பயங்கரவாத நிலைப்பாடு இன்று இல்லை. இரண்டாவது, அரசு மட்ட இந்திய எதிர்ப்பு இன்று இல்லை. ஆகவே நாட்டில் மைத்திரி–ரணில் ஆட்சி தமிழர்களின் மத்தியில் கடந்த காலங்களை ஒப்பிடும் போது ஒரு மகிழ்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், நாம் அவசரகதியில் மாற்றங்களை திணித்து மீண்டும் மஹிந்த தலையெடுக்க இடம்கொடுக்க விரும்பவில்லை.
இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் சொல்லொணா போர்க்கால துன்பங்களை அனுபவித்தார்கள். அவர்களின் தேசிய அரசியல் அபிலாஷை மற்றும் வாழ்வாதார பிரச்சினைகளை தீர்த்து வைக்க பாரத அரசு துணையிருக்க வேண்டும். அதேபோல் இலங்கையில் இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே இருக்கின்ற ஐந்து பிரதான மாகாணங்களில் இந்நாட்டு தமிழர் சனத்தொகையில் சரிபாதியினர் வாழ்கின்றார்கள். குறிப்பாக மலைநாட்டில் பெருந்தோட்ட தொழிலாளர்களாக கல்வி, சுகாதார, வீடமைப்பு ஆகிய துறைகளில் ஒதுக்கப்பட்ட பிரிவினராக தமிழர்கள் வாழ்கிறார்கள். அதேபோல் மலையகத்தில் இருந்து குடிபெயர்ந்தவர்களும், வடக்கு–கிழக்கில் இருந்து குடிபெயர்ந்தவர்களும், கடந்த காலங்களில் தமிழகத்தின் கரையோர மாவட்டங்களில் இருந்து நேரடியாக குடிபெயர்ந்தவர்களுமான தமிழர்கள் வந்து குடியேறி கொழும்பு உட்பட மேல்மாகாணத்தில் நிலைகொண்டு வாழ்கிறார்கள். இத்தகைய அனைத்து தமிழர்களையும், பிரதமர் நரேந்திர மோடியின் பாரத ஜனதா அரசு கவனத்தில் எடுத்து பாதுகாக்க வேண்டும்–என்றார்.(த)

## மலையக மக்களுக்கு தேர்தலின் பின்னர் வீடு

### அமைச்சர் திகாம்பரம் உறுதி

தேர்தலின் பின்னர் மலையக மக்களின் வீட்டுத் தேவைகள் பூர்த்தியாக்கப்படும் எனத் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ப.திகாம்பரம் தெரிவித்துள்ளார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
கடந்த காலத்தில் மலையகத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள் மக்களுக்குப் போலியான வாக்குறுதிகளை வழங்கி, அவர்களை ஏமாற்றி வந்தனர். இதனால் மக்கள் அவர்களைப் புறக்கணித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது முழுமையான ஆதரவையும் வழங்கியுள்ளனர்.
இந்நிலையில் மலையக மக்களின் தனி வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் எமது அரசு நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகின்றது என அவர் தெரிவித்தார்.
மேலும், மண் சரிவினால் பாதிப்படைந்த மீரியாபெத்த பகுதியில் 75 வீடுகளைக் கட்டுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வீடுகள் விரைவில் மக்களிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.
மலையக மக்களுக்கான ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்ட 376 வீடுகள் விரைவில் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:–
எமது அமைச்சு குறிப்பிட்டபடி வேலைகளை நிறைவேற்றவில்லை மக்களுக்கான வீடுகளை கையளிக்கவில்லை எனப் பலரும் பல விதமான பொய்க் குற்றச்சாட்டுக்களை பரப்பி வருகின்றனர். ஆனால் அவை உண்மையல்ல என்பதை உணர்த்துவது எமது கடமை.
வீடு கட்டுவது என்பது வெறுமனே ஒரு நாளில் அடிக்கல்லை நாட்டி மறு நாளில் வீட்டைக் கட்டி முடிக்க முடியாத ஒரு விடயமாகும்.
கொழும்பில் என்றால் அவ்வாறு செய்யலாம் ஆனால் மலையகம் மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் மழை மற்றும் மண் சரிவு போன்ற இயற்கை இடர்கள் தொடர்ந்து ஏற்படும் இடங்கள்.
பாதிக்கப்பட்ட மக்கள் 5000 பேர் வரையில் இருக்கிறார்கள். தற்போது அவர்களுக்குரிய 376 வீடுகளின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.– என்றார். (த)

## தாய்மையில் இலங்கைக்கு 92ஆவது இடம்

கொழும்பு, மே 6
தென்னாசியாவில் இலங்கை மற்றும் மாலைத்தீவு என்பன தாய்மையில் சிறந்த இடங்களை பெற்றுக்கொண்டுள்ளன.
சிறுவர் பாதுகாப்பு நிதியம் வெளியிட்டுள்ள உலகளாவிய 'அன்னை 2015' பட்டியலிலேயே இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
உலகளாவிய ரீதியில் 179 நாடுகளில் இலங்கை 92 ஆம் இடத்தில் உள்ளதுடன் மாலைதீவு மற்றும் ஜமெய்க்கா என்பன அதே இடத்தில் உள்ளன.
இதேவேளை, கடந்த வருடம் வெளியிடப்பட்ட பட்டியலில் இலங்கை 89ஆவது இடத்தில் இருந்தது.
1,400 பேருக்கு ஒன்று என்ற நிலையில் இலங்கையில் தாய்மார் இறப்பு வீதம் காணப்படுவதாக அந்த பட்டியலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
நோர்வே, பின்லாந்து, ஐஸ்லாந்து, டென்மார்க் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் உலகளாவிய ரீதியில் முதலிடத்தில் உள்ளன.
இதேவேளை, மோசமான நாடுகள் பட்டியலில் சோமாலியா, கொங்கோ குடியரசு, மத்திய ஆபிரிக்கா, மாலி மற்றும் நைஜர் ஆகிய நாடுகள் இடம்பிடித்துள்ளன. (த)

# நவாலி விவசாயிகளின் தேவைகளை தீர்க்குக

## வலி.தென்மேற்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை

'நவாலியில்உள்ள தூர்ந்து போயுள்ள குளங்கள், கேணிகள், வாய்க்கால் கள் முழுமையாகக் கணக்கெடுத்து மீள் புனரமைப்புச் செய்ய வேண்டும் உள்ளிட்ட 4 கோரிக்கைகள் முன் வைப்பு.

மானிப்பாய், மே 6
நவாலி விவசாயிகளின் அத்தியாவசிய தேவைகளை முன் வைத்து வலி.தென்மேற்கு பிரதேச செயலர், சண்டிலிப்பாய் பெரும்பாக அலுவலர், கிராம அலுவலர்,விவசாயிகள்சம்மேளன (நவாலி) தலைவர், செயலாளர்கள் ஆகியோருக்கு நவாலி விவசாயி வி.க.இராசதுரை விரிவான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
'நவாலியில் உள்ள தூர்ந்து போயுள்ள குளங்கள், கேணிகள், வாய்க் கால்கள் முழுமையாகக் கணக் கெடுத்துமீள்புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.
அமைச்சால் வழங்கப்பட்ட கம்பிகள் பயன்பாடு இன்றி உள்ளன. எனவே கால்நடைகளின் தொல்லைகளில் இருந்து பயிர் நிலங்களைப் பாதுகாக்க தூண்கள் இட்டு கம்பியிட வேண்டும்.
-136கிராம அலுவலர் பிரிவில் ய்க்கால் பாதையை (நல்லையா தி) முழுமையான 9 அடிப்பாதையாக புனரமைத்துத்தரவேண்டும்.
கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த விவசாய சம்மேளனங்கள்பிரத்தியேகமாகச்செயற்பட வேண்டும். போன்ற 4 கோரிக்கைகளை முன் வைத்தே கடிதம் எழுதப்பட்டுள்ளது.
இதேவேளைமேற்படிவிடயம்தொடர்பில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளரின்கவனத்துக்குக்கொண்டுசெல்லவும் குறித்த விவசாயி நடவடிக்கை எடுத்துள்ளார். (வ–50)



வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கமும் ,கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து ஏற்பாடு செய்த இளங்கோ அடிகள் நினைவு தின நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கோவில்குளம் சிவன் கோவில் முன்பாக இடம்பெற்றது. (வ)

## மன்னார் வெண்மையாக்கல் சங்க பிரச்சினைகளுக்கு தீர்வு

### உறுதியளித்தார் அமைச்சர் டெனீஸ்வரன்



மன்னார், மே 6
மன்னார் பிரதேச வெண்மையாக்கல் உரிமையாளர் சங்கத்தினரை அவர்களது சங்க மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.
குறித்த சந்திப்பின் போது அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டதோடு, அவர்களது அத்தியாவசிய பிரச்சினைகளை முதலில் இனம் கண்டு அதனை முடிந்தளவுக்கு உடன் சீர் செய்து தருவதாகவும், சங்கத்தின் ஒற்றுமையைக் கட்டி எழுப்புங்கள் அபிவிருத்திகளை நான் கொண்டுவருகிறேன் என்றும் அவர்களுக்கு அமைச்சர் உறுதி வழங்கினார்.
அதனைத்தொடர்ந்து கடந்த தொழிலாளர் தினத்தை ஒட்டி சங்க உறுப்பினர்களுக்கு சாரம் மற்றும் சேலை என்பவற்றை வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ–56)

## தென்மராட்சி கூ.ச.கிளைகளின் கூட்டம்

கொடிகாமம், மே 6
தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினது சகல கிளைகளுக்குமான கிளைப் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10 மணிக்கு கிளைச் சங்கங்கள் அமைந்துள்ள குறிப்பிட்ட இடங்களில் இடம்பெறவுள்ளது. இது தொடர்பான கூட்ட அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட கிளைக் குழு உறுப்பினர்களுக்கு குறித்த கிளைகளுக்குப் பொறுப்பான அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் அனுப்பப்பட்டுள்ளன.
இந்தக் கூட்டத்தில் குறிப்பிட்ட தொகை உறுப்பினர்கள் பொதுச் சபை உறுப்பினர்களாக ஒவ்வொரு கிளைகளுக்கும் தெரிவு செய்யப்படவுள்ளனர். அவர்கள் மூலமே மேற்படி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு நெறியாளர் குழு தெரிவு செய்யப்படும். (வ–122)



தென்மராட்சி கல்வி வலயத்தில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப் பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற சு.பாக்கியராஜாவுக்கு சாவகச் சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்ப நிலைய பெற்றோர்களால் ஞாயிறன்று கௌரவிப்பு விழா நடத்தப்பட் டது. (வ–9)

## யாழ்.சிறையில் 19 பேர் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 6
யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 19 பேர் நேற்றுமுன் தினம் குருதிக்கொடை செய்துள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.
வெசாக் தினத்தையொட்டி இந்த குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் யாழ்.சிறைச்சாலையைச் சேர்ந்த 19 பேர் குருதிக்கொடை வழங்கியதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (வ–4)



வவுனியாவில் இடம்பெற்ற வெசாக் தின கொண்டாட்டத்தின் போது வைக்கப்பட்டிருந்த வெசாக் கூடுகளை சிறார்கள் பார்வையிடுவதைக் காணலாம். (வ–421)

# யூனியன், யாழ்ப்பாணக் கல்லூரி ஹொக்கி ஆட்டங்களில் அசத்தல்





மாங்குளம்; மே 6
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கித் தொடரின் இறுதியாட்டங்கள் கடந்த சனிக்கிழமை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.
இதில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமாகி 8ஆவது நிமிடத்தில் யூனியன் கல்லூரி அணி வீரர் துசாந்தன் மிகச் சிறப்பான கோல் ஒன்றை அடிக்க ஆட்டத்தில் விறுவிறுப்புத்தன்மை இரட்டிப்படையத் தொடங்கியது. பழிதீர்த்து யூனியனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பல தடவைகள் யாழ்ப்பாணக் கல்லூரி அணி முன்னேறிய போதும் எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை. இதனால் ஆட்டத்தின் முதலாவது பாதியில் 1:0 என்ற கோல்களின் அடிப்படையில் யூனியன் கல்லூரி அணி முன்னிலை வகித்தது.
இடைவேளையின் பின்னர் இரு அணிகளும் பலமாக மோதிய போதும் இரு கோல்காப்பாளர்களின் சாதுரியத்தால் கோல் போட முடியவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் 1:0 என்ற கோல்கணக்கில் யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.
பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்பாணக் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமானது முதல் யாழ்பாணக் கல்லூரியின் ஆதிக்கம் மேலோங்கி காணப்பட்டது. ஆட்டம் தொடங்கி 5ஆவது நிமிடத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி வீராங்கனை தனுசிகா தனது அணி சார்பாக முதலாவது கோலை பதிவு செய்தார். இதனால் ஆட்டத்தின் முதல்பாதியில் யாழ்ப்பாணக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. ஆட்டத்தின்இரண்டாவதுபாதியில்வெற்றியை இலகுபடுத்தும் நோக்கில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் புதிய வியூகங்கள் அமைத்துக் களமிறங்கினர். இதனால் இவர்களின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பண்டத்தரிப்பு அணியினர் திணறினர். இதனைச் சாதகமாக பயன்படுத்திய யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் வீராங்கனைகளான கீர்த்தனா, விந்துஜா ஆகியோரால் இரண்டாவது பாதியின் 9ஆவது மற்றும் 13ஆவது நிமிடங்களில் கோல்கள் போடப்பட பண்டத்தரிப்பு அணியினர் நிலைகுலைந்தனர். இறுதியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 3:0 என வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. (த-ரி-422)

## இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணம்

வவுனியா, மே 6
விளையாட்டு ஆற்றல் உடைய இளைஞர்களுக்கு வலுவான ஆரம்பத்தை மையமாகக்கொண்டு நாட்டிலுள்ள அனைத்து இளைஞர் கழகங்களையும் உள்ளடக்கிவிளையாட்டுப்பொருள்களை பகிர்ந்தளிக்கும்தேசிய வேலைத்திட்டத்தில் கடந்தசனிக்கிழமை வவுனியா மாவட்டத்திலுள்ள இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.



குறித்த நிகழ்வையொட்டி வவுனியா மாவட்டத்துக்குட்பட்ட நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் அஸ்திரம் இளைஞர் கழகம் வெற்றிபெற்று மாவட்ட சம்பியனானது. (த-ரி)



## கிண்ணம் நண்பர்களிடம்

யாழ்ப்பாணம் மே. 6
கிருபா லேணர்ஸின் அனுசரணையில் சாட்டி ஏசியன் விளையாட்டுக் கழகம் நடத்திய 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மண்கும்பான் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றுக்கிண்ணத்தைக்கைப்பற்றியது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சாட்டி ஏசியன் அணி நண்பர்களை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. இதற்கேற்ப களமிறங்கிய மண்கும்பான் நண்பர்கள் கழகம் 20 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது.
120 பந்துகளில் 102 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலைமையில் பதிலுக்குக் களமிறங்கிய சாட்டி ஏசியன் அணியின் ஆரம்பம் சிறப்பாக அமைந்தபோதிலும் அந்த அணியின் மத்தியவரிசை மற்றும் பின்வரிசை வீரர்களின் சொதப்பலால் 18ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 90 ஓட்டங்களில் சுருண்டது.
ஆட்டநாயகனாக நண்பர்கள் கழகத்தின் தலைவர் சசியும் சிறந்த பந்துவீச்சாளராகவும் களத்தடுப்பாளராகவும் ஏசியன் அணியின் நிசாந்தனும் தெரிவானார்கள். இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக கிராம சேவையாளர் ரட்னேஸ்வரன் கலந்து கொண்டார். (த-ரி)

## கரம் தொடரின் முடிவுகள்



கரணவாய், மே 6
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்டக் கரம் தொடரில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு.

**15வயதுப் பிரிவு**

15வயதுப்பிரிவில் ஆண்களுக்கான கரம் தொடரில் முதலாமிடத்தை புற்றளை மகா வித்தியாலயமும் இரண்டாமிடத்தைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் மூன்றாமிடத்தை தும்பளை சிவப்பிரசாச வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.
15வயதுப் பிரிவில் பெண்களுக்கான கரம் தொடரில் முதலாம் இடத்தைப் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையும் இரண்டாமிடத்தை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் மூன்றாம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

**19 வயதுப் பிரிவு**

19 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான கரம் தொடரில் முதலா மிடத்தைப் புற்றளை மகா வித்தி யாலயமும், இரண்டாமிடத்தை தேவரையாளி இந்துக்கல்லூரியும் மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.
19 வயதுப் பிரிவில் பெண்களுக்கான கரம் தொடரில் முதலாமிடத்தை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையும் பெற்றுக்கொண்டன. (த-ரி-108)

## சென்.அன்ரனிஸ் மகுடம்

யாழ்ப்பாணம், மே 6
கம்பளை ஜொலியா விளையாட்டுக்கழக அணிக்கும் பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான சிநேக பூர்வ உதைபந்தாட்டமொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம் பெற்றது. இந்த ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் போராடி வெற்றி பெற்றது. (த-ரி-23)



## வடமராட்சிப் பாடசாலைகளின் மேசைப்பந்தாட்ட முடிவுகள்

கரணவாய், மே 6
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட மேசைப்பந்தாட்டத் தொடரில் பங்குபற்றி முதலிடத்தைப் பெற்ற அணிகளின் விபரம் வருமாறு:-
15 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் பெண்கள் பிரிவில் முதலாமிடத்தைப்பருத்தித்துறைமெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் பெற்றுக் கொண்டன.
19 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தைப் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையும் பெற்றுக்கொண்டன. (த-ரி-108)

## மாவட்ட வலைப்பந்து; கிண்ணம் கரைச்சியிடம்

யாழ்ப்பாணம் மே 6
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலக அணி வெற்றிபெற்று சம்பியன் ஆனது.
கடந்த சனிக்கிழமை கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது. இதில் கரைச்சிப் பிரதேச செயலக அணி 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது. (த-ரி-23)

## சென்.அன்ரனிஸ் எதிர் பாடும்மீன் நாளை மோதல்

யாழ்ப்பாணம், மே 6
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம்நடத்தும்எவ்.எ.கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் விலகல் முறையிலான ஆட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பாசையூர்சென்.அன்ரனிஸ்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகஅணிமோதவுள்ளது.(த-ரி-23)




# பஞ்சாப் பரிதாபம் அதிர்ச்சியில் பிரீத்தி



நடப்பு ஐ.பி.எல். தொடரில் அடுத்த சுற்றுக்குத் தகுதிபெறாமல் பரிதாபமாக வெளியேறும் விளிம்பில் உள்ளது பஞ்சாப் அணி. நடப்பு ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணி இதுவரை விளையாடிய 9 ஆட்டங்களில் 2 ஆட்டங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. ஏனைய ஏழு ஆட்டங்களிலும் படுதோல்வி யடைந்து புள்ளிப்பட்டியலில் கடைசியில் உள்ளதுடன் இனி வரும் ஆட்டங்களில் 5 ஆட்டங்களில் ஏதாவது ஒன்றில் தோல்வி யடைந்தால் கூட பஞ்சாப்பின் முடிவை ஏனைய அணிகளின் ஆட்டத்தை வைத்து கணிக்க வேண்டிய கட்டாயம் அந்த அணிக்கு ஏற்படும். இந்த நிலையில் பஞ்சாப் இன்றைய ஆட்டத்தில் பலமிக்க பெங்களூர் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்த ஆட்டத்தின் முடிவே பஞ்சாப்பின் முடிவையும் தீர்மானிப்பதாகவும் அமையும். பஞ்சாப்பின் தொடர் தோல்வி களுக்கு துடுப்பாட்ட வரிசையும் தொடக்க வீரர்களின் சொதப் பலும் காரணம் என்று சொல்லப்படுகின்றது. பஞ்சாப் அணியின் சேவாக் கடைசியாக விளையாடிய 4 இன்னிங்ஸில் 5 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளார். நடப்பு ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் சார்பாக இதுவரை சிறந்த ஒரு இணைப் பாட்டம் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. புள்ளிப் பட்டியலில் சென்னை 14 புள்ளிகளுடன் முதல் இடத்திலும் ராஜஸ்தான் 14 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளன. (த-ரி)

## கோஹ்லி-கம்பீர் மீண்டும் மோதல்

பெங்களூர் அணித் தலைவர் விராட் கோஹ்லியும், கொல்கத்தா அணித் தலைவர் கம்பீரும் மீண்டும் மோதிக் கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த வருட ஐ.பி.எல். தொடரில் இருவரும் மோதிக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அடிதடி வரை சென்ற சண்டையைக் கூடி இருந்த வீரர்கள் விலக்கிவிட்டனர். இந்த நிலையில் கொல்கத்தா, பெங்களூர் அணிகள் மோதிய ஆட்டத்தின்போது மீண்டும் இருவரும் மோதிக் கொண்டதாக கூறப்படுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் கடந்த முறை சண்டையிட்ட அதே பெங்களூர் சின்னச்சாமி ஸ்ரேடியத்தில் தான் இந்த முறையும் சண்டையில் ஈடுபட்டுள்ளனராம். கடந்த முறை சண்டை வந்தபோது அந்த ஆட்டத்தில் பெங்களூர் அணி வென்றதைப்போல் இந்த முறையும் பெங்களூரே வென்றுள்ளது. தொடர் மழையால் 10 பந்துப்பரிமாற்றங்களாக குறைக்கப்பட்ட இந்த ஆட்டத்தில் பெங்களூர் அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் கொல்கத்தாவை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது. (த-ரி)



## கொல்கத்தாவே போதும்

கொல்கத்தா அணியின் ஹைதராபாத்துக்கு எதிரான வெற்றிக்குப்பின்னர் செய்தியாளர் சந்திப்பில் கொல்கத்தாவின் பயிற்சியாளரான வாசிம் அக்ரம் கலந்து கொண்டார். இந்த சந்திப்பில் இந்திய கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராக வாய்ப்பு அளிக்கப்பட்டால் என்ன செய்வீர்கள் என்ற கேள்விக்கு வாசிம் அக்ரம், எனக்கு கொல்கத்தாவே போதும் என்று சற்றே நகைச்சுவையுடன் பதிலளித்தார்.

இது தொடர்பாக அக்ரம் தெரிவித்ததாவது எனக்கு வயது 49. குடும்பத்தை பிரிந்து என்னால் நீண்ட காலம் இருக்க முடியாது. மேலும் பயிற்சியாளர் பொறுப்பு என்பது மன அழுத்தம் ஏற்படுத்தக் கூடிய ஒரு பணி. கொல்கத்தா அணியுடன் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்றார்.

பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக வாய்ப்பிருக்கிறதா என்ற கேள்விக்கு பதில் அளித்த வாசிம் அக்ரம், பாகிஸ்தான் அணிக்கு பயிற்சியாளர் பொறுப்பு வகிப்பது பற்றி அவர்கள்தான் வாய்ப்பை வழங்க வெண்டும். இன்னும் அவர்கள் என்னிடம் இது குறித்து கேட்கவில்லை. அவர்கள் கேட்டால் நிச்சயம் சிறந்த பரிசீலனை ஒன்றை மேற்கொள்வேன்- என்றார். (ரி)

## பாகிஸ்தான் - பங்களாதேஷ் இரண்டாவது டெஸ்ட் இன்று



பங்களாதேஷ் எதிர் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்த நிலையில், 2ஆவது டெஸ்ட் மிர்பூரில் இன்று ஆரம்பமாகிறது.

இந்த ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் ருபெல் ஹசைன் விளையாட மாட்டார். அவருக்குப் பதிலாக அபுல் ஹாசன் விளையாடுவார் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித் துள்ளது. குல்னாவில் நடைபெற்ற முதல் டெஸ்டின் 4-வது நாள் ஆட்டத்தின் போது ருபெல் ஹசைனுக்கு காயம் ஏற்பட்டது. இந்தக் காயம் குணமாக 4 வாரங்கள் ஆகும். காயத்துக்கான சிகிச்சை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தை ஒருதடவையேனும் பங்களாதேஷ் சமநிலையில் முடிக்கவில்லை. இந்த நிலையில் முதலாவது டெஸ்ட்டை பங்களாதேஷ் சமநிலைப் படுத்தி சாதனையை நிலை நாட்டியது. இரண்டாவது டெஸ்ட்டில் இருந்து ரூபல் விலகியமை அந்த அணிக்கு பெரும் பின்னடைவாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ரி)

## டோனியின் தலைமை வெற்றிக்குக் காரணம்



சென்னை அணித்தலைவர் டோனியின் தலைமை தான் பெங்களூருக்கு எதிரான வெற்றிக்கு காரணமாக இருந்ததாக சகவீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை எதிர் பெங்களூர் அணிகள் மோதின. பெங்களூருக்காகச் சென்னை நிர்ணயித்த இலக்கு வெறும் 149 ஓட்டங்கள் மட்டுமே. அதிரடித் துடுப்பாட்ட வீரர்களை வரிசையாகக் கொண்ட பெங்களூரை 124 ஓட்டங்களுக்குள் சுருட்டி வெற்றியை எட்டியது சென்னை.

இந்த வெற்றி தொடர்பாக ரெய்னா தெரிவித்ததாவது:-


டோனியின் களத்தடுப்பு வியூகங்கள் ஒவ்வொரு பந்துப்பரிமாற்றங்களுக்கும் வேறுபட்டுக்கொண்டிருக்கும். நிதான வீரர்கள் டோனியின் களத்தடுப்பு வியூகத்தை ஓரளவு எதிர்கொண்டு விளையாடினாலும் அதிரடி வீரர்களால் அது இயலாமல் போய்விடும். எனவே டோனியின் மாறுபட்ட களத்தடுப்பு வியூகங்களும் சென்னையின் வெற்றிக்குக் ஒரு காரணம். கடந்த 8 ஆண்டுகளாக நான் சென்னை அணியில் விளையாடி வருகிறேன். ஒவ்வொரு தொடரிலும் டோனியின் தலைமைத்துவத் திறமை வெளிப்படுகிறது.-என்றார்.


இதே கருத்தை கொல்கத்தாவிற்கு எதிரான வெற்றியின் பொழுது பிராவோ வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ரி)

# 39 வருடங்களின் பின்னர் சாதித்த முர்ரே

ஜேர்மனி முனிச் நகரில் நடைபெற்ற முனிச் ரென்னிஸ் தொடரில் ஆண்டி முர்ரே கிண்ணம் வென்று சாதனை படைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பிரிட்டன் வீரர் ஆண்டி முர்ரே ஜேர்மனியின் பிலிப் கோல்ஸ்கிரெய்பரை எதிர்கொண்டார். ஆண்டி முர்ரே 3-4 என்று பின்தங்கிய நிலையில் இருக்கும் போது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட ஆட்டம் நேற்று மீண்டும் தொடங்கியது. இந்த ஆட்டத்தை முர்ரே 7-6, 5-7, 7-6 என்ற செற்கணக்கில் கைப்பற்றி அசத்தினார். பெடரர், ஜோகோவிச், நடால் இவ்வாறான ரென்னிஸ் ஜாம்பவான்களுக்கு நிகராக ஒப்பிட்டு வந்த முர்ரே சமீப வருடங்களாக தோல்வியின் பாதையிலேயே சென்று கொண்டிருந்தார். நடாலிடம் தொடர் தோல்விகளைச் சந்தித்த பின்னர் தரப்படுத்தலிலும் மிகவும் பின் தங்கிய முர்ரே சர்வதேச தரப்படுத்தலின் பின்னர் பின் தங்க ஆரம்பித்தார். இந்த நிலையில் முர்ரேயின் இந்த வெற்றி அவரின் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அமைந்துள்ளதுடன் களிமண் தரையில் பிரிட்டன் வீரர் ஒருவர் கிண்ணம் வெல்வதும் கடந்த 39 வருடங்களுக்கு பின்னர் இதுதான் முதன்முறையாகும். (ரி)





# பச்சை குத்துவதிலும் பெக்காம் ஜாம்பவான்

இங்கிலாந்து உதைபந்து ஜாம்பவான் டேவிட் பெக்காம், உடல் முழுவதும் பச்சை குத்தியுள்ள தனது படத்தைச் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.

பச்சை குத்திக் கொள்வதில் அலாதி பிரியம் கொண்ட டேவிட் பெக்காம், இதுவரை 30 இடங்களில் பச்சை குத்தியுள்ளார். அவரது உடல் முழுவதும் விதவிதமான வடிவங்களில் பச்சை குத்தப்பட்டுள்ளன. மான்செஸ்டர் யுனைட்டெட் அணிக்காக விளையாடத் தொடங்கிய காலத்தில் இருந்து தனது வாழ்க்கையில் ஏற்படும் முக்கிய நிகழ்வுகளின்போதும், உடலில் பச்சை குத்திக் கொள்வதை வழக்கமாக கொண்டிருக்கிறார்.

1999ஆம் ஆண்டு பெக்காமுக்கு முதல் மகன் புருக்லீன் பிறந்தார். அதன் நினைவாக முதுகுப் புறத்தில் பச்சை குத்திக் கொண்டார். 2002 ஆம் ஆண்டு இளைய மகன் ரோமியோ பிறந்தார். இதற்கு கழுத்துக்குச் சற்று கீழே முதுகுப் புறத்தில் ரோமியோ எனப் பச்சை குத்தினார். மான்செஸ்டர் யுனைட்டெட் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்காக அவர் அணிந்து விளையாடிய உடையின் ஏழாம் இலக்கத்தை குறிக்கும் வகையில் வலது கையில் 7 உருவப்படங்களை பச்சை குத்தினார். 2003ஆம் ஆண்டு டேவிட் பெக்காம் மான்செஸ்டர் யுனைட்டெட் அணியில் இருந்து விலகி, ஸ்பெயினின் ரியல்மட்ரிட் அணியில் இணைந்தார். அப்போது பறக்கும் சிலுவையை வரைந்தார். 2003ஆம் ஆண்டு தனது மனைவி விக்டோரியாவின் பெயரை இடது கையில் வரைந்தார். இந்தியாவையும், இந்து மதத்தின் பெருமையை விளக்கும் வகையிலும் தனது மனைவியின் பெயரை ஹிந்தி மொழியில் வரைந்திருந்தார். 2005ஆம் ஆண்டு பெக்காமுக்கு மூன்றாவதாக ஒரு மகன் பிறந்தார். அந்த குழந்தைக்கு க்ரஸ் என்று பெயரிட்ட பெக்காம், அந்த பெயரையும் முதுகுப் புறத்தில் பச்சை குத்தினார். தொடர்ந்து கடைசி மகள் ஹர்பெரின் பெயரை பெக்காம் தனது கழுத்துப் பகுதியில் பச்சை குத்தினார். 2010ஆம் ஆண்டு கிறிஸ்து இயேசு மீது மிகுந்த பக்தி கொண்ட காரணத்தால் இயேசுவின் உருவப்படத்தை, தனது வயிற்றுப் பகுதியில் வரைந்தார். 2011ஆம் ஆண்டு தனது மனைவி மற்றும் குடும்பத்தினர் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்தும் வகையில் தனது மணிக்கட்டு பகுதியில் 'லவ்' என்று பதிவு செய்துள்ளார். (த–ரி)

# முதலிடத்தில் சங்கா



ஐ.சி.சி. வெளியிட்டுள்ள துடுப்பாட்ட வீரர்களுக்கான புதிய டெஸ்ட் தரவரிசையில் இலங்கையின் நட்சத்திர வீரர் சங்கக்கார தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

சங்கக்காரவுக்கும் இரண்டாம் இடத்தில் உள்ள வில்லியர்ஸுக்கும் இடையில் ஒரு புள்ளி மட்டுமே வித்தியாசம் உள்ளது. 909 புள்ளிகளுடன் குமார் சங் கக்கார 908 புள்ளிகளுடன் வில்லியர்ஸ் இரண்டாம் இடத்திலும் இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் ஐந்தாம் இடத்தில் புள்ளிகளுடன் இந்தியாவின் டெஸ்ட் தலைவர் விராட் இடத்தில் உள்ளார்.

களிலும் உள்ள வீரர்களின் விவரம் வருமாறு:–

முதலிடத்திலும் உள்ளனர். உள்ளார். 774 கோஹ்லி பத்தாம் முதல் பத்து இடங் சங்கக்கார, வில்லி சேலோ மத்தியூஸ், டேவிட் வோர்ணர், டெஸ்ட் அணிகளின் தென்னாபிரிக்கா, தான், இங்கிலாந்து, இந்தியா, மேற்கிந் தேஷ், சிம்பா

யர்ஸ், அம்லா, ஸ்டீவ் சிமித், அஞ் வில்லியம்சன், ரூட், யூனிஸ்கான், விராட் கோஹ்லி.

தரவரிசை வருமாறு: – ஆஸ்திரேலியா, பாகிஸ் நியூஸிலாந்து, இலங்கை, தியத் தீவுகள், பங்களா ப்வே. (த–ரி)



# சபாஷ் சர்பராஸ்

நடப்பு ஐ.பி.எல். தொடரில் எத்தனையோ ஜாம்பவான்கள் இருந்த போதும் அனைவரது பார்வையும் 17வயதான பெங்களூர் அணியின் இளம்வீரர் சர்பராஸ்கான் மீது தான் இருக்கிறது. அவரது அசத்தல் ஆட்டம் முன்னணி வீரர்கள் பலரையும் ஈர்த்திருக்கிறது.

2008 ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாகும்போது சர்பராஸ்கான் சிறுவன் தான். இப்போது சர்வதேச கிரிக்கெட் வீரர்களுடன் ஒரே அறையில் சரிசமமாக நிற்கிறார். 2009ஆம் ஆண்டு ஹரீஸ் கிண்ணத்துக்கான தொடரில் சர்பராஸ்கான் 439 ஓட்டங்களைக் குவித்து சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்திருந்தார். மொத்தம் 421 பந்துகளை எதிர்கொண்டு 56 பவுண்டரிகள், 12 சிக்சர்களை பறக்கவிட்டார் சர்பராஸ். இதற்கு முன்னர் ஹாரீஸ் கிண்ணத் தொடரில் சச்சின் எடுத்த 326 ஓட்டங்களே சாதனையாக இருந்தது. அன்று சச்சினின் சாதனையை முறியடித்த சர்பராஸ் இன்று சர்வதேச கிரிக்கெட் வீரர்களுக்கு நிகராக உயர்ந்துள்ளார். (த–ரி)



# சொல்லியடித்த செயின் சிங்

ஜேர்மனியில் உள்ள ஹன்னோவர் நகரில் சர்வதேச துப்பாக்கி சுடும் போட்டி நடைபெற்று வருகிறது. அமெரிக்காவில் நடைபெற இருக்கும் உலகக்கோப்பை தொடருக்கு முன்னோடியாக இந்தத் தொடர் கருதப்பட்டதால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கி சுடும் வீரர்கள் இதில் பங்கு பற்றினர். இதில் 50 மீற்றர் தூரத்தில் உள்ள குறியை இலக்கு வைக்கும் பிரிவில் இந்தியாவின் செயின் சிங் தங்கம் வென்றார். இதனையடுத்து துப்பாக்கி சுடும் உலகக்கிண்ணத் தொடருக்கு இவர் தகுதிபெற்றுள்ளதுடன், உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்படும் பட்சத்தில் அடுத்த வருடம் பிரேஸிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரிலும் கலந்துகொள்ள முடியும். (ரி)

# நடாலுக்கு கௌரவம்

ஸ்பெயின் நாட்டைச் பிரபல டென்னிஸ் வீரர் ரபேல் நடாலுக்கு மாட்ரிட்டில் உள்ள ஐரோப்பிய பல்கலைக்கழகம் வைத்திய கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

மாட்ரிட் நகரில் நடைபெற்ற இந்த பட்டமளிப்பு விழாவில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர். வைத்திய கலாநிதிப்பட்டம் பெற்ற நடால் உரையாற்றுகையில்;

குடும்பம், சமூகம், ஒழுக்கம், கட்டுப்பாடுகள் ஆகியவை விளையாட்டுத் துறையில் சாதிப்பதிற்கு முக்கிய காரணிகளாக உள்ளன. இவை களின் ஆதரவு இல்லாமல் விளையாட் டுத்துறை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் சிறந்த மனிதனாக உருவாகியிருக்க முடி யாது– என்றார்.

நடால் ஒற்றையர் ஆட்டத்தில் இதுவரை 14 முறை கிண்ணம் வென்றுள்ளதுடன் 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரில் தங்கப் பதக்கம் வென்றுள்மையும் குறிப்பிடத்தக்கது. (ரி)

அதிபர் சேவை
தரம் III
விசேட வகுப்புகள்
புதிய
IIஆம் பிரிவு
T.P. 076 6883394

FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
Embassy ஆல் International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
MR. V. JEGAN (Trained teacher in France
University இல் French
March DELF A1, A2 Exam இல் 100 %
Register now : 0779 789 456 / 021 221 7781
No. 40, Palaly Road, Jaffna.
No.181, 1st Floor.
சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை

SAAMSON
தொலைக்கல்வி டிப்ளோமா
Diploma in English
1. பாடசாலை மாணவர்களுக்கானது (NDES)
2. ஆசிரியர்களுக்கானது (NDET)
3. பல்கலை மாணவர்களுக்கானது (NDEU)
4. அலுவலர்களுக்கானது (NDEO)
5. வெளிநாடு செல்வோருக்கானது (NDEF)
ரூ. 1200
SAAMSON
077 621 4567
021 320 3313

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை

உதயன்

06 மே 2015 புதன்கிழமை

அன்பு மயமாக நில்.
உன் வாழ்வுக்காலம்
அன்பு வழியில்
செல்லட்டும். அதுவே
உனது வாழ்வில்
நீ பெற வேண்டிய
வெற்றி.

— ஓர் அறிஞர்

# மகிழ்ச்சி

ராஜராஜன்

மகிழ்ச்சிஎன்றசொல்லை உச்சரிக்கும்போது அதில் ஏதோவொரு இனம் புரியாத இனிமை சொட்டுகின்றது. வல்லினத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் இந்தச் சொல்லில் அடங்கியிருக்காமை இதற்கான காரணமாக இருக்கலாம். நாம் அனைவருமே மகிழ்ச்சியாக இருக்கத்தான் விரும்புகின்றோம். ஆனால் எம்மில் பலருக்கு இவ்வாறு இருக்க முடிவதில்லை. பணம் கொடுத்து வாங்கும் ஒரு பொருளாக மகிழ்ச்சி இருந்துவிட்டால் அனைவருக்குமே அது சாத்தியமாகிவிடும்.

கவலைகளை மறந்து மகிழ்ச்சியாக வாழ்வது ஒவ்வொருவரது மனதைப் பொறுத்த விடயம்தான். கவலையும், மகிழ்ச்சியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. மனித வாழ்வில் இவையிரண்டும் மாறி மாறி வந்துகொண்டேயிருக்கும்தன்மையும் உடையவை. தொடர்ந்து கவலைகளில் மூழ்கியிருப்பவர்களும், மகிழ்ச்சியை மட்டுமே அனுபவிப்பவர்களும் இந்த உலகில் கிடையாது. இவையிரண்டையும் மாறி, மாறி அனுபவிப்பவர்களையே காண முடிகின்றது.

எமது வாழ்க்கையில் இடம்பெறுகின்ற சின்னச் சின்ன விடயங்கள் கூட எமக்கு மகிழ்ச்சியைத்தர வல்லவையே. இதைப்போன்றே கவலைகளும் அமைந்து விடுகின்றன. வீட்டில் உள்ளவர்களுடன் ஒன்றாக அமர்ந்து உரையாடும்போது கூட எம்முள் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. மனம் விட்டு உரையாடும்போதுமனதில்தேங்கிக் நிற்கும் கவலைகள் எம்மை விட்டு விலகி நிற்கின்றன. அந்த இடத்தை மகிழ்ச்சி வந்து நிரப்பிக் கொள்கின்றது.

கவலைகள் சூழ்ந்த நிலையில் வீட்டில் அடைபட்டுக் கிடப்பதை விடுத்து ஏதோவொரு இடத்தில் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போதும் எமது மனதிலுள்ள பாரம் குறைந்து போவதைஉணர்கின்றோம்.இவற்றின் மூலமாக எமது மனதே சகலதுக்கும் காரணம் என்பது தெளிவாகப் புரிகின்றது.

சில பெண்கள் அது வேண்டும், இது வேண்டும் எனக்கூறித் தமது கணவன்மாரை நச்சரித்தவாறு இருப்பார்கள். இதனால் வீட்டுக்கு வருவதே நரக வேதனை என்று கருதுகின்ற ஆண்கள் இல்லாமலில்லை. இவர்களின் வாழ்விலும் மகிழ்ச்சி ஏற்பட வேண்டுமென்றால் மனைவிமார்கள் மனம் வைக்க வேண்டும்.

சிலருக்குப் பிறர் மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்ப்பதற்கே மனம் பொறுக்காது. ஏதாவது குறை கூறி மற்றவர்களின் மனதை நோகடித்து வேதனையில் ஆழ்த்துவதில் இவர்கள் குறியாக இருப்பார்கள்.

இத்தகைய குணம் படைத்தவர்கள் தமது சொந்த வாழ்க்கையிலும் மகிழ்ச்சியை ஒருபோதுமே அனுபவிப்பதில்லை.

மகிழ்ச்சி என்கின்ற உணர்வு மனிதர்களுக்கு மட்டுமே உரித்தானதல்ல. மிருகங்கள், பறவைகள் ஏன் மரங்கள் கூட அதை வெளிக்காட்டுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நெடுநாள்களுக்கு நீர் கிடைக்காமல் வாடிவதங்கி நிற்கும் மரங்கள் நீர் கிடைத்ததும் தத்தம் மகிழ்ச்சியை சாதாரண மனிதர்கள் புரிந்து கொள்ளாத வகையில் காண்பதாக தாவரவியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மரங்கள் ஓரறிவை மாத்திரமே கொண்டுள்ள போதிலும் அவற்றாலும் தமது உணர்வுகளை வெளிக்காட்ட முடியுமென்பது இதன் வாயிலாகத் தெரிய வருகின்றது. இதைப் போன்றுதான் மிருகங்களும்; பறவைகளும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தமது மகிழ்வைக் வெளிக்காட்டி நிற்கின்றன.

மகிழ்ச்சியின் வெளிப்பாடாக சிரிப்பைக் குறிப்பிடுவார்கள். மனிதர்களுக்கு மட்டுமே சிரிக்கத் தெரியும். இதனால் சிரிக்கத் தெரிந்த மிருகம் என்ற பெயரும் மனிதர்களுக்கு உண்டு. ஆனால் சிரிப்பவர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூற முடியாது. சிரிப்பு மனிதர்களிடத்தில் பல்வேறுபரிமாணங்களில் வெளிப்படுகின்றது.

மகிழ்ச்சியின்போதும், விரக்தி ஏற்படும் போதும் சிலரிடம் வித்தியாசமான சிரிப்புத் தோன்றுகின்றது. சிலர் கோபம் உச்ச நிலைக்குச் செல்லும் போது பற்களை நற நற வெனக் கடித்தவாறு தம்மை மறந்து உரத்த குரலில் சிரித்தவாறு இருப்பார்கள். சிலருக்கு வேதனையில் கூட சிரிப்பு வரும். ஆனால் மகிழ்ச்சியின்போது வெளிவரும் சிரிப்புக்கு ஈடாக ஏனையவற்றை ஒப்பிட்டுக் கூற முடியாது.

ஆனால் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்போது சில விடயங்களை நாம் அனுசரித்துச் செல்ல வேண்டும். அருகருகே அமைந்துள்ள வீடுகளில் வசிக்கும் மாணவர்கள் இருவர் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். பரீட்சை முடிவுகள் வெளியானபோது ஒரு மாணவன் உயர்ந்த சித்தியைப் பெற மற்றவன் சற்றும் எதிர்பாராத வகையில் மோசமான முடிவை எட்டுகின்றான்.

> “மகிழ்ச்சியின் போதும், விரக்தி ஏற்படும் போதும் சிலரிடம் வித்தியாசமான சிரிப்பு தோன்றுகின் றது. சிலர் கோபம் உச்ச நிலைக்குச் செல்லும் போது பற்களை நற நற வெனக் கடித்தவாறு தம்மை மறந்து உரத்த குரலில் சிரித்தவாறு இருப்பார்கள். சிலருக்கு வேதனையில் கூட சிரிப்பு வரும்.”

மகிழ்ச்சியும், துயரமும் கலந்த சூழ்நிலை அருகருகே நிலவுகின்றது. இந்த நிலையில் சித்தி பெற்ற மாணவனின் பெற்றோர் தமது பிள்ளையின் வெற்றியைப் பெரியளவில் கொண்டாடுகின்றனர். ஆடல், பாடல், விருந்து என அந்த வீடே களைகட்டிக் காணப்படுகின்றது. நடு இரவுவரை கொண்டாட்டம் நீடிக்கின்றது. ஆனால் பக்கத்து வீட்டில் மயான அமைதி நிலவுகின்றது. பரீட்சையில் அந்த வீட்டுப்பிள்ளை தோற்றுப் போனதால் முழுக் குடும்பமுமே துவண்டு போய்க் கிடக்கின்றது. அயல் வீட்டாரின் குதூகலமும், ஆரவாரமும் அந்தக் குடும்பத்தினரை மேலும் நோகடித்து வேதனையில் ஆழ்த்துகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அயல் வீட்டார் தமது மகிழ்ச்சியை அளவோடு வெளியிட்டியிருக்கலாம். தமது மகிழ்ச்சி ஆரவாரம் பக்கத்து வீட்டாரை சங்கடத்தில் ஆழ்த்திவிடும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.


இந்த முழு உலகமும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாக உள்ளது. துயரில்லாத வாழ்க்கையை யார்தான் வெறுத்து ஒதுக்குவார்? ஆனால் நாம் நினைப்பது எல்லாமே நடந்து விடுவதில்லை. நடப்பதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை நாம் வளர்த்துக்கொண்டால்எல்லாமேமகிழ்ச்சியாகத்தான் எமது கண்களுக்குத் தெரியும்..



## அருட்தந்தை றொகான் பேணாட் அவர்களின்

# அவங்க பேசமாட்டாங்க

## (நாடகத் தொகுதி)




கே.ஆர்.டேவிட்

அருட்தந்தை றொகான் பேணாட் அவர்களின் 'அவங்க பேசமாட்டாங்க' நாடகத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது. மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் 2010இல் முதல் பதிப்பாக வெளிவந்த இந்தநூல், 2012 இல் இரண்டாவது பதிப்பாக வெளிவந்துள்ளது.

போர் முடிந்து, போர் அவலங்கள் மூட்டம் கொண்டிருந்த சூழலில் முதற்பதிப்பாக வெளிவந்த இந்த நூல் 2012இல் இரண்டாவது பதிப்பாக வெளிவந்திருப்பது இலக்கிய வெளியீட்டுத்துறையில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும் நிகழ்வாக அமைந்துள்ளது. ஐந்து நாடகங்களை உள்ளடக்கிய, அறுபது பக்கங்களைக் கொண்ட இந்த நூல், அருட்தந்தை அ.தேவதாஸன் அவர்களுக்கு சமர்ப்பணம்செய்யப்பட்டுள்ளது. இந்த நூலுக்கான வாழ்த்துரையை அருட்தந்தை சிறிதரன் சில்வெஸ்டரும், அணிந்துரையை தமிழறிஞர் அகளங்கனும் வழங்கியுள்ளனர். அத்தோடு நூலாசிரியர் அருட்தந்தை றொகான் பேணாட் உரையும் இடம்பெற் றுள்ளது.

நாடக மதிப்பீடென்பது இரண்டுவகைப்படும். ஒன்று நாடக ஆற்றுகையை மேடையில் நேரடியாகத் தரிசித்து அதன் உள்ளார்ந்த கூறுகளை அனுபவ ரீதியாகப் பதிவாக்குவது. இரண்டாவது நாடகத்தின் எழுத்துப் பிரதியை மட்டும் வைத்து அறிவியல் ரீதியாகவும் நாடக அனுபவ ரீதியாகவும் மதிப்பீடு செய்வது. இந்த இரு வகைகளில் இம்மதிப்பீட்டு முயற்சி இரண்டாவது வகையைச் சேர்ந்ததாகும்.

கலை இலக்கிய வடிவங்களில் 'போலச் செய்தல்' என்ற நாடகவடிவமே முதலானதும், முதிர்வானதுமென வரலாறுகள் கூறுகின்றன. மக்கள் வேடர்களாகக் காட்டில் வாழ்ந்த காலத்தில் தங்களின் மனங்களில் மேலோங்கும் உணர்வுகளை தங்கள் குழுமத்தினருடன் பகிர்ந்து கொள்வதற்கு 'போலச் செய்தல்' என்ற நாடக முறையையே பயன்படுத்தியுள்ளனர். ஒருவன் ஒரு மானை வேட்டையாடிக்கொண்டு வந்துவிட்டால், அந்த வீரச் செயலை தனது குழுமத்தினருக்கு பின்வருமாறு வெளிப்படுத்தி வந்துள்ளான். மான் ஓடுவது போல் ஓடிக்காட்டுவான், தான்துரத்துவது போல துரத்திக் காட்டுவான், மானுக்குக் கல்லால் எறிவது போல எறிந்து காட்டுவான், மான் விழுவது போல விழுந்து காட்டுவான். மான் கத்துவது போல கத்திக் காட்டுவான் இப்படித்தான் அவர்கள் தங்கள் உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டுள்ளனர். 'போலச் செய்தல்' என்ற இந்த உணர்வுப் பரிமாற்ற நிகழ்வில் உடல் மொழியும், உணர்ச்சி வெளிப்பாடுகளும், ஓசைகளுமே முக்கிய கூறுகளாக இருந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்தப் 'போலச் செய்தல்' என்ற நிகழ்வே பிற் காலத்தில் நாடகமானதாக பதிவுகள் தெரிவிக்கின்றன. 'போலச்செய்தல்' என்றஇந்தஇலக்கிய வடிவத்தில் உடல் மொழிகளும், உணர்வு வெளிப்பாடுகளும், செம்மை பெறாத மொழிப் பிரயோகங்களும் உள்ளடங்கியிருந்தமையால் இவைகள் வரலாற்றுப் பதிவுகள் ஆகுகின்ற வாய்ப்பைப் பெற முடியாமல் போய்விட்டன. மொழி ஓரளவு வளம் பெற்றிருந்த சோழர் காலத்தில் இராஜ ராஜ சோழ மன்னன் பற்றி நடித்துக் காட்டப்பட்ட இராஜராஜேஸ்வரம் என்ற நாடகத்தையே முதலாவது நாடகமென வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். சமகாலத்தில் கலையரசு சொர்ணலிங்கம், ஏ.ரி.பொன்னுத் துரை, பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் மௌனகுரு, குழந்தை சண்முகலிங்கம், வைரமுத்து, அருட்பணியாளர் மரிய சேவியர் போன்றோர் நாடகத்துறைக்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

சிறுகதைத் தொகுதியாக இருந்தாலென்ன, நாடகத் தொகுதியாக இருந்தாலென்ன தொகுதியில் இடம்பெற்றுள்ள ஆக்கங்களின் ஒரு பெயரை அந்தத் தொகுப்புக்கு மகுடமாக்குகின்றதொரு வழமை நூல்வெளியீட்டுத்துறையில் இருந்து வருகின்றதொரு மரபாகும். அந்த வகையில் இந்த நாடகத் தொகுதியில் இடம் பெற்றுள்ள முதலாவது நாடகத்தின் பெயரே இந்தத் தொகுதியின் பெயராக்கப் பட்டுள்ளது. இதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் 'அவங்க பேச மாட்டாங்க' என்ற சொற்பிரயோகமே இங்கு வாசகர்களைப் பிரச்சினைக்குள்ளாக்குவதாகவுள்ளது. பரிச்சயமானதொரு பேச்சுமொழி தொகுதியின் தலைப்பாக வருவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் இங்கு மலையக மக்களின் கிராமியப் பேச்சு மொழியொன்று தலைப்பாக வந்ததே மயக்கத்தை ஏற்படுத்துகின்றது.

'அவங்க பேசமாட்டாங்க' என்ற நாடகத்தை வாசித்த போது இந்த நூலாசிரியர் இந்த நூலுக்கு இந்தப் பெயரை ஏன் தெரிவு செய்தார் என்பதைப் புரிந்து கொண்டேன். 'அவங்க பேச மாட்டாங்க' என்ற நாடகத்தின் கடைசிக் காட்சியை நூலாசிரியர் றொகான் பேணாட் இப்படித்தான் சித்திரித்துள்ளார்.

அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட மூன்று குழந்தைகளின் உடல்கள் தனித்தனியாக ஒவ்வொரு பிரேதப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு பெட்டிகள் மூன்றும் மேடையில் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. இறந்த மூன்று சிறுவர்களின் பெற்றோர்கள் பெட்டிகளுக்கருகே நின்று புலம்புகின்றனர். அதே மேடையில் ஒரு பக்கத்தில் ஒரு அரசியல்வாதி, ஒரு வக்கீல், ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோர் நிற்கின்றனர். அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள், அரசியல்வாதி, வக்கீல், இன்ஸ்பெக்டர் ஆகிய மூவரிடமும் தங்களின் குழந்தைகளுக்கு ஏற்பட்ட அநீதிக்கான நியாயத்தைக் கேட்கின்றனர். அந்த மூவரும் எந்தப் பதிலும் கூறாது ஆணவத்தோடு, நிற்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் அங்கு ஒரு ஊடகவியலாளன் தோன்றுகிறான். அங்கு தோன்றிய ஊடகவியலாளன் உரத்த குரலில் பின்வருமாறு கூறுகிறான்.

"அவங்க பேச மாட்டங்க... அவங்க பேச மாட்டாங்க... இவங்க யாருமே பேச மாட்டாங்க... ஏன் தெரியுமா ..... " அவரது பேச்சுத் தொடர்கிறது.. முடிவில் இந்த அரசு..... பாதுகாப்புத்துறை, சட்டத்துறை... இவங்கெல்லாம் எங்கடை எதிர்காலச் சந்ததியை பாதுகாப்பாங்க என்று நினைக்கிறீங்களா..? இளைஞர்களே, யுவதிகளே, பெற்றோர்களே, சிந்தியுங்க... ஆரோக்கியம் நிறைந்த தலைவர்களை உருவாக்க வேணுமெண்டா... அது நம்மட கையில... உங்கட கையில... ஏன்... எங்க ஒவ்வொருத்தருடைய கையிலையுந் தான் தங்கியிருக்கு.... என்று அந்த ஊடகவியலாளன்கூறுவதாக அமைந்துள்ளது.

தேசிய மயப்பட்டுவிட்ட கொடுமைகளை வெல்லுகின்ற சக்தி ஐக்கியப்பட்ட பொது மக்களிடம்தான் தங்கியுள்ளது என்ற புரட்சிகர கருத்தை அந்த ஊடகவியலாளனின் வடிவில் நின்று அருட்தந்தை றொகான் பேணாட் வெளிப்படுத்தியுள்ளார். கத்தோலிக்க மத துறவி ஒருவர் துணிந்து பகிரங்கமாக இப்படிக் கதைத்திருப்பதை தேசிய விடுதலையின் முதற்புள்ளி என்று கூடச் சிந்திக்க வைக்கின்றது.

அவங்க, மாட்டாங்க, இவங்கெல்லாம், பாதுகாப்பாங்க, சிந்தியுங்க என்ற சொற்பிரயோக வரிசையில்தான் அவங்க பேச மாட்டாங்க என்ற தலைப்பும் அமைந்துள்ளது. அத் தோடு இந்தத் தலைப்பினுள் உள்ளுறைந்திருக்கும் இன்னொரு முக்கிய விடயத்தையும் அவதானிக்க வேண்டும். அந்தச் சம்பவத்தில் கலந்து கொண்டிருக்கும் முக்கியமான மூவர், அரசியல்வாதி, வக்கீல், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோரைக் கௌரப் படுத்துவது போல், அவங்க பேச மாட்டாங்க என்று கூறியுள்ள வாக்கியத்தினுள், மனச் சாட்சியற்ற அதிகாரிகளின் கையாலாகாத்தனத்தை கடுமையாகக் கிண்டல் செய்கின்ற தொரு உணர்வு உள்ளடங்கியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இன்றைய சமுதாயத்தின் உள்ளடக்கத்தையும் அவைகளை நிவர்த்திப்பதற்கான வழிவகைகளையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள கதாசிரியர் அவர் எடுத்துக்கொண்ட கதையின் மையப் பொருளைச் சுட்டி நிற்கின்ற 'அவங்க பேச மாட்டாங்க' என்ற தலைப்பைத் தெரிவு செய்ததில் எந்தத் தவறும் இல்லையென்றே கூறலாம்.

இந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஏனைய நான்கு நாடகங்களும் இந்தச் சமூகத்தின் இயங்கியலில் உள்ள உயிர் நிலைகளையே உணர்த்துபவைகளாய் அமைந்துள்ளன. 'மகத்துவம் தேடும் மகரந்தம்' என்ற நாடகம் பொதுவானதொரு சமூகக் கதையாகவும் இரு முனைகள் அது போதாதா, ஒரு துளி, கறுப்பு ஜுலை ஆகிய மூன்று நாடகங் களும் அரசியல் சார்ந்த நாடகங்களாகவும் அமைந்துள்ளன.

கலை இலக்கிய வடிவங்களில் படித்தவர்கள் தொடக்கம் பாமரர்கள் வரை எடுத்துக் கொண்ட விடயத்தை இலகுவாகவும், தெளிவாகவும் புரியவைக்கக் கூடிய வகையில் உடல்மொழியும் உள்ளடங்கிய ஒரு கலைவடிவமாகவே இந்த நாடகக் கலை அமைந்துள்ளது. இன்றைய கலை இலக்கியச் சூழலில் நாடகக் கலையைப் பின்பற்றுபவர்கள் மிகச்சொற்பமானவர்களாகவே காணப்படுகின்றனர். அந்த வகையில் அருட்தந்தை றொகான் பேணாட்டின் இந்த நாடக இலக்கியத்தைப் பதிவாக்கும் முயற்சி பாராட்டுக்குரியதாகும். தமிழறிஞர் அகளங்கன் தமது அணிந்துரையில் அருட்தந்தை றொகான் பேணாட் பற்றிக் குறிப்பிட்டுள்ள தொரு செய்தியை மீண்டும் ஒரு முறை இங்கு குறிப்பிடுவது அவசியமானதும், பொருத்தமானதுமென நினைக்கின்றேன்.

...........ஈழத்து எழுத்தாளர்கள் எழுதப் பயந்த விடயங்களையெல்லாம் துணிச்சலாக எழுதியிருக்கிறார் ஆசிரியர்....

தமிழறிஞர் அகளங்கன் கூறியதையே நானும் கூறி அருட்தந்தை றொகான் பேணாட் தொடர்ந்தும் பல நாடகப் படைப்புகளைத் தரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

---

# மறைந்த நவாலியூர் வித்தகர் சாம்பசிவம்

## ஒரு பாரம்பரிய விளையாட்டு வீரன்

வடமாகாணத்தில் பாரம்பரிய விளையாட்டுக்களில் தலைசிறந்த வீரராகத் திகழ்ந்தவர் நவாலியூர் நவரட்ணம் சாம்பசிவம்.

ந.சாம்பசிவம் ஆனைக்கோட்டையில் பிறந்து, நவாலிவடக்கு புலவர் வீதியில் மார்ச் மாதம் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

வடக்கின் சிலம்படி வித்தகராக விளங்கியதுடன், பல இளம் வீரர்களுக்கு சிலம்புப் பயிற்சி வழங்கி அவர்களை யாழ்.மாவட்டத்திலும் ஏனைய வெளிமாவட்ட பிரதேசங்களிலும் போட்டிகளில் ஈடுபட வைத்து பல பரிசில்களையும், சான்றிதழ்களையும் விருதுகளையும், பெற்றெடுப்பதற்கு பல்வேறு வகைகளிலும் காரணமான உன்னத மனிதராக சாம்பசிவம் விளங்கினார்.

அவர் சிலம்படி, கொம்பு, தீப்பந்தம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்களில் கைதேர்ந்தவர். 1995 இல் வன்னி மாவட்டத்தில் இடம்பெற்ற மாகாணமட்டப் போட்டியில், சகல போட்டிகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று பரிசில்களைப் பெற்றஒரு வீரராக ந.சாம்பசிவம் விளங்கியதோடு அனைவரது பாராட்டுக்களுக்கும் உரியவராகத் திகழ்ந்தார்.

பிற்காலத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவனத்தில் பாதுகாப்பு மேற்




பார்வையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்று பன்முக சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சாம்பசிவம், சிறந்த வர்ணம் தீட்டும் கலைஞனாகவும் வலம் வந்தார்.

ஆலய சேவைகளில் ஈடுபாடு காட்டியதும், நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலைய் உறுப்பினராகவும் இருந்து

> **1995 இல் வன்னி மாவட்டத்தில் இடம்பெற்ற மாகாண மட்டப் போட்டியில், சகல போட்டிகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று பரிசில்களைப் பெற்றஒரு வீரராக ந.சாம்பசிவம் விளங்கியதோடு அனைவரது பாராட்டுக்களுக்கும் உரியவராகத் திகழ்ந்தார்.**

பல பணிகளை மக்களுக்காக முன்னெடுத்த உன்னத மனிதராக, மக்கள் சேவகனாக தம்மை அர்ப்பணித்து இறுதிவரை மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்த சாம்பசிவம் என்ற மானிடம் மறைந்த அந்த நாளை நினைவு கூருகின்றோம்.

*செ.ரமேஷ், தலைவர்*
*ஹேமலதா ஞாபகார்த்த*
*ச.ச.நி. நவாலி.*

# இலங்கை மத்திய வங்கி

# இன்று கிளிநொச்சிக்கு வருகிறது



## எமது பணிகள் ......

- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அத்துடன் வேளாண்மை வியாபாரங்களுக்கான கொடுகடன் வசதிகள்
- தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- கொள்வனவாளர்களுடன் சந்தை தொடர்புகளை உருவாக்குவதை வசதிப்படுத்துதல்
- மத்திய வங்கிப் பணிகளை வழங்குதல்:
  - நாணயத் தொழிற்பாடுகள்
  - ஊழியர் சேம நிதிய உறுப்பினர் பணிகள்
  - நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை
  - மத்திய வங்கியின் வெளியீடுகள்
  - சமூகப் பொருளாதாரத் தரவுகளைச் சேகரித்தல்
- விழிப்புணர்வை அதிகரித்தல்:
  - பணம், வங்கித்தொழில் மற்றும் நிதி
- நிதி மற்றும் நிதிசார் அறிவின் கிடைக்கும் தன்மையை மேம்படுத்துதல்

2015 மே 6ஆம் நாளன்று காலை 6.30 மணியிலிருந்து பொதுமக்கள் திறப்புவிழாவில் கலந்துகொள்வதற்காக கிளிநொச்சி அரச அதிபர் அலுவலகத்திலிருந்து அறிவியல்நகரிலுள்ள மத்திய வங்கியின் பிரதேச அலுவலகம் வரையான போக்குவரத்து வசதிகள் மத்திய வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# ஏழிசை மாலை- 6







— தென்னவன் —

இசையின் அதிர்வுகள் செவி வழியாக மூளையைச் சென்றடையும் செயற்பாடுதான் ரசனையாக மாறி ரசிகர்களை உருவாக்கு கிறது. இந்த உண்மையை கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏழிசை மாலை எடுத்தியம்பியது.

இசையின் வடிவம் இறைவன் என்பதால், இறைவனே இயற்கை வடிவில் இசை நிகழ்வை ரசிக்க வந்தமை போன்று, நிகழ்வு தொடங்கிய மூன்று நிமிடங்களில் தென்மராட்சி பிர தேசத்தை உலுக்கும் வகையிலான இயற் கையே இடி மின்னல், பெருமழை, மற்றும் சுழல் காற்று ஆகிய வடிவங்களில் ஒன்றிணைந்து தென்மராட்சி பிரதேசத்துக்குள் உள்நுழைந்து இசை நிகழ்வைக் காண வந்தது எனலாம்.

ஏழிசை மாலை பி.ப. 2.30 மணிக்கு ஆரம்ப மாகுமென அறிவிக்கப்பட்டதால், பி.ப. 2.15 மணிக்கு மண்டபம் நிறைந்து மக்கள் வெள் ளம் காணப்பட்டது. குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு விருந்தினர்கள் விழா மண்டபத்துக்குள் அழைத்துச் செல்ல தாமும் உள்நுழைவது போல இயற்கையும் தனது பலத்தைக் காட்டியது. இசை மழை சாவ கச்சேரியில் இடம்பெற, இயற்கையும் அதில் நனைந்து ஒரு மணிநேரம் பெருமழையாய் பொழிந்து தென்மராட்சி பிரதேசத்தையே நனைத்து மகிழ்ந்தது. இவ்வாறு இடி மின்ன லுடன் பெருமழை பொழிந்தது. இது இயற் கையின் இசையை ரசிக்கும் தன்மையை வெளிப்படுத்தியது.

யாழ்.மாவட்டத்தில் இசை ஆர்வலர்கள் பெரு மளவில் இருந்த போதிலும், இசைக் கச்சேரி கள் இடம்பெறுவது குறைவடைந்து வருகின் றதை அவதானிக்கலாம். வட இலங்கை சங்கீத சபையினர் 80 வருடங்களாக யாழ்ப்பாணத் தில் சிறப்புற இயங்குகின்ற போதிலும், நல்லூர் ஆலய பெருந் திருவிழாவின் போது மட்டும் இசைக் கச்சேரிகளைக் காணமுடிகிறது. யாழ். மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான இந்து ஆல யங்கள் உள்ளபோதிலும், அங்கு இசைக் கச் சேரிகள் நடத்தப்படாதமை பெருங்குறையாக உள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இசைமாணிப் பட்டத்துடன் வருடா வருடம் பலர் வெளியேறு கின்றபோதிலும், இவர்களின் இசை நிகழ்வு களை நடத்த அவரவர்களது கிராமத்தில் உள்ளவர்களே விரும்பாதது போல இசை நிகழ்வுகள் மூலம் அவர்களின் திறமைகளை வெளிக் கொணர முன்வருவதில்லை.

முன்னைய காலங்களில் குருகுலங்களில் இசையை முறையாகக் கற்றவர்கள் இந்தியா வில் உள்ள இசைக் கல்லூரிகளில் கல்வியைத் தொடர்ந்து கற்று, அவற்றைத் தமது நாடுகளில் இசை நிகழ்வுகளாக நடத்தி வந்தனர். இந்து ஆலயங்களில் பிரதி வாரமும் அவர்களால் நடத்தப்படும் இசை நிகழ்வுகளைக் கண்டு ரசிக்க பெருமளவு மக்கள் திரண்டு வந்தனர். அன்றைய காலத்தில் தென்மராட்சி பிரதேசத் தில் இசை வளத்தை தமது இனிய குரலால் மேம்படுத்தியவர்களில் இசை ஆசிரியை களான திருமதி பூமணி இராசரத்தினம், திரு மதி சுந்தரவல்லி நடேசன் போன்றோரை தென்மராட்சி பிரதேச இசை ஆர்வலர்கள் இன்னமும் மறக்கவில்லை. இன்றைய காலத் தில் இசையைக் கற்க பல்கலைக்கழகம் உரு வாக்கப்பட்டு வருடாந்தம் பெருமளவு இசை மாணிகள் வெளிவருகின்றனர். அவர்களில் பலர் சங்கீத ஞானத்தை வளர்க்கும் எண்ணத் துடன் அல்லாது, ஏதோ ஒரு பட்டத்தைப் பெற்று தொழில்வாய்ப்பைப் பெறவே ஆரம்ப வகுப்பு களில் சங்கீதத்தை ஒரு பாடமாக கற்கின்றனர். இதன் விளைவே அவர்கள் அரசினால் வழங் கப்படும் சங்கீதத் துறையுடன் தொடர்பில்லாத வேலை வாய்ப்பைப் பெற்று இசைத் துறையை மறந்து விடுகின்றனர். சங்கீதத்துறையில் பல்கலைக் கழகங்களில் வித்துவான் பட்டம் பெறுவோர் இன்றும் இசைத் துறையில் பலரை உருவாக்கும் பொருட்டு வகுப்புகளை நடத்தி வருகின்றனர். அந்த வகையில் தென்மராட்சி பிரதேசத்தில் சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீவாம தேவன் தனது இசைப் பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்.

இசைமாணிப் பட்டம் பெற்ற சிலர் ஆசிரியர் களாக நியமனம் பெற்றாலும், மாணவர்க ளுக்கு அதனை பாடமாக நடத்தி வருகின்ற னரே தவிர, முறையாக அவற்றைக் கற்பிப்ப தில்லையென்ற குறைகளும் காணப்படு கின்றன. இசை அர்ப் பணிப்புடன் கற்பிக்கப்படு வதுமில்லை, கற்பது மில்லை என்ற குறைபாடு நிறையவே காணப்படு வதாக பல்கலைக்கழக நுண் கலைப் பீடத்தினர் வருத்தம் தெரிவிக்கின் றனர்.




இந்த நிலையில், தென் மராட்சி பிரதேசத்தில் பாட சாலைஆசிரியர்கள், மாண வர்கள் மூலம் இசையை மேம்படுத்த வலயக் கல் விப்பணிப்பாளர் சுகிருஷ்ண குமார் புதிய திட்டத்தை உருவாக்கினார். இந்தத் திட்டத்துக்கு பாடசாலை களின் அதிபர்களும், இசை ஆசிரியர்கள் சங்கமும் ஒத்துழைப்பு வழங்கிய தன் பயனாகவே ஏழிசை மாலை என்னும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வை மாதம் ஒரு பாட சாலையினாலும், மூன்று மாதங்களுக்கு ஒருதடவை வலயத்தினாலும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு, கடந்த நவம்பர் மாதம் முதலாவது நிகழ்வு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலை களில் நடத்தப்படும் இசை நிகழ்வுகளில் அந்தப் பாடசாலை ஆசிரியரின் மற்றும் மாணவர்களின் இசைக் கச்சேரியும், அயல் பாடசாலைகளைச் சேர்ந்த இரு ஆசிரியைகள் மற்றும் மாணவர்களின் இசை நிகழ்வுகளை யும் உள்ளடக்கி, இரண்டு மணி நேரத்தில் நிறைவு செய்யவேண்டுமென முடிவு செய் யப்பட்டது.

இதனடிப்படையில் ஏழிசை மாலை 6 இசை நிகழ்ச்சி சாவகச்சேரி நகரசபையின் பொன் விழா மண்டபத்தில் வயலக் கல்விப் பணிப் பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந் தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன், யாழ். பல்கலைக்கழக இசைத்துறைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிருபாசக்தி கருணா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்களின் மங்கல விளக்கேற்றலை யடுத்து, மாணவர்களால் தேவாரம், கிறிஸ் தவ கீதம் மற்றும் ஏழிசை மாலை கீதம் ஆகியவை அடுத்தடுத்து இசைக்கப்பட்டன.

வரவேற்புரையை, வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதனும், தலைமையுரையை வலயக் கல்விப் பணிப் பாளரும் நிகழ்த்தினர்.

இதனையடுத்து வலய சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதகுமாரி ஈழநேச னின் இசைக் கச்சேரி இடம்பெற்றது. இசைக்கு அணிசேர் கலைஞர்களாக வயலின் கோப் பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவு ரையாளர் கே.குருபரன், மிருதங்கம் கொக்கு வில் இந்துக் கல்லூரி ஆசிரியர் சி.துரைராஜா, கஞ்சிரா வயாவிளான் மத்திய கல்லூரி ஆசிரியர் சிவசுந்தரசர்மா, மோர்சிங் எஸ்.செந் தூரன், கடம் கே. ரவிசங்கர், ஓர்கன் எஸ்.நிர் மலன் ஆகியோர் பங்குபற்றினர்.

ஒரு பாடத்துக்கு ஆசிரிய ஆலோசகராக இருப் பவர் அந்தத் துறையில் உள்ளவர்களுக்கு வழிகாட்டியாக திகழவேண்டுமென்பதற்கு திருமதி புனிதகுமாரியின் இசை நிகழ்வு முன்னுதாரணமாகக் காணப்பட்டது. நிகழ் வில் கலந்து கொண்ட அனைவரும் ஒரு ஆசிரிய ஆலோசகர் சுமார் ஒரு மணி நேரம் கச்சேரி நிகழ்த்துவது என்பது சாதாரண காரியமாகத் தெரியவில்லையென புகழ்ந் ததைக் கேட்க முடிந்தது. இவ்வாறான இசை ஆசிரியை ஆசிரிய ஆலோசகராக இருப்பது கல்வி வலயத்தின் இசை வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருக்குமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அடுத்து வலயத்தின் இடைநிலைப் பாடசாலை களில் ஒன்றான மந்துவில் றோமன் கத் தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாண வன் ஸ்ரீ.நிருஷனின் தனி இசை நிகழ்வில் அவர் பாடிய 'அலைபாயுதே கண்ணா' பாடல் பார்வையாளர்களை மெய்சிலிக்க வைக்கும் வகையில் அமைந்திருந்தது.

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவன் உரையாற்றுகையில், அக்குபங்சர் மருத்துவ முறை மூலம் நோய்களைக் குணப்படுத்துவது போல, இசையிலிருந்து வெளிப்படும் அதிர்வு கள் நரம்புகள் மூலம் மூளையைச் சென்ற டைவதால் மனதில் ஏற்படும் நிம்மதி, நோய் களைக் குணப்படுத்தும் வல்லமை கொண் டது எனத் தெரிவித்தார்.

அடுத்து சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாம தேவனின் மாணவிகளான கி.கிருஷ்ண வேணி, நா.சிந்துஜா, நி.ரஜத்தா, இ.இந்துஜா, இ.ராஜமேனகா, பி.மேரி கஜந்தி ஆகியோரின் குழுப்பாடல் ரசிக்கும் வகையில் இருந்தது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிருபாசக்தி கருணா உரையாற்றுகையில்; இசைத்துறையின் வளர்ச்சியில் ரசிகர்களின் பங்களிப்புடன் அனைவரினதும் விழிப்புணர்வின் அவசி யத்தை வலியுறுத்தியதுடன், இசைத்துறை யில் தேர்ச்சி பெறுபவர்கள் இவ்வாறான நிகழ்வுகளை நடத்த முன்வருவார்களாயின் எமது மாவட்டம் விரைவில் இசைத்துறையில் மேம்பாடு அடையும் என்றார்.

அடுத்து மிருசுவில் அ.த.க.பாடசாலை மாண வர்களின் குழுப் பாடலும் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் உரை நிகழ்த்துகையில்; தென்மராட்சி கல்வி வலயம் கல்வி வளர்ச் சியிலும் இணைப்பாட விதான செயற்பாடு களிலும் அண்மைக்காலமாக முன்னேற்றம் கண்டு வருகிறது. அத்துடன் இசை தொடர் பான நிகழ்வுகளை நடத்துவதில் ஆர்வம் காட்டி வரும் வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட அனைவரையும் பாராட்டுகின்றேன். வட மாகாணத்தில் 12 கல்வி வலயங்கள் உள்ள போதிலும் தென்மராட்சி கல்வி வலயம் மட்டும் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி இசைத்துறைக்கு பெருமை சேர்த்து வருகிறது. வடமாகாண கல்விப் பணிப்பாளராகப் பொறுப் பேற்றுள்ள நான், விரைவில் ஏனைய வலயங் களிலும் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி கலைத்துறைக்கு என்னாலான சேவையை வழங்குவேன் எனவும், எனக்கு ஆதரவாக தென்மராட்சி கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான கல்விச் சமூகத்தினர் உதவி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.



# பூதம் சொன்ன கதை

முன்னொரு காலத்தில் காசியில் பணக்கார வியாபாரி ஒருவருக்கு இரண்டு மகன்மார் இருந்தனர். மூத்தவன் அமுதன் மிகவும் நல்லவன்; இரக்க குணமுடையவன். இளையவன் யாசகன் மிகவும் கெட்டவன். பணக்காரர் இறக்கவே, அண்ணனும், தம்பியும் வியாபாரத்தைக் கவனித்து வந்தனர். அவர்கள் இருவரும் ஒரு முறை ஒரு கிராமத்துக்குப் போய்த் தமக்கு வரவேண்டிய ஆயிரம் பவுன்களை வசூலித்தனர்.
அதனை ஒரு பையில் போட்டுக் கொண்டு இருவரும் ஊர் திரும்ப ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தனர். படகுக்காரன் எங்கோ போயிருந்ததால் தம்பியிடம் பண மூடையைக் கொடுத்து விட்டுச் சற்று கண்மூடித் தூங்கினான் அண்ணன். இதற்குள் தம்பி அதே போல ஒரு பண மூடையில் கற்களை வைத்துக் கட்டி எடுத்து ஒளித்துக் கொண்டான்.
சற்று நேரத்திற்கெல்லாம் படகுக காரன் வரவே, தம்பி தனது அண்ணனை எழுப்பி அண்ணனோடு படகில் ஏறி உட்கார்ந்தான். படகும் கிளம்பியது. படகு நடு ஆற்றில் போகும் போது தம்பி ஒரு மூடையை எடுத்து ஆற்றில் நழுவ விட்டு, ஐயோ அண்ணா பண மூடை ஆற்றில் விழுந்து விட்டதே, எனக் கூறினான்.



போனால் போகட்டும். அது நமது பணமாக இருந்தால் நமக்கே கிடைக்கும், எனக் கூறினான் அமுதன். தம்பியும் தான் தந்திரமாக ஆயிரம் பவுன்களை தனதாக்கிக் கொண்டதாக எண்ணி மகிழ்ந்தான். ஆனால், அவன் அவசரத்தில் ஆற்றில் போட்டது பண மூடையைத் தான். கற்களை வைத்துக் கட்டிய மூடைதான் அவனிடம் இருந்தது. அந்த ஆற்றில் ஒரு பூதம் இருந்தது. தம்பி மூடையை ஆற்றில் போட்டதும் ஒரு மீனை உடனே விழுங்கச் சொல்லி கட்டளை இட்டது அது. மீனும் அந்தப் பூதம் சொன்னபடி செய்தது.
பூதம் தம்பி செய்த மோசடியை புரிந்து கொண்டது. எனவே, அந்தப் பண மூடையை எப்படியும் அண்ணனிடம் சேர்த்து விட எண்ணி மூடையை விழுங்கிய மீன் எங்கும் போகாதபடி காவல் காத்தது. அண்ணனும், தம்பியும் காசிக்கு வந்து தமது வீட்டை அடைந்தனர். தம்பி வீட்டில் தனியாக ஓரிடத்தக்குப் போய் தன்னிடமிருந்து மூடையை அவிழ்த்துப் பார்த்தான். அதில் கற்கள் இருப்பதைக் கண்டு, ஐயோ! நான் அண் ணனை ஏமாற்ற எண்ணி நானே ஏமாந்தேனே... என எண்ணி மனம் புழுங்கினான்.
அன்று சில மீனவர்கள் ஆற்றில் வலை போட்ட போது பூதம் மீனவராக மாறி அந்த மீனை எடுத்துக் கொண்டு அண்ணனின் வீட்டுக்குச் சென்றது. அண்ணன் மீனவர் கேட்டபடி ஒரு பவுனைக் கொடுத்து அந்த மீனை வாங்கிக் கொண்டான். அதனைத் தனது மனைவியிடம் கொடுக்கவே அவள் அதனை இரண்டாக நறுக்கினாள். அதன் வயிற்றிலிருந்து பண மூடை வெளியே விழுந்தது. அதைக் கண்டு திகைத்தான் அமுதன். இது நமது பணமே. இதனை நம்மிடம் கொடுக்கவே இந்த மீனவன் வந்திருக்கிறான். இவனுக்கு எப்படி இது தெரிந்தது? என எண்ணி ஆச்சரியப்பட்டான். அப்போது, அமுதா... நீ மிகவும் நல்லவன். இந்த ஊரில் உள்ள ஏழைகளுக்கு நிறைய உதவிகளைச் செய்கிறாய். ஒரு முறை நீங்கள் படகில் சென்றபோது உனது கையில் இருந்து நழுவிய உணவுப் பொட்டலத்தை உண்டேன். அது எனக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்தது. அதனால் தான் உன்னுடைய பணமூடையை உனது தம்பி தவறுதலாக தூக்கி வீசிய போது அதை விழுங்கும்படி இந்த மீனுக்கு கட்டளை கொடுத் தேன். அந்த மீனையும் எடுத்துக் கொண்டு வந்தேன். நல்லவர்களுக்கு எல்லாமே நல்லதாய் தான் நடக்கும்... என்று சொல்லி மறைந்தது. அதைக் கேட்டு மகிழ்ந்தான் அமுதன். மறக்காமல் அதில் பாதியான ஐநூறு பவுன்களைக் தம்பியிடம் கொடுத்தான். தம்பியும் தனது அண்ணனுடைய கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினான்.

## இது தெரியுமா?

- அரசர்க்குரிய பத்து
  1.படை 2.குடை 3.கொடி 4.முரசு 5.புரவி 6.களிறு 7.தேர் 8.தார் 9.மாலை 10.செங்கோல்
- இராசி பன்னிரண்டு
  1.மேடம் 2.இடபம் 3.மிதுனம் 4.கடகம் 5.சிங்கம் 6.கன்னி 7.துலாம் 8.விருச்சிகம் 9.தனுசு 10.மகரம் 11.கும்பம் 12.மீனம்
- எட்டுத்தொகை நூல்கள்
  1.நற்றிணை 2.ஐங்குறு நூறு 3.பரி பாடல் 4.குறுந்தொகை 5.பதிற்றுப் பத்து 6.கலித்தொகை 7.அக நானூறு 8.புறநானூறு.
- ஐம்பெருங்குரவர்
  1.அரசன் 2.குரு 3.தந்தை 4.தேசிகன் 5.மூத்தோன்
- ஐம்பெருங்குழு
  1.அரசர் 2.அமைச்சர் 3.புரோகிதர் 4.ஒற்றர் 5.தூதுவர்

# விவேகானந்தரின் விவேக மொழிகள்



யார் ஒருவர் எதைப்பெறுவதற்குத் தகுதி உடையவராக இருக்கிறாரோ, அதை அவர் பெற விடாமல் தடுத்து நிறுத்துவதற்கு இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எந்தச் சக்தியாலும் முடியாது.
ஆயிரம் முறை தோல்வியுற்றாலும் லட்சிய நோக்கிலிருந்து பின்வாங்காதீர்கள். போராட்டங்களையும் தவறுகளையும் பொருட்படுத்தாதீர்கள். லட்சியப் பாதையில் வீறுநடை போடுங்கள்.
அறிவு வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிமுறை தான் இருக்கின்றது. நம்முடைய மனத்தை ஒரு முகப்படுத்துவதே அந்த வழி.
எதையும் வெறும் பரபரப்புடன் மட்டும் அணுகுவது கூடாது. தூய்மை, பொறுமை, விடா முயற்சி என்ற இந்த மூன்றினையும் பின்பற்றினால் வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடிக்கலாம்.
ஒரு நல்ல கருத்தை எடுத்துக் கொள்ளுங்கள் – அந்த ஒரு கருத்தையே உங்கள் வாழ்க்கை மயமாக்குங்கள். அந்தக் கருத்தையே நாளும் கனவு காணுங்கள். அந்தக் கருத்தை முன்னிறுத்தியே வாழ்க்கையை நடத்துங்கள். வாழ்க்கை சொர்க்கமாகும்.
எழுந்திருங்கள்! விழித்துக் கொள்ளுங்கள். இனியும் தூங்க வேண்டாம். எல்லாத் தேவைகளையும் எல்லாத் துன்பங்களையும் போக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது.இதைப் பூரணமாக நம்புங்கள். கடலைக் கடக்கும் இரும்பு போன்ற மன உறுதியும், மலைகளையே துளைத்துச் செல்லும் வலிமை மிக்க தோள்களுமே, எமக்குத்தேவை. வலிமைதான் வாழ்வு; பலவீனமே மரணம். மிகப்பெரிய இந்த உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள்.

# எங்கள் ஆசிரியர்..!




*அகர முதல சொல்லித் தந்த எங்கள் ஆசிரியரே...*
*அடக்கம்தனை அறிய வைத்த எங்கள் ஆசிரியரே...*
*ஆசை தீர பாடுகிறோம் உங்கள் புகழையே..!*
*இனிய தமிழ் பயிற்றுவித்த எங்கள் ஆசிரியரே...*
*இனிய கதை சொல்லித்தந்த எங்கள் ஆசிரியரே...*
*ஈன்ற தாயைப் போல நாங்கள் வணங்குவோம் உம்மையே..!*
*ஐம்புலனும் அறிவியலை அறியவைத்த எங்கள் ஆசிரியரே...*
*ஐயங்களை நீக்கி வைத்த எங்கள் ஆசிரியரே...*
*ஒழுக்கம் கற்று நிற்கின்றோம் உங்கள் அன்பு முறையிலே..!*
*உண்மைதனை எடுத்துரைத்த எங்கள் ஆசிரியரே...*
*உலகம் கேட்க சொல்லிடுவோம் உங்கள் பெருமையையே..!*

## “கொட்டியாபுரத்து சிங்கம்” நூல் வெளியீடு









மருத்துவர் சம்பூர் அ. சதீஸ்குமார் எழுதிய கொட்டியாபுரத்து சிங்கம் என்ற வரலாற்று நூல் வெளியீட்டு விழா கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மண்டபத்தில் 'நீங்களும் எழுதலாம்' ஆசிரியர் கவிஞர் தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண கல்வி அமைச்சா சி. தண்டாயுதபாணி மங்கல விளக்கேற்றுவதையும், கவிஞர் தனபாலசிங்கம் தலைமையுரை ஆற்றுவதையும், நூலின் முதல் பிரதியை திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் வ.கலைச்செல்வனுக்கு நூலாசிரியர் வழங்குவதையும், இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (40)

## பெட்டகம் நூல் வெளியீட்டு விழா



சக்தி தொலைக்காட்சி ஊடகவியலாளர் உமா சந்திரா பிரகாஷ் எழுதிய பெட்டகம் என்ற யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வியல் சார்ந்த கட்டுரைத் தொகுதியின் வெளியீட்டு விழா, கடந்த 29ஆம் திகதி மாலை கொழும்பு -02 இல் அமைந்துள்ள கப்பிற்றல் மகாராஜா நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வேந்தரும் தகைசார் வாழ்நாள் பேராசிரியருமாகிய பேராசிரியர்



சி.பத்மநாதனும், கௌரவ விருந்தினராக மூத்த ஊடகவியலாளர் அன்னலட்சுமி ராஜதுரையும் கலந்து கொண்டனர். நூலின் ஆய்வுரையை பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் கோதை நகுலராஜா மேற்கொண்டார். நூலின் முதற்பிரதியை பிரதம விருந்தினர் வெளி யிட்டு வைக்க, இலங்கை தமிழ் மாதர் சங்கத் தலைவர் நீலா தயாபரன் பெற்றுக்கொண்டார். அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன், கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன், கலாலயா இயக்குநர் தயா மகிந்த, மற்றும் ஊடகவியலாளர்கள், ஒலிபரப்பாளர்கள் எனப்பலர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.




வட இலங்கைச் சங்கீத சபை நடத்திய சித்திரை மாத கலை நிகழ்வில் புகழ் பெற்ற சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரனின் கர்நாடக இசைக் கச்சேரி சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. இவருக்கு பக்க வாத்தியக் கலைஞர்களாக,வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம்– என்.சிவசுந்தர சர்மா, கடம்– கு.ரவிசங்கர், முகர்சிங்– சி.செந்தூரன் ஆகியோர் அணி சேர்த்தனர்.








## ‘தடம் பதித்த தமிழ்த் தேசியம்’ வெளியிடப்பட்டது

'தடம் பதித்த தமிழ்த் தேசியம்' என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் எழுதிய இந்த நூலின் வெளியீட்டு விழாவுக்கு சட்டத்தரணி கனக மனோகரன் தலைமை வகித்ததுடன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம், பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், கட்சி சார்ந்தோர், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் பங்குபற்றுவர் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் இயக்குநர் செ.சந்திரகாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர் எனவும் ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. (10)



# நீங்கள் எப்படிப்பட்டவர்?

இணையவன்

மனிதனை கரிக்கு (அடுப்பு எரிக்கும்) ஒப்பிடலாம். இரண்டும் எரிந்த பிறகு மீதம் இருப்பது சாம்பல் மட்டுமே . அதேபோல் கரியைத் தொடர்ந்து காற்றுப் புகாதவாறு பலவித அழுத்தங்களுக்கு உட்படுத்தினால் வைரக்கற்களாக மாறிவிடுகின்றது. அதை பட்டை தீட்டி மெருகு ஊட்ட மெருகு ஊட்ட பளிச்சென்று பல வண்ணங்களுடன் பிரகாசிக்கும் வைரமாக ஒளி வீசும் அதிசயத்தை நாம் பார்த்திருக்கிறோம். அது போல சாதாரண மனிதன் தன்னுடைய தொடர் முயற்சி, கடின உழைப்பு , கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றைப் பின்பற்றும் போது அவன் தன்னம்பிக்கை கொண்ட மனிதனாக மாறிவிடுகின்றான். மேலும் அவன் ஆற்றலையும், திறமையையும் அறிவையும் கொண்டு மூளையை தீட்ட தீட்ட 'வெற்றி மனிதனாக' ஜொலிக்க ஆரம்பிக்கிறான். வைரம் எப்போதும் தன்னையொரு சாதாரண கரியாகவே நினைக்கும். அதன் மதிப்பு அதற்குத் தெரியாது. ஆனால் மற்றவர்களுக்கு அது ஒரு விலை மதிக்க முடியாத பொக்கிஷமாகத் தெரியும். அது போல வெற்றி பெற்ற எந்த ஒரு மனிதனும் எத்தகைய பெரிய வெற்றி பெற்றாலும் அதன் பெருமை அவனுக்குத் தெரியாது. எப்போதும் போன்று அமைதியும் சாந்தமுமாகவே இருப்பான். ஏனென்றால் அவன் எப்போதும் தன்னை ஒரு சாதாரண மனிதனாகவே நினைத்துக் கொள்வான். ஆனால் அவனைச்சுற்றி இருப்பவர்கள் தான் அவனின் பெருமையையும் திறமையையும் தெரிந்து கொண்டு அவனைப் பாராட்டிப் பேசுவார்கள். வெற்றிபெற்ற மனிதனின் மதிப்பு, அவனை விட மற்றவர்களுக்குத் தான் அதிகம் தெரியும். ஏனென்றால் அவர்கள் அனைவரும் முயற்சி செய்து தோற்றவர்கள். கரியை வெப்பப்படுத்தினால் கறுப்பு நீங்கி சிவப்பாக ஒளி தரும். அதேபோல் மனிதனின் முயற்சி அவனை வெற்றி மனிதனாக மாற்றி விடுகின்றது. சூடு பெறாத கரி எப்போதும் மங்கித் தான் இருக்கும். முயற்சி இல்லாதவனின் திறமை எப்போதும் மங்கித்தான் இருக்கும்.

**மனிதனின் முயற்சி அவனை வெற்றி மனிதனாக மாற்றிவிடுகின்றது. சூடு பெறாத கரி எப்போதும் மங்கித் தான் இருக்கும். முயற்சி இல்லாதவனின் திறமை எப்போதும் மங்கித்தான் இருக்கும்.**

ஒருநாள் கரிக்கட்டைகள் எல்லாம் தம் முடைய தலைவனைத் தேர்ந்தெடுக்க கூடின. அப்போது சம்பந்தமே இல்லாத 'வைரம்' ஒன்றும் அவற்றுடன் சேர்ந்திருந்தது. அதனை சுற்றியிருந்தவை 'இது கரிக்கட்டைகளின் கூட்டம் . இங்கு உனக்கு இடமில்லை' என்று அந்த வைரத்தை விரட்டிக் கொண்டிருந்தன. ஆனால் அதுவோ 'ஐயா, நானும் கரிக்கட்டை தான்' என்று மன்றாடியது. அப்போது அங்கு வந்த விவரம் தெரிந்த ஒரு கரிக் கட்டை அந்தக் கூட்டத்தைப் பார்த்து , 'கரிக்கட்டைகளே, நாம் இங்கு கூடியிருப்பது எதற்கு என்றால் ... நாம் எப்படி வைரமாக ஜொலிப்பது என்று அறியத் தான். அதாவது இதைப்போல.. என்று அந்த வைரத்தைப் பார்த்துச் சொன்னது. இதுவும் இதற்கு முன் நம்மைப் போல ஒரு கரிக்கட்டையாகத் தான் இருந்தது' என்று சொல்ல அனைத்தும் ஆச்சரியமாக அதனைப் பார்த்தன. இதுவே,' இன்று நம் அதிர்ஷ்டம். இப்படிப்பட்ட வைரம் நமக்கு உதாரணமாகக் கிடைத்திருக்கிறது. இந்த வைரத்தையே நம்முடைய தலைவனாக்கி , அதன் வழியில் பின்பற்றி நாம் எல்லோரும் இந்த சாதாரண கரிக்கட்டையிலிருந்து வைரமாக மாற முயற்சிப் போம் ' என்று கூறியது. இது தான் மனித வாழ்க்கையின் கொள்கை. அழுத்தத்துக்கு உட்பட்ட கரியானது ஜொலிக்கும் வைரமாக மாறுவது போல மனிதனே! நீயும் முயற்சி, உழைப்பு கொண்டு அனைவரும் போற்றும் வெற்றி மனிதனாக மாற முடியும். உன்னால் அது முடியும். நீங்கள் சாதாரண கரிக்கட்டைகள் அல்ல எப்போதும் உறுதியாக ஒளிவீசும் வைரக்கற்கள்! இடைவிடாது உழையுங்கள்! முயற்சியைக் கைவிடாதீர்கள்!

உங்களது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக் கனவினை நனவாக்கும்
இலங்கை மத்திய வங்கியின்

"சௌபாக்கியா"

நீங்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகளுடன் தொடர்புபட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியொன்றினை ஆரம்பிக்க உத்தேசித்து இருப்பின் அல்லது தற்பொழுது அத்தகையதொரு தொழில் முயற்சியில் ஈடுபடுபவராக இருப்பின் அவ்வியாபாரத்தின் உற்பத்தி மட்டத்தினை அல்லது சேவை இயலளவை மேலும் அதிகரிக்க,

8% வருட வட்டியில்
5 வருடங்களில் மீள செலுத்தக்கூடிய
25 மில்லியன் ரூபாய் வரையிலான தொகையினை கடனாக

இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் "சௌபாக்கியா" கடன் திட்டத்தின் கீழ்,
கீழே குறிப்பிடப்படும் வங்கிகளில் பெறமுடியும்

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- ஹற்றன் நஷனல் வங்கி
- கொமர்ஷல் வங்கி
- சம்பத் வங்கி
- பிரதேச அபிவிருத்தி வங்கி
- செலான் வங்கி
- லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி
- சணச அபிவிருத்தி வங்கி
- தேசிய அபிவிருத்தி வங்கி
- டி.எப்.சீ.சீ வங்கி
- டி.எப்.சீ.சீ வர்தன வங்கி
- நேஷன் ட்ரஸ்ட் வங்கி
- பான் ஏசிய வங்கி
- யூனியன் வங்கி
- எச்.டி.எப்.சி வங்கி


2015 மே மாதம் 8ஆம் திகதியன்று கிளிநொச்சியில்
திறந்து வைக்கப்படவுள்ள இலங்கை மத்திய வங்கியின் புதிய பிரதேச அலுவலகத்திலும்
இக்கடன் திட்டம் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விபரங்களுக்கு,
பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி, மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி இலக்கம் : 2477447, 2477437, தொலைநகல் : 2477733, 2477734

# சாஹித்திய இரத்தினம் விருது பெற்ற கவிஞர் இ.முருகையன்

செ.மகேஸ்



விஞ்ஞானம், கலை ஆகிய இரண்டிலும் பட்டதாரியான இ.முருகையன் புகழ் சிறந்த நாடறிந்த கவிஞராவார். சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

1935ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி தந்தையார் இராமுப்பிள்ளை அவர்களுக்கும் தாயார் செல்லம்மாவுக்கும் மகனாகப் பிறந்தார். இவரது தந்தையார் ஒரு புகழ் பெற்ற தமிழாசிரியராவார். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வியை ஆரம்பித்தார். தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவனாகத் திகழ்ந்தார். வித்துவான் க.கார்த்திகேசு அவர்களிடம் தமிழ் பயின்றவர்.

12 வயதிலேயே கவி புனையும் ஆற்றல் பெற்றவர். இலக்கிய ஈடுபாட்டுடன் கல்வியில் உயர்ந்தார். கணிதம், பௌதிகம், ஆங்கிலம், தமிழ் ஆகியதுறைகளில் விசேட ஈடுபாடும் நிறைவான பயிற்சியும் பெற்றவர். 1985இல் முதுகலைமாணிப் பட்டம் பெற்றார். இவரது புலமையைக் கௌரவப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இவருக்கு கலாநிதிப் பட்டத்தை வழங்கியது. 1956இல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய இவர் இலங்கை கல்விச் சேவை அதிகாரியாகவும், இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களப் பிரதம பதிப்பாளராகவும், கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும் பணியாற்றினார். முல் லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கல்விப் பணிப்பாளராகச் சிறந்திருந்தவர்.

1986ஆம் வருடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுதுணைப் பதிவாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

கவிதையாற்றலின் மூலம் தமிழ் இலக்கியத்துறையில் தன்னை அறிமுகப்படுத்தியவர், நாடகம் கட்டுரை ஆகிய துறைகளிலும் தனது திறமையை வெளிக்காட்டினார். இவரது ஆக்கங்கள் ஈழத்துச் சஞ்சிகைகளிலும் பத்திரிகைககளிலும் வெளிவந்ததோடு இந்திய இதழ்களான கல்கி, கலைமகள், தாமரை, தீபம், சரஸ்வதி, எழுத்து ஆகியவற்றிலும் வெளிவந்தன.

இலங்கை வானொலியில் இவரது கவிதைகள் பலவும் ஒலிபரப்பப்பட்டுள்ளன. இவர் வானொலி நாடகங்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். அவை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட காலங்களில் அவரது பெயர் வானொலி நாடக விற்பன்னர் எனப் பிரசித்தம் பெற்றிருந்தது.

இவரது ஆக்கங்கள் தனிக்கவிதை, நெடும்பாட்டு, பாநாடகம் என்ற வகையில் பிரகாசித்தன. வந்து சேர்ந்தன, தரிசனம், கோபுரவாசல், உண்மை, மேற்பூச்சு, சங்கடங்கள், வெறியாட்டு என்பன அவரது நூலுருப் பெற்ற நாடகங்களாகும். குற்றம் குற்றமே, இருதுயரங்கள், கடூழியம், அப்பரும் சுப்பரும் என்பன இவரது மேடைநாடகங்களாகும். ஒருவரம், நெடும்பகல், ஆதிபகவன், அது அவர்கள், மாடும் கயிறுகள் அறுக்கும், நாங்கள் மனிதர், ஒவ்வொருபூவும் பிள்ளையும் என்பன இவரது கவிதை நூல்களாகும். பேராசிரியர் க.கைலாசபதி அவர்களுடன் இணைந்து கவிதை நயம் எனும் இலக்கிய ஆய்வு நூல் ஒன்றையும் வெளியிட்டார்.

மேடைக் கவிஞர்களுக்குக் களமமைத்துத் தலைமைக் கவிஞராய்த் திகழ்ந்து இளங் கவிஞர்களை ஊக்குவித்து இலக்கியப் பணி ஆற்றியவர். இவரது சக இலக்கியநண்பர்களான அ.ந.கந்தசாமி, நீலாவணன், மஹாகவி, இராஜபாரதி, சில்லையூர் செல்வராசன், அண்ணல், புரட்சிக்கமால், ஜின்னாஹ் ஷரிபுத்தீன் போன்றோருடன் தமது கவிஞர் உறவைப் பேணிவந்தார்.

ஈழத்து மெல்லிசைப் பாடலாசிரியராகவும் திகழ்ந்த கவிஞர் முருகையன் அவர்களின் பாடல் எஸ்.கே.பரா, கோகிலா சிவராஜா ஆகியோரால் பாடப்பட்டது. அதனை எம். கே. றொக்சாமி அவர்கள் இசையமைத்திருந்தார் அப்பாடல் இது.

***கங்கையாளே***  
***கங்கையாளே***  
***காடு கழுவிவரும்***  
***கங்கையாளே***  
***எங்குமோடி எங்குமோடி***  
***ஈழம் குளிர வைக்கும்***  
***கங்கையாளே***  
***நுவரெலியா முதலான***  
***உயர மலை***  
***பாய்ந்து நடைபயிலும்***  
***கங்கையாளே***  
***தவறாத வளமுடைய***  
***தண்மைபொழியும்***  
***எங்கள் கங்கையாளே***  
***கங்கையாளே***  
***கங்கையாளே***  
***கந்தளாயும் மூதூரும்***  
***காத்து வரவேற்கின்ற***  
***கங்கையாளே***  
***வந்து சேர்வாய்***  
***திருமலைக்கே***  
***மாகடலில் போயிறங்கும்***  
***கங்கையாளே***  
***கங்கையாளே***  
***கங்கையாளே***  
***காடு கழுவிவரும்***  
***கங்கையாளே***  
***எங்குமோடி எங்குமோடி***  
***ஈழம் குளிர வைக்கும்***  
***கங்கையாளே***

இலங்கையில் ஓர் எழுத்தாளனுக்கு வழங்கப்படுகின்ற அதியுயர் விருதான சாஹித்திய இரத்தினம் விருது 2007 ஆம் ஆண்டு கவிஞர் முருகையன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

கவிஞருக்குக் கவிஞர் எனப் போற்றப்பட்ட முருகையன் அவர்கள் உருவத்துக்கும் உள்ளடக்கத்துக்குமுள்ள நுட்பமான இயங்கியல் ரீதியான உறவைத் தெளிவுற உணர்ந்து கவிதை படைப்பவர் எனப் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் அவரது கவிதை வளம் குறித்து விதந்துரைத்துள்ளார்.

கவிஞர் முருகையன் தனது 74 வது வயதில் 27 ஜூன் மாதம் 2009ஆம் வருடம் காலமானார். அவரது இலக்கியப் பணிகளால் விளைந்த முத்துக்கள் தமிழ் உள்ளவரையும் அவரது பெயரைப் பறை சாற்றி வாழும்.

## 'வாழ்வு தந்த வாஸ்' வரலாற்று நாடகம்

### சனி, ஞாயிறு தினங்களில்



அண்மையில் மேடையேற்றப்பட்ட திருப்பாடுகளின் நாடகத்திற்கு பின்னராக திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மற்றுமோர் மாபெரும் தயாரிப்பாக இலங்கையின் புனிதராகிய ஜோசப் வாஸ் அடிகளாரின் யாழ்ப் பாணத்தை மையமாகக் கொண்ட வரலாற்றை எடுத்துக்காட்டும் வாழ்வு தந்த வாஸ் என்னும் வரலாற்று நாடகம் எதிர்வரும் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு தினங்களில் ) மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

இரு நாள்களும் இலவசமாக ஆற்றுகை செய்யப்படவுள்ள இந்த நாடகத்துக்கான எழுத்துரு, நெறியாள்கையை மன்றத்தின் பிரதி இயக்குநரான யோ.யோண்சன் ராஜ்குமார் மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் திருத்தூதர் என அழைக்கப்பட்டஜோசப் வாஸ் அடிகளார் இவ்வாண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் காலிமுகத்திடலில் வைத்து புனிதராகத் திருநிலைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## 'குறை ஒன்றும் இல்லை' நூல் வெளியீட்டு விழா

தலைமன்னாரைச் சேர்ந்த எழுத்தாளர் எம்.சிவானந்தன் (துறையூரான்) எழுதிய குறை ஒன்றும் இல்லை நூல் நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை வெளியிட்டு வைக்கப்பட்டது.

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் மன்னார் கலையருவி நிலையத்தில் குறித்த வெளியீட்டு விழா நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் கலந்து கொண்டார்.

தலைமையுரையை அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார், வெளியீட்டுரையை கவிஞர் மன்னார் அமுதனும் ஆய்வுரையை நாவலாசிரியர் எஸ்.ஏ.உதயனும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர், மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மற்றும் நூலாசிரியர் இணைந்து நூலை வெளியிட்டு வைத்தனர். இதன் போது எழுத்தாளர்கள், கல்விமான்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (56)